விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு + XVI
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 கார்த்திகை 22 ஞாயிற்றுக்கிழமை (08.12.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 354

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

### நிலவும் மழையுடனான காலநிலையால்

# ஒரு வகையான காய்ச்சல் நாட்டில் பரவி வருகின்றது

### எச்சரிக்கையாக இருக்குமாறு சுகாதாரப் பிரிவினர் அறிவிப்பு

(கொழும்பு)நாட்டில் நிலவும் மழையுடனான காலநிலையால் ஒரு வகையான காய்ச்சல் பல பாகங்களில் பரவி வருகின்றது என சுகாதாரப் பிரிவினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இருமல், வயிற்றுவலி, தலைவலி, உடல்சோர்வு என்பன இந்தக் காய்ச்சலின் அறிகுறிகளாகும்.

இவ்வாறான அறிகுறிகள் தோன்றினால் உடனடியாக சிகிச்சை பெறுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (15ஆம் பக்கம் பார்க்க)

ஊர்காவற்றுறை

## பிரதேச தவிசாளர் பொலிஸாரால் கைது

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை பிரதேச சபை தவிசாளர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாரின் பணிக்கு இடையூறு விளைவித்தமை தொடர்பில் நேற்று ஊர்காவற்றுறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட தவிசாளரை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ம-3,10)

### நாடு முழுவதும் மழையுடனான காலநிலையால்

## இலட்சக்கணக்கான மக்கள் பாதிப்பு

### வடக்கு, கிழக்கில் கடும் பாதிப்பு

(கொழும்பு)

நாடு முழுவதும் நிலவும் மழையுடனான காலநிலையால் இலட்சக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

மேலும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கடும் பாதிப்பு நிலவுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் உதவி பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி இதனைத் தெரிவித்துள்ளார்.

நலன்புரி முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளவர்களுக்கு தேவையான நிவாரணங்களை வழங்கும் பணிகள் தேசிய அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தால் இடம்பெறுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் 51 ஆயிரத்து 223 15

### கொழும்பு துறைமுக நகரின்

## 269 ஹெக்டேயர் நிலப்பகுதி

### இலங்கையின் நிலப்பகுதியாக பிரகடனம்



(கொழும்பு)

கொழும்பு துறைமுக நகரின் 269 ஹெக்டேயர் நிலப்பகுதி நேற்று பிற்பகல் உத்தியோகபூர்வமாக இலங்கையின் பூமிப் பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இந்நாட்டுக்கு புதிதாக இணையும் இந்த நிலப்பரப்பிற்காக நினைவு முத்திரை ஒன்றும் வெளியிடப்பட்டுள்ளது. 15

## மழையுடனான வானிலை வடக்கில் அதிகரிக்கும்

(யாழ்ப்பாணம்)

வடக்கு, வடமத்திய, கிழக்கு, ஊவா மாகாணங்களில் நிலவும் மழையுடனான வானிலை நாளையிலிருந்து மேலும் அதிகரிக்குமென வளி 15

### கண்டி அலவத்துகொடவிலானவில்

## ஒரே பிரசவத்தில் நான்கு குழந்தைகள்

(கண்டி)

கண்டி, அலவத்துகொடவிலான உடுகம பிரதேசத்தை சேர்ந்த நளிந்த லக்சான் 15

## மக்களை பார்வையிடச் சென்ற கிராமசேவகரை

### இழுத்துச் சென்ற வெள்ளம்

### வவுனியா வடக்கில் சம்பவம்

(வவுனியா)

வவுனியா வடக்கு பகுதியில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களை நேற்று நேரில் பார்வையிட்டு மக்களுடைய குறைகளை கேட்க சென்ற கிராமசேவகர் வெள்ளத்தில அடித்து செல்லப்பட்ட நிலையில் மீனவர்களால் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வவுனியா வடக்கு பிரதேச செயலக பிரிவுக் 15

### கிணற்றில் வீழ்ந்த 4 வயதுச் சிறுவன் உயிரிழப்பு

(திருகோணமலை)

திருகோணமலையில் 4 வயது சிறுவன் கிணற்றில் வீழ்ந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் அங்கு பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

திருகோணமலை - துறைமுக பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மணவெளி பகுதியிலே குறித்த சம்பவம் நேற்று சனிக் 15

### ஹிஸ்புல்லாவின் பல்கலையை

## அரசுடைமையாக்குமாறு ஜனாதிபதி உத்தரவு



(கொழும்பு)

பாரிய சர்ச்சைகளை உண்டாக்கிய கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் ஹிஸ்புல்லாவின் ஷரியா பலகலைக்கழகத்தை அரசுடமை ஆக்குமாறு 15

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## வேலைவாய்ப்பு

மானிப்பாயில் புதிதாக ஆரம்பிக்கப்பட வுள்ள நிதி நிறுவனத்திற்கு நிதியியல் ஆலோசகர் மற்றும் குழுத்தலைவர் கள் உடனடியாகத் தேவை. (1409)

தொடர்பு :- 076 882 0551



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## நடராசா குலசேகரம்



ஆலமரம் சரிந்தது விழுதுகள் வளரும் முன்னே
சூரியன் மறைந்தது மாலை பொழுது வரும் முன்னே
அலைகள் ஓய்ந்தது கரையை தொடும் முன்னே
பெற்றவளின் கண்ணில் கண்ணீர் ததும்ப
பிள்ளைகளின் எதிர்காலம் கேள்விக்குறியாக
நடப்பது பொய்யா மெய்யா எனும் மயக்கத்தில்
மனைவி கதற எங்கு சென்று விட்டீர் நீர்
மட்டும் தனியாக மீண்டும் ஒரு ஜென்மத்தில்
நாமே உங்களின் பிள்ளைகளாக
பிறக்க காத்திருக்கின்றோம்.

மண்ணின் மடியில் 28.10.2017

தாயின் மடியில் 25.08.1963

அத்தாய்,
அல்வாய்கிழக்கு,
அல்வாய்.

தகவல் :
மனைவி மற்றும்
பிள்ளைகள்

(C-8456)

# பாராட்டி

## வாழ்த்துகின்றோம்

### திரு. சொர்ணலிங்கம் தருமதன்



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின்
34 வது பொதுப் பட்டமளிப்பு
விழாவில் இன்று சட்டமாணிப்
பட்டத்தினைப் பெறும்
திரு. சொர்ணலிங்கம் தருமதன்
அவர்களைப் பாராட்டுவதோடு எதிர்
காலத்தில் சட்டத்துறையில் மேலும்
பட்டங்களைப் பெற்று
மேன்மையுற வேண்டும் என
வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர் :-
அப்பா, அம்மா, அண்ணாமார்,
அக்கா மாமன்மார், மாமி,
மைத்துனிமார், பாபுமாமா
குடும்பம் மற்றும் உறவினர்,
உயிர் நண்பர்கள்.
பாடசாலை வீதி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

(1408)

## உடல் எடை இலகுவாக கூட வேண்டுமா?

எடை கூட வேண்டுமா?, கனச்சூடா?, பலகீனமா?, ஒட்டிய கன்னங்கள் குண்டுக்கன்னங்களாக மாறவேண்டுமா?, மார்புகூட வேண்டுமா?, உடல் குறைபாடுகளா?

குளிசை பால்மா என்பன விற்பனைக்கு உண்டு

## கருமை நிறம் நீங்க வேண்டுமா?

கருமை நிறம், கரும்புள்ளி, பருக்கள், பருவந்த அடையாளம், உதட்டுக்கருமை, கை, கால் கருமை நீக்கும் கிறீம், காய்கள் (பாலுண்ணி) அகற்றும் கிறீம், முகத்தில் உள்ள தேவையற்ற ரோமம் அகற்றும் கிறீம் என்பன விற்பனைக்கு உண்டு.

பாவித்து 15 நாட்களில் அற்புதமான அழகைக் காண்பீர்கள் (1411)

077 210 6155 221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

# பாராட்டி

## வாழ்த்துகின்றோம்

### திரு.டானியல் தேவராஜ் (B.A)



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின்
34ஆவது பொதுப் பட்டமளிப்பு
வைபவத்தில் திட்டமிடல் – சிறப்புக்
கலைமாணிப் பட்டத்தினை (B.A)
பெற்றுக்கொண்ட
திரு.டானியல் தேவராஜ்
அவர்களை மேன்மேலும்
பல பட்டங்களைப் பெற்று
சீரும் சிறப்புடனும் வாழ
வாழ்த்துகின்றோம்.

8ஆம் வட்டாரம்,
நெடுந்தீவு. (1417)

வாழ்த்துவோர் :
குடும்பத்தினர், நண்பர்கள்.

## பண்டிகைக்கால விசேட சலுகை

# JP Motors

உடன் இணைந்து கொண்டாடுங்கள்



55870/=
ரூபாயினைச் செலுத்தி
புதிய மோட்டார் சைக்கிள்
ஒன்றினை ஓட்டிச் செல்லுங்கள்

- ★ 5 வருட உத்தரவாதம்
- ★ பழைய மோட்டார் சைக்கிளினைக் கொடுத்து புதிய மோடடார் சைக்கிளினை பெற்றுக் கொள்ளலாம்.

(C-8455)

TVS 077 715 1101, 077 129 0712

# பாராட்டி

## வாழ்த்துகின்றோம்



ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும்
கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை அபிவிருத்தி
அமைச்சருமான கௌரவ

### கே.என்.டக்ளஸ் தேவானந்தா

மக்கள் சேவைக்காக தன் நலம் பாராது
மக்கள் சேவை நாயகனே எம் தலைவா
உந்தன் மக்கள் மகத்தான பணி கண்டு
உடலம் நடுங்கும் சுய நல அரசியல்வாதிகள்
மத்தியில் சேவைதனை பணியாகக் கொண்ட
உயர்ந்த உள்ளம் கொண்ட நாயகனே
மக்கள் சேவை தொடர
வாழ்த்துகின்றோம் தலைவா

(1415)

10 ம் வட்டார உறுப்பினரும் பிரதேச வட்டாரக்குழு பிரதேச மக்களும்
கட்சியின் ஆதரவாளர்களும் மானிப்பாய் மேற்கு, கட்டுடை.

# சுகாதாரத் தொழிலாளர்களின் வேலைநிறுத்தம் நியாயமற்றது

# தொழிலாளிகளைச் சிலர் தவறாக வழிநடத்த முற்படுகின்றனர்

## யாழ்.மாநகரசபை முதல்வர் சுட்டிக்காட்டு




(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபையின் சுகாதாரத் தொழிலாளர்கள் தமது பிரமாணக்கோவை விதிகளை மீறி பணிகளை முன்னெடுக்க முடியாத நிலையில் சிலர் அவர்களைத் தவறாக வழிநடத்த முற் படுகின்றனர் என யாழ்.மாநகர முதல்வர் இம்மானுவல்ஆனல்ட் தெரிவித்தார்.

நாளை 9 ஆம் திகதி திங்கட்கிழமை யாழ்.மாநகர சபையின் ஐக்கிய தொழிலாளர் சங்கத்தால் எழுத்து மூலம் அறிவிக்கப்பட்ட வேலைநிறுத்தம்தொடர்பில்நேற்று யாழ்.மாநகர சபையில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ்.மாநகர சபையில் பணியாற்றும் சுகாதார ஊழியர்கள் மாநகர சபையின் நிதிப் பிரமாணம், சேவைப்பிரமாணக்கோவைகளின் ஒழுங்கு விதிகளை மீறும் வகையில் தமது கடமை முறையில் சில மாற்றங்களை செய்ய வேண்டுமென எதிர்பார்க்கிறார்கள்.

இவ்விடயம் அநேகமான சுகாதாரத் தொழிலாளர்களுக்குத் தெரிந்திருந்த போதும் ஒரு சிலரின் குழப்பகரமான நடவடிக்கைகளுக்கு யாரோ பின்புலத்தில் இருந்து இவர்களை இயக்குகிறார்கள் எனச் சந்தேகம் கொள்ளவைக்கிறது.

சுகாதார ஊழியர்கள் தொடர்பில் நாம் அக்கறையுடன் செயற்படுகிறோம். அவர்கள் கேட்கும் சில விடயங்களை எமது ஆளுமையின் அடிப்படையில் விட்டுக் கொடுத்திருக்கிறோம். எனினும் மாநகர சட்டங்களை மீறிச் சலுகை பெற நினைப்பது மாநகர சட்டத்தை அவமதிக்கும் செயலாகும்.

இலங்கை நாட்டின் சட்டத்தின் பிரகாரம் சுகாதாரத் தொழிலாளர்கள் அத்தியாவசிய சேவை செய்பவர்களாகக் கருதி வேலை நிறுத்தத்தில் ஈடுபட முடியாது என பிரமாணக் குறிப்பு இருக்கிறது.

மாநகர சுகாதார ஊழியர்களின் குறைபாடுகளை இயன்ற வரை கருத்தில் கொண்டு அவர்களின் பிரச்சினைகளை நானும் சபை உறுப்பினர்களும் சாதகமாகவே பரிசீலனை செய்து வருகிறோம்.

ஆனால் அவர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவதற்கான காரணங்களில் ஒன்றாக கூறப்படுவது தமது எந்தவொரு செயற்பாடுகளையும் வேலை தமது நேரத்தில் செய்ய வேண்டுமென கோரிக்கை முன்வைக்கிறார்கள்.

அதாவது மாதாந்தக்கூட்டங்கள் மற்றும் வேறுவிடயங்கள் சிலவற்றை செய்ய வேண்டுமென எதிர்பார்க்கின்றனர். நாமும் சில விடயங்களை விட்டுக்கொடுத்து வேலை முடிவுறும் நேரத்துக்கு முன் அவர்களின் செயற்பாடுகளைமேற்கொள்ள அனுமதித்தோம்.

மாநகர சட்டத்தின் பிரகாரம் ஆயிரம் பேரைக் கொண்ட ஒரு ஊழியர் சங்கத்திற்கு ஒரு ஊழியரை மட்டும் சங்கச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காக அனுமதிக்க முடியும்.

ஆனால் யாழ்.மாநகர சபையின் ஐநூறுக்கு உட்பட்ட தொழிலாளர்களைக் கொண்ட ஐக்கிய தொழிலாளர் சங்கத்தின் தலைவர், செயலாளர், பொருளாளர் பணியில் ஈடுபடாமல் சங்கச் செயற்பாடுகளில் ஈடுபட சட்ட ஏற்பாடுகள் இல்லை.

இருப்பினும் கடந்தகால யாழ். மாநகரசபையில் இவ்வாறான சட்ட ஏற்பாடுகளைப் பின்பற்றாமல் நடக்கச் சிலர் தொழிற்சங்கங்கள் அனுமதித்திருக்கிறார்கள். அவர்களும் பழக்கப்பட்டுவிட்டார்கள்.

இவ்விடயம் தொடர்பில் பல முறைதொழிலாளர்களுக்குத் தெளிவுபடுத்தியதுடன் அவ்வாறான செயற்பாடுகளைப் பின்பற்ற நாமும் அனுமதித்தால் மாநகர சட்டங்களை மீறுவதுடன் கணக்காய்வின் போது பல்வேறு நடைமுறைச் சிக்கல்களையும் சட்டச் சிக்கல்களையும் நிர்வாக அதிகாரிகள் எதிர்நோக்க வேண்டி வரும் என அவர்களுக்குத் தெரியப்படுத்தினோம்.

ஆகவே தான் சட்டத்தை மீறும் வகையில் எத்தகைய செயற்பாடுகளையும் முன்னெடுக்க முடியாத நிலையில் அவர்கள் அதனைப் புரிந்து கொள்வார்கள் எனத் தான் நம்புவதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)



# சுவிஸ் தூதரகப் பணியாளர் கடத்தப்படவில்லை

## பொய்த் தகவல் என்கிறார் எஸ்.பி.

(வெலிஓயா)

சுவிஸ் தூதரகத்தின் பெண் பணியாளர் கடத்தப்பட்டதாக வெளியான தகவல்களில் உண்மையில்லை என அரசாங்கம் மீண்டும் தெரிவித்தது. வெலிஓயா பகுதியில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும் போதே அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க மேற்கண்டவாறு கூறினார்.

குறித்த பெண் பணியாளர் கடத்தப்படவில்லை எனவும் அவருக்கு எவ்வித பிரச்சினைகளும் ஏற்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

அத்துடன், குறித்த சம்பவம் தொடர்பாக விசாரணைகளை முன்னெடுக்க கடத்தப்பட்டதாகக் கூறப்படும் பெண் பணியாளர் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

அவ்வாறு ஒத்துழைப்பு வழங்கினால் பூரண அரச பாதுகாப்பு வழங்கப்படும் எனவும் அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க உறுதியளித்தார். குறித்த பெண் பணியாளர் சட்டவிரோதமான முறையில்சுவிஸ் செல்ல முடியாது எனவும் அது இலங்கைச் சட்டங்களுக்கு முரணானது எனவும் அவர் தெரிவித்தார்.

விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கி விட்டு அதன்பின்னர் தேவை என்றால் குறித்த பெண் சுவிஸ் செல்ல முடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (இ-7)

### சுவிஸ் தூதரகத்தின்

# பணியாளர் கடத்தல் தொடர்பாக நன்கு அறிந்தவர் ராஜித-மகிந்த

(கொழும்பு)

இலங்கையிலுள்ள சுவிட்சர்லாந்து தூதரகத்தின் பெண் பணியாளர் கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பாக, ராஜித சேனாரட்னவே நன்கு அறிவாரென அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

சுவிட்சர்லாந்து தூதரகத்தின் பெண் பணியாளர் கடத்தப்பட்ட விவகாரம் தொடர்பாக கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். "குறித்த சம்பவம் நம் நாட்டுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் நோக்கில் அரங்கேற்றப்பட்ட நாடகம்.

மேலும் பெண் பணியாளர் கடத்தப்பட்ட விவகாரம் தொடர்பாக அதிகமான விபரங்கள் ராஜிதவுக்கே தெரியும். எனவே அவரிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

அத்துடன் இவ்விடயம் தொடர்பாக சர்வதேசத்திற்கு தெளிவுபடுத்தவுள்ளோம். இந்தச் சம்பவம் தொடர்பாக பொய்யான தகவல்களை சுவிட்சர்லாந்து தூதரகப் பணியாளர் வெளியிட்டிருந்தால் அவருக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்படும்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# கரம்பைக்குளம் உடைப்பெடுக்கும் அபாயம்




(துணுக்காய்)

துணுக்காய் கரம்பைக்குளம் உடைப்பெடுக்கும் அபாயத்தை எட்டியுள்ளது. குளம் உடைப்பெடுப்பினைத் தவிர்க்கும் முகமாக இலங்கை இராணுவம், சிவில் பாதுகாப்புப் படைவீரர்கள் மற்றும் பொதுமக்கள் இணைந்து மண்தடுப்பு அணைகளை அமைத்துள்ளனர். (ஜ-10)

### உயிர்த்த ஞாயிறு அன்று இலங்கையில் இடம்பெற்ற

# தாக்குதலுக்குக் காரணமான அமைப்புக்கள் இன்னும் வெளியில் செயற்படுகின்றன

## ஞானசார தேரர் கவலை



(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு அன்று இலங்கையில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதலுக்குக் காரணமான அடிப்படைவாத அமைப்புக்கள் இன்னும் வெளியில் சுதந்திரமாகச் செயற்படுவதாக பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்தார்.

மேலும், இவர்களை அரசாங்கம் சரியாக இனங்கண்டு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார். கொழும்பில் நேற்று முன்தினம் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "குண்டுத் தாக்குதலுக்குக் காரணமான, இஸ்லாம் அடிப்படைவாதத்திற்கு ஆதரவளித்த பலர் இன்று வெளியில் இருக்கிறார்கள்.

சிலர் கைது செய்யப்பட்டு, பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். இது பயங்கரமானதொரு செயற்பாடாகும். இதனால், குண்டுத் தாக்குதல் தொடர்பான விசாரணைகளை அவர்கள் குழப்பக் கூடிய சந்தர்ப்பங்களும் காணப்படுகின்றன.

இஸ்லாம் அடிப்படைவாதப் பிரச்சினை என்பது, இலகுவில் முடிவுக்குக் கொண்டுவரக்கூடிய பிரச்சினை கிடையாது.

அடிப்படைவாதக் குழுக்கள் இன்றும் நாட்டில் செயற்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றன. இதன் உறுப்பினர்கள் இந்த அரசாங்கத்திலும் சில முக்கிய பதவிகளில் இருக்கிறார்கள்.

இது பாரிய அச்சுறுத்தலான விடயமாகும். ஆனால், இவர்கள் தொடர்பாக நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல், தகவல்களை வழங்கிய எம்மைப் போன்றவர்களுக்கு எதிராகத்தான் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

இது பாரதூரமான விடயமாகும். எனவே, அரசாங்கம் உள்ளிட்ட தரப்பினர் இதுதொடர்பாக இனிமேலாவது உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என நாம் கேட்டுக் கொள்கின்றோம்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## சொர்க்கம் திருமண சேவை

கனடாவில் வாழும் 42 வயதுடைய மணமகனுக்கும் 34 வயதுடைய 2ல் செவ்வாய் உடைய மணமகனுக்கும் 31 வயதுடைய மணமகனுக்கும் இலங்கையில் மணமகளை தேடுகிறோம். கனடாவில் வாழும் 27 வயதுடைய மணமகளுக்கும் , 29 வயதுடைய மணமகளுக்கும் மணமகனைத் தேடுகிறோம். 27 வயதுடைய கணக்கியலில் பட்டம் பெற்ற மணமகளுக்கு லண்டனில் படித்து பட்டம் பெற்ற மணமகனை தேடுகிறோம் (லண்டனில் படித்து முடித்து விட்டு இலங்கையில் இருப்பவர்களும் விரும்பத்தக்கது)

தொடர்புகளுக்கு 0014 1666661855, 0014 377728129
021 222 1515, 076 236 4188
(1412)


## கண்ணீர் அஞ்சலி



### திருமதி பத்மாவதி இரத்தினலிங்கம்

பிறப்பு 26.07.1929
இறப்பு 05.12.2019

வையத்துள் வாழ்வாங்குவாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்
மண்ணுலகைவிட்டுப் பிரிந்தாலும்
காலங்கள் பலகடந்து சென்றாலும்
கொண்ட கோலங்கள் நிலைமாறிப் போனாலும்
காலத்தால் அழியாதது உங்கள் ஞாபகங்கள்
பிறப்போடு இறப்பு இணைந்தது
எனினும் உங்கள் இழப்பை நெஞ்சம்
ஏற்பதில்லை

இன்றுவரை குழந்தைகளின் நலனில் அக்கறையுடன் பல வழிகளில் உதவியாற்றிவரும் **திரு.ஜெயசேகரன்** (யாழ்ப் பாணம் வர்த்தக சங்கத்தின் தலைவர்) அவர்களின் அன்புத் தாயாராகிய மலேசியாவைப் பிறப்பிடமாகவும் தொண்டைமானாறு மற்றும் யாழ்ப்பாணத்தைப் வசிப்பிடமாகவும் கொண்ட **திருமதி பத்மாவதி இரத்தினலிங்கம்** அவர்கள் 05.12.2019 வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.


விதியின் கணக்கை மாற்றிட எம்மால் முடியாதே. அதனால் இவர் தம் பிரிவால் வாடும் குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் எங்கள் இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரது ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டுகிறோம்.
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

**பொன்.நித்தியானந்தம்**
**தலைவர்,பணிப்பாளர்கள், பணியாளர்கள்,இல்லக்குழந்தைகள்**
**மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம்.**
(C-8457)

## கண்ணீர் அஞ்சலி

எமது சங்கத்தின் சிரேஷ்ட உறுப்பினரும்
முன்னாள் தலைவருமாகிய

### திரு. D.M. வேதாபரணம்



அவர்கள் கடந்த 02.12.2019 அன்று இறைபதம் அடைந்தமையால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் எமது சங்கத்தின் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தோற்றம் 15.06.1944
மறைவு 02.12.2019

**யாழ் கிரிக்கட் மத்தியஸ்தர் சங்கம்**
**யாழ்ப்பாணம்**
(1414)

## 2 ஆம் ஆண்டு நினைவலைகள்

### அமரர் சிங்காரவேலு யோகநாதன்
### [உரிமையாளர்–Ogesta]



பிறப்பு 24.02.1957
இறப்பு 01.12.2017

அன்பின் திருவுருவே !
எட்ட முடியாத தொலைவு சென்று
ஆண்டு இரண்டல்ல ஓராயிரம் ஆகலாம்
காலங்கள் விடை பெறலாம்
நெஞ்சில் பதிந்த நினைவலைகள் என்றென்றும்
நம்மை விட்டு நீங்காது

185/1 கில்னர் லேன்,
யாழ்ப்பாணம்
(1416)
குடும்பத்தினர்



## கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 26 - 07 - 1929

மறைவு 05 - 12 - 2019

எமது நண்பரும், பொப்பியூலர் மோட்டோர் ஸ்ரோர்ஸ் உரிமையாளரும்,யாழ் வணிகர் கழக உப தலைவரும், முன்னாள் வடக்கு மாகாணசபை உறுப்பினருமான திரு.இரத்தினலிங்கம் ஜெயசேகரன் மற்றும் T.R குணசேகரன் வர்த்தக நிலைய உரிமையாளர் திரு.இரத்தினலிங்கம் குணசேகரன் ஆகியோரின் அன்புத் தயாரான

### திருமதி இரத்தினலிங்கம் பத்மாவதி

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன்அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**யாழ் வர்த்தக நண்பர்கள்**
**யாழ்ப்பாணம்.**
(C-8458)

## வித்தியா படுகொலை வழக்கு

# ஏழு குற்றவாளிகளின் மேன்முறையீடு மே 19 இல் விசாரணைக்கு வருகிறது

(கொழும்பு)

புங்குடுதீவு மாணவி வித்தியா படுகொலை வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட 7 குற்றவாளிகளால் முன்வைக்கப்பட்ட மேன்முறையீட்டு மனு மீதான விசாரணையை 2020 மே 19 ஆம் திகதி வரை ஒத்திவைத்து உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

புங்குடுதீவு மாணவி வித்தியா 2015 ஆம் ஆண்டு மே 13 ஆம் திகதி கொடூரமாகப் படுகொலை செய்யப்பட்டார்.

இந்தப் படுகொலை குறித்து யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசிமகேந்திரன் தலைமையில் மேல் நீதிமன்ற நீதிபதிகள் அன்னலிங்கம் பிரேமசங்கர், மாணிக்கவாசகர் இளஞ்செழியன் ஆகியோர் அடங்கிய சிறப்புத் தீர்ப்பாயம் (ட்ரயல் அட்பார்) விசாரணைகளை மேற்கொண்டது.

விசாரணைகளின் நிறைவில் 2017 ஆம் ஆண்டு செப்டெம்பர் 28ஆம் திகதி 9 எதிரிகளில் 7 பேர் குற்றவாளிகளாக இனங்காணப்பட்டு அவர்களுக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது.

அத்துடன், கூட்டு வன்புணர்வு மற்றும் சதித்திட்டம் தீட்டியமை ஆகிய குற்றங்களுக்கு 7 குற்றவாளிகளுக்கும் 30 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனையும் விதித்து தீர்ப்பாயம் தீர்ப்பளித்தது. 2 பேர் நிரபராதிகள் என விடுவிக்கப்பட்டனர்.

இந்த வழக்கில் 7 பேரை குற்றவாளிகளாக தீர்ப்பாயத்தின் 3 நீதிபதிகளுமே ஏகமனதாகத் தீர்மானித்திருந்தனர்.

இந்த நிலையில் 5 நீதியரசர்களுக்கு குறையாத அமர்வின் முன்னிலையிலேயே தீர்ப்பாயத்தின் தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடு செய்ய முடியும் என்ற சட்ட ஏற்பாட்டுக்கு அமைவாக உயர் நீதிமன்றுக்கு மேன்முறையீட்டு மனு முன்வைக்கப்பட்டது.

சுவிஸ்குமார் என அழைக்கப்படும் மகாலிங்கம் சசிகுமார், அவரது சகோதரர் மகாலிங்கம் சசிதரன், பூபாலசிங்கம் ஜெயக்குமார், பூபாலசிங்கம் தவக்குமார், தில்லைநாதன் சந்திரகாசன், சிவதேவன் துஷாந்த் மற்றும் ஜெயதரன் கோகிலன் ஆகியோர் சார்பில் உயர் நீதிமன்றில் 2017ஆம் ஆண்டு இறுதியில் மேன்முறையீடு செய்யப்பட்டது.

இந்த மேன்முறையீடு இன்று உயர் நீதிமன்றில் மூன்று நீதியரசர்கள் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.

எனினும் 5 நீதியரசர்கள் முன்னிலையில் இந்த மேன்முறையீடு விசாரிக்கப்படவேண்டும் என்று அறிவித்த அமர்வு, மனுவை 2020 மே 19 ஆம் திகதி வரை ஒத்திவைத்தது. அன்றைய தினம் 5 நீதியரசர்கள்விசாரணைகளை முன்னெடுப்பர் என்று அமர்வு சுட்டிக்காட்டியது. (இ-7)


## உடன் தேவை

கணனியில் தமிழ், ஆங்கிலம் ரைப்பிங் செய்யக் கூடிய ஆண், பெண் இருபாலாரும் தேவை. தகுதிக்கேற்ப சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும். மற்றும் போட்டோக் கொப்பி செய்யக்கூடியவர்களும் பழக விரும்புவர்களும், தொடர்பு கொள்ளவும். அருகில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. (மேலதிக விபரங்களுக்கு நேரில் வரவும்)

இராமநாதன் வீதி, திருநெல்வேலி .(யாழ்.) (1406)

தொ.பே.இல: 077 952 2444



## PROGRAM OFFICER JAFFNA/ SRI LANKA

An international NGO based in Colombo is seeking an experienced Program Officer to work in Jaffna and invites applications from suitably qualified persons for the above post.

**The primary responsibility of this position is to provide program and administrative support for the activities being implemented by the Organization, and other partner organizations in Jaffna.**

**Responsibilities:**
- Assist in the implementation of existing program activities, development of new program activities, and the monitoring & reporting including facilitating and providing technical assistance for work related to GBV, labor rights and labor migration;
- Promote interaction among partners to develop policies related to GBV, labor rights and labor migration;
- Coordinate payments and reimbursements of expenditure to program partners;
- Assist in the proper management of Jaffna office operations (interface with the Country Office for efficient administration, logistics management, and accounting/ record keeping of program activities);
- Assist with the preparation of program plans and budgets;
- Assist in information gathering and compilation of the monthly report and other reporting requirements of the organization and funders;
- Assist in organizing seminars and conferences.

**Requirements:**
- University degree social sciences or any other field is preferred;
- 2 years' experience in program designing and implementation and in working with trade unions, civil society bodies and/or NGOs;
- Experience in handling administrative work, including writing reports, planning and coordinating program work of project partners;
- Knowledge of IT, computer programs including MS Office;
- Fluency in English and Tamil;
- Good communication and interpersonal skills;
- Ability to work both independently and collaboratively as part of a team;
- Flexible and willing to travel.

Remuneration will depend on qualifications and experience.

Your application should include an introductory letter explaining how your previous work experience will enable you to meet the requirements of the post and bio-data with two non-related references.

Please e-mail/fax your application on or before December 20, 2019.

E-mail address:program.srilanka@yahoo.comor Fax No: 112366543 (1401)


# வளவாளர்களை இணைத்துக்கொள்ளல்

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி கலாசார மத்திய நிலையத்தின் 2020 ஆம் ஆண்டுக்கான வளவாளர்களை இணைத்துக் கொள்ளல், திறன் மேம்பாட்டுப் ப்யிற்சி நெறிகளை (இசை, நடனம், சித்திரம், நாடகம், வயலின், மிருதங்கம், ஓகன், சிங்களம்) கற்பிக்கத் தகுதியுடையவர்கள் தங்கள் விண்ணப்பங்களை தொலைபேசி இலக்கம் உள்ளடங்கலாக சுயவிபரக் கோவையை எதிர்வரும் 12 ஆம் திகதி வியாழக்கிழமைக்கு முன்னதாக "கரவெட்டி கலாசார மத்திய நிலையம்" எனும் முகவரிக்கு நேரடியாகவோ அல்லது பதிவுத்தபாலிலோ அனுப்பி வைக்குமாறு அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி இராசமலர் அறிவித்துள்ளார். (இ)

# பேராசிரியர் கைலாசபதி நினைவுப் பேருரை

(யாழ்ப்பாணம்)

பேராசிரியர் க.கைலாசபதியின் 37 ஆவது ஆண்டு நினைவுக் கருத்தரங்கு எதிர்வரும் 11 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் கொக்குவில் தேசிய இலக்கிய பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் த.ஸ்ரீபிரகாஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பிராந்திய அதிகாரப் போட்டியில் அதிமானுடர்களுக்கான அவா" என்னும் தலைப்பில் தே.ஞா.மீனிலங்கோ நினைவுப் பேருரை வழங்குவார். (இ-5)

## இராசி பலன்

**மீனம்:** பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், தன வரவு திருப்திகரமாக அமையும், வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் எளிதில் கைகூடும்.

**மேடம்:** குடும்பத்தினர் உங்களின் செயற்பாடுகளுக்கு பக்கபலமாக இருப்பர், ஆரோக்கியத்தில் அதிக அக்கறை காட்டுவீர்கள், நல்லவர்களை சந்தித்து நலம் காணும் நாள்.

**இடபம்:** சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள், எதிலும் பொறுமையாக இருப்பது நல்லது, தொழில் நலன் கருதிய பயணங்கள் இடம்பெறலாம், சஞ்சலங்கள் கூடும் நாள்.

**மிதுனம்:** பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், போசன நன்மையுண்டு, பயணங்கள் செல்ல போட்ட திட்டங்கள் கைகூடும்.

**கும்பம்:** மூத்த சகோதரர்கள் உங்களின் நலனில் அதிக அக்கறை காட்டுவர், பணியில் சிறு மன உளை-ச்சல் ஏற்படலாம், வீண் பிடிவாதம் செய்வதை தவிர்ப்பது நல்லது.

| | | | |
|---|---|---|---|
| | சந் | | ராகு |
| | இராசி பலன் | | |
| சனி, கேது, குரு, சுக் | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>அத்தம் | | |
| | சூரி, புத | செவ் | |

**08.12.2019**

கார்த்திகை 22 ஞாயிற்றுக்கிழமை

சூரிய உதயம் காலை 6.15 மணிக்கு

ஏகாதசி முற்பகல் 8.39 மணிவரை

அச்சுவினி பின்னிரவு 4.06 மணிவரை

சுபநேரம் 9.17-10.47மணிவரை

இராகுகாலம் 4.47-6.17மணிவரை

ஏகாதசி விரதம்

வளவன்

**கடகம்:** நண்பர்கள் மத்தியில் நல்ல பெயர் கிடைக்கும், எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள், கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள், கண்ணியமான ஒருவரின் சந்திப்பு இடம்பெறலாம்.

**மகரம்:** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், புதிய பொருட்கள் வாங்க எடுத்த முயற்சிகள் கைகூடும், விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**சிம்மம்:** எதிர்ப்புகள் அகன்று வியாபார விருத்தியுண்டாகும், மறதியால் விட்ட காரியங்களை இன்று செய்து முடிப்பீர்கள், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம்.

**தனுசு:** எதிர்பார்ப்புகள் நிறைவேறி ஏற்றம் பெறுவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், புத்திசாதுரியமான செயற்பாடுகளால் புகழ் பெறுவீர்கள், வியாபார விருத்தியுண்டு.

**விருச்சிகம்:** சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், ஆரோக்கியம் சீராகும், செய்தொழில் மேன்மையுண்டு.

**துலாம்:** உறவினர்களின் வருகையால் உற்சாகம் பெருகும் நாள், பொது நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம்.

**கன்னி:** கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், தொழிலில் மேலதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நல்லது, ஒரு வகையில் வந்த வரவுகள் இன்னொரு வகையில் விரயமாகலாம்.



வடமராட்சி தெற்கு-மேற்கு பிரதேச சபையின் வதிரி முன்பள்ளி சிறுவர் தின விழாவும், கலை விழாவும் நேற்று சனிக்கிழமை காலை பிரதேச சபை மண்டபத்தில் பிரதேச சபை செயலாளர் அ.வினோராஜ் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்களாக யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி லோச்சனா, கரவெட்டி பிரதேச சபை உப தவிசாளர் பொன்னையா, வடமராட்சி வலய முன்னாள் முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் தில்லைநாதன், நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலை அதிபர் தேவராஜா,கரவெட்டி பிரதேச நெல்லியடி உப அலுவலக பொறுப்பதிகாரி திருமதி நிர்மலா யாதவன் ஆகியோர் கலந்து கொண்டனர். (படங்கள்:- மகாலிங்கம்)

# கவிதைத் தொகுதி வெளியீடு

(யாழ்ப்பாணம்)

வேலணையூர் ரஜிந்தனின் "கட்டிடக் காடும் யுரேனியக்கதிரும்" கவிதைத் தொகுதி வெளியீட்டு விழா எதிர்வரும் 11 ஆம் திகதி புதன் கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் வேலணை தெற்கு, துறையூர் ஐயனார் வித்தியாலயத்தின் பிரதி அதிபர் திருமதி பு.இராசநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக வேலணை பிரதேச செயலாளர் அ.சோதிநாதன், சிறப்பு விருந்தினர்களாக கவிஞர் சோ.பத்மநாதன், கவிஞர் வேலணையூர் தாஸ், நயினாதீவு ஸ்ரீ கணேச க.த.வி.அதிபர் சி.சிவேந்திரன், வேலணை கலாசார உத்தியோகத்தர் பா.ஜெயதாசன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)

# பயணிகள் போக்குவரத்து சேவைகள் தொடர்பில் போக்குவரத்து அதிகார சபையில் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண மக்களுக்கான பயணிகள் சேவையை இலங்கை போக்குவரத்து சபையுடன் இணைந்து செயற்றிறன்மிக்கதாக வழங்கும் நோக்கோடு எதிர்வரும் 12 ஆம் திகதி வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையில் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளதாக வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் தலைவர் க. செவ்வேள் தெரிவித்தார்.

வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகார சபையினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தக் கலந்துரையாடலில் மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களையும் சேர்ந்த தனியார் போக்குவரத்து சங்கங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதன்போது இரு சபைகளும் இணைந்து பயணிகளுக்கான சிறந்த சேவையை எவ்வாறு வழங்குவது என்பது தொடர்பாக ஆராயப்படவுள்ளது. மேலும், இவ்விரு சபைகளும் இணைந்து சேவையை வழங்குவதற்கான பொது நேர அட்டவணை ஒன்றும் தயாரிக்கப்படவுள்ளதாக வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் தெரிவித்தார்.

அத்துடன் இவ்விரு போக்குவரத்து சபைகளுக்குமிடையிலுள்ள நடைமுறைப்பிரச்சினைகள் தொடர்பில் வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் மற்றும் இலங்கை போக்குவரத்து சபையின் பிராந்திய முகாமையாளருக்கும் இடையில் கடந்த 2ஆம் திகதி கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.(இ-5)

# ஜெய்ப்பூர் நிறுவனத்திற்கு விடுமுறை

(யாழ்ப்பாணம்)

யாழ்.ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனமானது வருடாந்த விடுமுறைக்காக எதிர்வரும் 23.12.2019 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் 27.12.2019 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை மூடப்பட்டிருக்கும் என்பதை அரச திணைக்களங்கள், மாகாண சமூக சேவைகள் திணைக்களம், அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் நிறுவனப் பயனாளிகள் ஆகியோருக்கு தெரியப்படுத்துவதோடு வருடாந்த விடுமுறை முடிவுற்று, எதிர்வரும் 30.12.2019 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் நிறுவனத்தின் செயற்பாடுகள் வழமைபோன்று இடம்பெறும் எனவும் ஜெய்ப்பூர் நிறுவனத்தின் தலைவர் வைத்தியர் திருமதி ஜெ.கணேசமூர்த்தி அறிவித்துள்ளார். (இ-5)






பழனியானந்தன் சனசமூக நிலையத்தால் "மேழியூர் கரங்கள்" செயற்றிட்டத்தின் ஊடாக யாழ்.கொழும்புத்துறை மகா வித்தியாலய மாணவிக்கு 80 ஆயிரம் ரூபாய் பெறுமதியான செவிப்புலன் கருவி அண்மையில் வழங்கப்பட்டது.

# ஏலவிற்பனை

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் கடந்த 29 ஆம் திகதி இடம்பெறவிருந்த பசு ஏலவிற்பனை தவிர்க்க முடியாத காரணத்தால் எதிர்வரும் 16 ஆம் திகதி பிற்பகல் 2 மணியளவில் பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற வளாகத்தில் வைத்து ஏல விற்பனை செய்யப்படவுள்ளது.

இவ் ஏல விற்பனையில் பங்குபற்ற விரும்பும் பொதுமக்கள் பின்வரும் நிபந்தனைகளைக் கடைப்பிடித்துதவுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளதுடன்,

01.ஏல விற்பனை ஆரம்பமாவதற்கு ஒரு மணித்தியாலத்திற்கு முன்னர் பசு மாட்டினை பதிவாளரின் அனுமதியுடன் பொதுமக்கள் பார்வையிட முடியும்.

02.ஏல விற்பனையில் பங்குபற்றுபவர்கள் தேசிய அடையாள அட்டையுடன் சமுகமளித்தல் வேண்டும்.

03.ஏல விற்பனையின் போது மதிப்பிடப்பட்ட விலை கிடைக்காதவிடத்து அப்பொருளின் ஏல விற்பனையை மீளப்பெறும் உரிமையை மன்று தன்னகத்தே வைத்திருக்கும்.

04. ஏலத்தில் பொருளினைக் கொள்வனவு செய்பவர் உடனடியாக பணத்தினைச் செலுத்தி ஏலப்பொருளினை அப்புறப்படுத்த வேண்டும். கொடுப்பனவுகள் பணமாக மட்டும் செலுத்துதல் வேண்டும். காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது எனவும் பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (இ-5)

# மின் ஒழுக்கால் வீடு சேதம்





(யாழ்ப்பாணம்)

மின் ஒழுக்கு காரணமாக அராலி மத்தியில் வீடு ஒன்று எரிந்து சேதமடைந்தது. இச் சம்பவம் நேற்று முன்தினம் முற்பகல் 11 மணியளவில் இடம்பெற்றது. வீட்டில் இருந்தவர்கள் வெளியில் சென்றவேளை இவ் விபத்து ஏற்பட்டதாகவும் தகவல் அறிந்த வீட்டு உரிமையாளர் வந்து பார்த்த போது வீடு முழுமையாக எரிந்து விட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

· மின்சார சபைக்கு தகவல் வழங்கியதையடுத்து அங்கு வந்த மின்சார சபையினர் மின்சாரத்தை துண்டித்தனர். இதன்போது வீட்டிலிருந்த ஆவணங்கள், பணம் மற்றும் பெறுமதி வாய்ந்த பொருட்களும் எரிந்து சாம்பலாகின. (இ-5-104)

# சூரிய கிரகண அவதானிப்பு முகாமுக்கு விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தின் ஏற்பாட்டில் சூரிய கிரகண அவதானிப்பு முகாமுக்கு மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான பரீட்சை எதிர்வரும் 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ள நிலையில் அப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இவ் விண்ணப்பப்படிவங்களை நாளைக்குள் பூரணப்படுத்தி பிரதேச செயலகங்களில் ஒப்படைப்பதன் மூலம் பரீட்சைக்குப் பதிவு செய்யலாம் எனவும் http://event.jfn. ac.lk/eclipse/ என்ற இணையத்தளம் மூலமும் பதிவு செய்யலாம் என்றும் ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

பரீட்சை மண்டபம், நேரம் மற்றும் சூரிய கிரகணம் தொடர்பான ஏனைய விபரங்கள் குறித்த இணையத்தளத்தின் மூலம் வெளியிடப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

# பால்நிலை வன்முறைக்கு எதிரான விழிப்புணர்வு நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் ஏற்பாட்டில் பால்நிலை வன்முறைக்கு எதிரான 16 நாள் செயற்பாட்டில் விழிப்புணர்வு நடவடிக்கை இன்று 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் யாழ். பொது நூலக மண்டபத்தில் மகளிர் அபிவிருத்தி நிலையப் பணிப்பாளர் சரோஜா சிவச்சந்திரன் தலைமையில் நடைபெறும். (இ-5)

## சமையற்காரர் தேவை

சுவை மணக்கும் கீழைத்தேய மற்றும் மேற்கத்தேய உணவு வகைகளை சிறப்பாக தயாரிப்பதில் கைதேர்ந்த ஒரு சமையற்காரர், நிறுவனத் தலைவர் ஒருவரின் பங்களாவிற்கு தேவை. பொருத்தமான நபருக்கு நல்ல சம்பளமும், மேலதிகச் சலுகைகளும் வழங்கப்படும்.

**த.பெ.இல 1263, கொழும்பு**
**என்ற முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.**

(C-696)


# மருந்து விசிறிய கடலுணவுகள் விற்பனை செய்யப்படவில்லை

## சாவகச்சேரி நகரசபை தவிசாளர் உறுதி

(யாழ்ப்பாணம்)

கடந்த 29 ஆம் திகதி சாவகச்சேரி நகரசபை பொதுச் சுகாதாரப் பரிசோதகருக்கு எழுத்து மூலமான முறைப்பாடு ஒன்று கிடைக்கப் பெற்றது.

இதனைத் தொடர்ந்து பொதுச் சுகாதார பரிசோதகரால் மீன் சந்தையில் உள்ள கடலுணவுகள் பரிசோதிக்கப்பட்டன.

அதன் பின்னர் 03.12.2019 செவ்வாய்க்கிழமை அன்று தவிசாளராகிய நானும் எமது நகராட்சி மன்றச் செயலாளரும் மற்றும் பொதுச் சுகாதார பரிசோதகரும் கொழும்பில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்டிருக்கும் பொழுது மீன் சந்தையில் போமலின் கலந்த மீன் விற்பனை செய்யப்படுகின்றது எனும் முறைப்பாடு தொலைபேசி மூலம் பொதுச் சுகாதார பரிசோதகருக்கு கிடைக்கப் பெற்றது.

இதனைத் தொடர்ந்து எமது நகராட்சி மன்றப் பொதுச் சுகாதார பரிசோதகர் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையுடன் தொடர்பு கொண்டு குறித்த முறைப்பாட்டை உடனடியாக பரிசோதனை செய்யுமாறு வேண்டியதை அடுத்து பொதுச் சுகாதார பரிசோதகர் குழு ஒன்று மீன் சந்தைப் பகுதியில் நடத்தி பரிசோதனையின் போது அங்கு மருந்து விசிறப்பட்ட எந்தவொரு கடலுணவுகளும் கண்டுபிடிக்கப்படவில்லை என சாவகச்சேரி நகர சபை மன்றத் தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன் தெரிவித்தார். (இ)


பழைமை வாய்ந்த

## ஆதி சக்தி வாய்ந்த மலையாள மந்திரம்



- ஆண், பெண் வசியம் (கவரும் வசியம், ராஜ வசியம், பிறப்பு வசியம்)
- பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும்படி செய்ய முடியும்
- கணவன்-மனைவிக்குள் பிரச்சினையா?
- காணி விற்பனையில் பிரச்சினையா?
- வியாபார முன்னேற்றம்
- வீட்டில் ஒற்றுமை உண்டாக
- பெற்றோர் ஆசீர்வாதம் பெற

இரகசியம் பேணப்படும்

ஒருமுறை தொடர்பு கொண்டு பாருங்கள் வெற்றி நிச்சயம் சகல காரியங்களும் வசியமுறைப்படி செய்து தரப்படும். (பின் விளைவுகள் எதுவும் ஏற்படாது) மூன்று பொழுதில் பலன்.

(உங்களால் நேரில் வர முடியாவிட்டால் பதிவுத் தபால் மூலம் செய்து கொள்ளலாம்)

**றெங்கசாமி**
கண்டி, அம்பத்தன்ன -077 112 3471
Viber:076 466 4153.

வெளிநாட்டில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்

(C-8454)



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,021 567 1532


# தினமும் கயிற்றில் தொங்கி பயணிக்கும் லங்காகம மக்கள்



(லங்காகம)

சிங்கராஜ வனத்திற்கு அருகிலுள்ள லங்காகம என்ற பகுதியில் மக்கள் பயணிப்பதற்கு சீரான பாதைகள் இல்லாமையால் பாரிய இன்னல்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

பாடசாலை செல்லும் மாணவர்கள் முதல் முதியவர்கள் வரை கயிறு ஒன்றை பிடித்துத் தொங்கிக்கொண்டு பயணிக்கும் அவல நிலை ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, நெடுஞ்சாலைகள், அதிவேக பாதைகள் என அபிவிருத்தியை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கும் நாட்டில் இப்படியான சூழல் முழுதாக மாற்றம் அடைய வேண்டும் என்றும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேலும், தற்போது மழை காலம் என்பதால் 'லங்காகம' பகுதியிலுள்ள மக்கள் பாரிய சவால்களை எதிர் கொண்டு வருகின்றனர். (ஜ)


விருப்பமான ஆடையை மீண்டும் அணிய முடியவில்லையா?
இதோ இலகுவான வழி

Baraka
EASY SLIM நேர்த்தியான இளம் தோற்றத்திற்கு
Weight Loss




- கொழுப்பை ஒட்சியேற்றமடையச் செய்வதன் மூலம் கொழுப்பு தகணமடைதலைத் துரிதப்படுத்தி அதிக எடையைக் குறைக்கும்.
- உலகெங்கும் ஏற்றுக்கொள்ளப்பட்ட விஞ்ஞான ரீதியில் நிரூபிக்கப்பட்ட இயற்கை மூலிகைகளால் தயாரிக்கப்பட்டது
- கருஞ்சீரகத்தின் பரிபூரண நற்குணங்களுடன் *Garcinia cambogia* (குடம்புளி), Green Tea இன் குணங்கள் நிறைந்த Easy slim, உணவுச் சமிபாட்டை இலகுவாக்கி உடல் நிறையைக் குறைக்கும்.

GMP, HACCP, ISO 22000, ISO 14001 CERTIFIED COMPANY

HOTLINE: 0117 77 22 77
www.barakanaturals.com

Baraka



## கிளி/கிளிநொச்சி ம.ம.வி பழைய மாணவர் சங்க விசேட பொதுக்கூட்டம் 2019

மேற்படி கூட்டமானது எதிர்வரும் 15.12.2019 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் நடைபெறும். பாடசாலையின் வளர்ச்சி மற்றும் எதிர்கால செயற்றிட்டங்கள் தொடர்பில் கலந்துரையாடுவதன் பொருட்டு பாடசாலையின் பழைய மாணவர் அனைவரையும் இக் கூட்டத்தில் கலந்து சிறப்பிக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கின்றோம்.

**வைத்திய கலாநிதி மு.சிறீதர்,**
**செயலாளர்.**

(C-8453)



## Canada VISA கூடிய விரைவில் உங்கள் கைகளில்

STUDENT / VISIT / BUSINESS

- பாடநெறி கட்டணம் ரூ.350,000 இருந்து
- சகல வசதிகளும் செய்து தரப்படும்
- O/L உடன் விண்ணப்பிக்கலாம்
- Without IELTS — Intake Every Month

Visit & Business Visaவிற்கு தேவையான Sponsor Letters Canadaவில் இருந்து பெற்றுத்தரப்படும்

STUDENT VISA
VISIT VISA




flex Institute — Step Towards a Bright Future

REFUSED VISA விசாக்கள் எமது தலைசிறந்த சட்டத்தரணிகளால் கூடிய விரைவில் மீண்டும் பெற்றுத்தரப்படும்.

6A, Parakumba Place, Colombo 06.
flexinstitute04@gmail.com www.flexinstitute.lk

Hotline: 0777- 761 346

# நன்கொடைகளுக்காக சீனாவிற்கு இலங்கை நன்றி





(கொழும்பு)


கொழும்பிலுள்ள பொலிஸ் காலாட் படைத் தலைமையகத்தில் 183 மோட்டார் சைக்கிள்கள், கணனிகள், பாதுகாப்பு கமராக்கள் மற்றும் பிற உபகரணங்கள் சீனாவால் வழங்கப்பட்டன.

இவற்றை இலங்கையின் பொலிஸ் துறையின் சுற்றுச்சூழல் பாதுகாப்புத் துறைக்கு சீன மக்கள் குடியரசு வழங்கியது.

இந்நிகழ்வில் சீனத் தூதர் சென் சூ யோங், மகாவலி அபிவிருத்தி, கமத்தொழில், நீர்ப்பாசனம் மற்றும் உள்ளக வர்த்தக நலன் பாதுகாப்பு அமைச்சர் சமல் ராஜபக்ஷ, பாதுகாப்புச் செயலாளர் கமால் குணரட்ன, சீன அதிகாரிகள் மற்றும் பிரதானிகள் பலரும் கலந்து கொண்டனர்.

அத்துடன் 75 மில்லியன் அமெரிக்க டொலர்களையும் நன்கொடை வழங்கியதற்காக இலங்கை அரசாங்கம் சீனாவிற்கு தனது நன்றிகளைத் தெரிவித்தது. (இ-7)

# வீதியில் வீசப்படும் கழிவுகளால் அசௌகரியம்





(யாழ்ப்பாணம்)

வலி.தெற்குப் பிரதேச சபைக்குட்பட்ட கந்தரோடை உபாத்தியார் வீதியில், சின்னக் குளத்திற்கு அண்மையில் கழிவுகள் கொட்டப்பட்டுள்ளன. இதனால் அவ்வீதியில் பயணிக்கும் பொதுமக்கள் அசௌகரியங்களுக்குள்ளாகியுள்ளனர். எனவே இது தொடர்பில் உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்தனர்.(இ-5)

# தேசிய உளவுத்துறைப் பணிப்பாளராக சலே

(கொழும்பு)

தேசிய உளவுத் துறையின் பணிப்பாளராக, முன்னாள் இராணுவப் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் பிரிகேடியர் சுரேஷ் சலே நியமிக்கப்பட்டார்.

பாதுகாப்பு அமைச்சின் ஊடாக இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்நிலையில் இதுவரை அந்தப் பதவியிலிருந்து வந்த சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதி பர் நிலாந்த ஜெயவர்த்தனவுக்கு அந்தப் பதவி இல்லாமல் போயுள்ளதால் அவர் பொலிஸ் தலைமையகத்தின் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராக மாற்றமடைந்தார்.

தேசிய உளவுத்துறைப் பணிப்பாளர் பதவி இல்லாமல் போனதையடுத்து அவர்இவ்வாறு பொலிஸ் தலைமையகத்துக்குட்பட்ட பொலிஸ் அதிகாரியாக கணக்கில் கொள்ளப்படுவதாகவும், அது இடமாற்றம் அல்ல எனவும் பொலிஸ் ஆணைக்குழு தகவல்கள் தெரிவித்தன. (இ-7)

# உலக அழகு திருமதியாக இலங்கைப்பெண் தெரிவு




(வோஷிங்டன்)

2020 ஆம் ஆண்டின் "மிஸிஸ் வேர்ல்ட்" - "உலக அழகுத் திருமதி" என்ற பட்டத்தை இலங்கையைச் சேர்ந்த கரோலின் ஜூரி சுவீகரித்தர்.

அமெரிக்காவில் லொஸ்வேகொஸில் இடம்பெற்ற தெரிவில் 51 பேர் கலந்து கொண்டனர். இதில் பங்குபற்றிய கரோலின் குறித்த விருதை பெற்றுள்ளார்.


ஏற்கனவே அவர் " மிஸிஸ் ஸ்ரீலங்கா" என்ற விருதுக்கும் சொந்தக்காரர் என்பது குறிப்பிடத்தக்கது.

35 ஆண்டுகளுக்கு பிறகு "மிஸிஸ் வேர்ல்ட்" - "உலக அழகுத்திருமதியாக" இலங்கை பெண் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இதற்கு முன்னர் இந்த விருதை முதலாவது தடவையாக 1984 ஆம் ஆண்டு ரோஸி சேனநாயக்க வென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ)

# மழையால் சேதமடைந்த பாலம் ராணுவத்தினரால் புனரமைக்கப்பட்டு மக்களின் பாவனைக்கு விடப்பட்டது





(யாழ்ப்பாணம்)

தொடர்ந்து பெய்யும் மழை காரணமாக கீரிமலை முதல் பொன்னாலை வரையான B75 வழிபாதையில் மானிப்பாய், குசுமன்துறை பிரதேசத்தில் அமைந்திருந்த 30 அடி நீளம் மற்றும் 11 அடி அகலமுடைய பாலமானது சேத்மடைந்தது.

இதனால் அவ்வழியூடான போக்குவரத்துக்கள் யாவும் ஸ்தம்பிதமடைந்ததுடன் மக்கள் சிரமத்திற்குள்ளாகியிருந்த நிலையில் யாழ்.பாதுகாப்புப் படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ருவான் வணிகசூரியவின் கட்டளைக்கு இணங்க இப் பாலமானது நேற்று முன்தினம் 10 ஆவது பொறியியல் படையணி மற்றும் 16 ஆவது கெமுனு படையணியினரின் உழைப்புடன் மீளப் புனரமைக்கப்பட்டு மக்களின் பாவனைக்கு விடப்பட்டது. (இ-9)

# இரத்மலானையில் 31°C வெப்பநிலை பதிவு

(கொழும்பு)

நாட்டின் பல பாகங்களில் மழையுடனான காலநிலை நிலவுகின்ற நிலையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரத்மலானைப் பகுதியில் 31 பாகை செல்சியஸ் வெப்பநிலை பதிவாகியுள்ளது. அதே நேரம் குறைந்த வெப்பநிலையாக நுவரெலியா பகுதியில் 13.8 பாகை செல்சியஸ் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-10)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார் மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 150 | 120 | 100 | 120 | 120 |
| உருளைக்கிழங்கு | 140 | 120 | 110 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 300 | 300 | 240 | 180 | 300 |
| தக்காளி | 150 | 150 | 140 | 80 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 120 | 120 | 70 | 80 |
| கோவா | 100 | 100 | 100 | 80 | 120 |
| கரட் | 250 | 280 | 220 | 210 | 300 |
| பூசணி | 80 | 40 | 50 | 30 | 80 |
| புடோல் | 120 | 120 | 80 | 50 | 120 |
| வாழைக்காய் | 80 | 70 | 60 | 70 | 120 |
| சின்ன வெங்காயம் | 450 | 400 | 400-450 | 400 | 450 |
| பெரிய வெங்காயம் | 200 | 160 | 130-160 | 110 | 200 |
| பாகற்காய் | 250 | 350 | 160 | 160 | 240 |
| வெண்டிக்காய் | 80 | 120 | 80 | 70 | 80 |
| கருணைக் கிழங்கு | 80 | 70 | 80 | 80 | 150 |
| பயற்றங்காய் | 250 | 250 | 180 | 190 | 200 |
| லீக்ஸ் | 250 | 220 | 280 | 240 | 300 |
| பீற்றூட் | 200 | 180 | 180 | 60 | 200 |
| கறிமிளகாய் | 250 | 280 | 220 | 220 | 200 |
| முருங்கைக்காய் | 350 | — | — | — | — |
| போஞ்சி | 200 | 180 | 160 | 100 | 160 |
| கத்தரிதம்புள்ள | 140 | 70 | — | 90 | 100 |
| கீரை -1பிடி | 50 | 40 | 60 | 60 | 60 |
| தேசிக்காய் | 100 | 150 | 120 | 110 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 45 | 30-50 | 45 | 30-50 |
| இராசவள்ளி | 250 | 300 | 250 | 200 | 250 |
| வெங்காயப்பூ | 350 | 200 | — | — | — |
| முள்ளங்கி | 120 | 140 | — | 40 | 100 |
| பொன்னாங்காணி | 50 | 30 | 40 | 30 | 40 |
| வல்லாரை | 20 | 50 | 20 | 30 | 30 |
| ஈரப்பலா | 80 | 120 | — | 160 | 100 |

# இரண்டு கருங்கற்கள் கட்டப்பட்டு கடலில் தள்ளி விடப்பட்டுள்ளேன்

## நீந்திக் கரையேறுவேன்-அமைச்சர் டக்ளஸ் நம்பிக்கை



(வவுனியா)

இரண்டு கருங்கற்கள் கட்டப்பட்டு கடலில் நான் தள்ளப்பட்டுள்ளேன். எனினும் நீந்திக் கரையேறுவேன் என கடற்றொழில் நீரியல்வள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நம்பிக்கை வெளியிட்டார்.

வவுனியாவிற்கு நேற்று முன்தினம் விஜயம் மேற்கொண்ட அமைச்சர் அங்கு அமைக்கப்பட்ட பொருளாதார மத்திய நிலையம், பழைய பேருந்து நிலையம், புதிய பேருந்து நிலையம், மரக்கறி மொத்த விற்பனை நிலையம் என்பனவற்றிற்கு சென்று அங்கு பலரையும் சந்தித்ததன் பின்னர் வவுனியா வாடி வீட்டில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பல ரின் கோரிக்கைக்கு இணங்க நான் அமைச்சுப் பதவியை பெற்றுக்கொண்டிருந்தேன். இல்லாவிட்டால் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் அதிகளவான வாக்குகளைப் பெற்று அதிகளவான ஆசனங்களை பெற்றே அமைச்சுப் பதவியை எடுக்கும் நோக்கம் இருந்தது. எனினும் பலரின் கோரிக்கைக்கு அமைய தற்போது அமைச்சுப் பதவியைப் பெற்றிருக்கின்றேன்.

இது நாடுதழுவியதான அமைச்சாகவுள்ளது. எனினும் என்னை கடலில் தள்ளிவிட்டுள்ளது. எனினும் நான் கடலில் நீந்துவது என்று முடிவெடுத்து இருந்தாலும் இரு பக்கமும் இரு கருங்கற்கள் கட்டப்பட்டுள்ளன.

அதில் ஒன்று தேசிய அமைச்சு என்ற கருங்கல்.மறுபக்கம் தமிழர்களின் பிரச்சினைகள் என்ற கருங்கல். ஆகவே இந்த கருங்கற்களை கட்டிக்கொண்டே நான் இந்த சமுத்திரத்தில் நீந்த முடிவெடுத்துள்ளேன். எனக்கு கடந்த காலத்தில் சமுத்திரத்தில் நீந்திய அனுபவங்கள் நிறையவே இருக்கின்றன. மக்கள் நலனை முன்னிறுத்துவதால் என்னால் நீந்த முடியும் என நம்புகின்றேன். எனினும் மக்களினுடைய பக்கபலம் அவசியமானது.

ஆட்சியாளர்களுடன் கதைப்பதில் எனக்கு சில சங்கடங்கள் உள்ளன. ஏனென்றால் நான் வெல்லவில்லை. நான் எதிர்பார்த்தது போல் தமிழ் மக்களிடம் இருந்து ஜனாதிபதி தேர்தலுக்கு போதிய வாக்குகள் கிடைக்கவில்லை. இதைச் சொல்வதற்கு நான் தயங்கவில்லை. எனவே வர இருக்கும் சந்தர்ப்பங்களை நீங்கள் சரியாகப் பயன்படுத்த வேண்டும்.

ஜனாதிபதி தேர்தலில் எமக்குக் கிடைத்த வாக்குகளை விட எனக்கு கிடைத்த வாழ்த்துக்கள் பல மடங்கு அதிகமாகவுள்ளது.

குறைந்தது அடுத்த 5 வருடங்களாவது இதே அரசாங்கம்தான் ஆட்சியில் இருக்கும். ஜே.ஆர்.ஜெயவர்த்தன யுத்தகாலத்தில் அந்தப் பிரச்சினைகளில் (மனித உரிமை மீறல்) ஈடுபடவில்லையா? பிரேமதாஸ யுத்தம் நடத்தும் போது அவர் ஈடுபடவில்லையா? சந்திரிகா மற்றும் ரணில் விக்கிரமசிங்க ஈடுபடவில்லையா? யுத்தம் வந்தால் அது எங்கள் மீது திணிக்கப்பட்ட நிர்ப்பந்தம்.

71 ஆம் ஆண்டும் 89 ஆம் ஆண்டும் சிங்கள இளைஞர்கள் அரசாங்கத்திற்கு எதிராக வன்முறையில் ஈடுபடும்போது பாதிக்கப்பட்டது அப்பாவி சிங்கள மக்கள். இந்திய-இலங்கை ஒப்பந்தத்திற்கு பின்னர் புலித்தலைமைகள் வன்முறையை தொடர்ந்தமையால் பாதிக்கப்பட்டது அப்பாவி தமிழ் மக்கள் தான்.

அண்மையில் முஸ்லிம் மக்களின் பெயரால் குண்டுகள் வெடிக்க வைக்கப்பட்டபோது பாதிக்கப்பட்டது அப்பாவி முஸ்லிம் மக்கள் தான்.

எனவே அரசாங்கத்திற்கு எதிராக வன்முறை தலைதூக்கும் போது இது நடப்பது தவிர்க்க முடியாதது. இது உலக வரலாறு. இதற்கு உலகில் எந்த நாடும் விதிவிலக்காக இருந்ததில்லை.

செல்வநாயகம் ஐயா தன்னால் முடியாத போது கூறியிருந்தார் தமிழ் மக்களை பாதுகாக்க வேண்டுமாக இருந்தால் கடவுள் தான் வரவேண்டும் என. நான் கூற விரும்புவது இதே போக்கில் தமிழ் மக்கள் தவறாக வழிநடத்தப்படுவார்களாக இருந்தால் கடவுள் வந்தாலும் காப்பாற்ற முடியாத நிலைமையே ஏற்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-299)

# நத்தாருக்கு முன் ஐ.தே.கவின் தலைமைப்பதவி சஜித்திடம்

## ஹரீன் திட்டவட்டம்



(கொழும்பு)

எதிர்வரும் நத்தார் தினத்துக்கு முன்ன்ர் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பதவியை சஜித் பிரேமதாஸவுக்கு பெற்றுக் கொடுப்போம் என பாராளுமன்ற உறுப்பினர் ஹரீன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

கட்சியை வெற்றிகரமாக நடத்திச் செல்ல புதிய தலைமைத்துவம் ஒன்று தேவைப்படுகின்றது.

இன்றுள்ள அரசியல் சூழ்நிலையில் புதிய தலைமைத்துவத்தை மக்கள் விரும்புகின்றனர். கடந்த ஜனாதிபதி தேர்தலில் எமக்கு கிடைத்த மக்கள் ஆதரவு இதில் பாரிய பங்களிப்பு செலுத்தியுள்ளது.

அதற்கமைய சஜித் பிரேமதாஸவை ஐக்கிய தேசிய கட்சியின் தலைவராக்கும் எமது அடுத்த இலக்கை நோக்கி நாம் பயணிக்க ஆரம்பித்துள்ளோம்.

இது குறித்து கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களிடம் பொறுப்புக்கொடுக்கப்பட்டுள்ளது. அடுத்த வாரம் இது குறித்த பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

பாராளுமன்ற எதிர்க்கட்சி தலைவர் பதவி இப்போது சஜித் பிரேமதாஸவிற்கு வழங்கப்பட்டுள்ளது. பாராளுமன்றத்தில் பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவில் அதனைப் பெற்றுக்கொள்ள முடிந்துள்ளது.

இது எமது முதல் இலக்காக இருந்தது. அதனை நாம் தாண்டியுள்ளோம். ஐக்கிய தேசிய கட்சி பாராளுமன்றத்தில் பலமான கட்சியாக செயற்படவும் அடுத்தகட்ட அரசியல் வேலைத்திட்டங்களுக்கும் இது மிகப்பெரிய பலமாக அமையும் என நம்புவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# மாற்றுத்திறனாளிகள் தினவிழா





(நெளுக்குளம்)

சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினத்தை முன்னிட்டு வவுனியா மாவட்டத்தில் வருடாவருடம் நடைபெறும் மாற்றுத்திறனாளிகள் தினவிழா நேற்று முன்தினம் வவுனியா மாவட்ட சமூகசேவைகள் உத்தியோகத்தர் செ.ஸ்ரீநிவாசன் தலைமையில் வ்வுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் இடம் பெற்றது.

வவுனியா மாவட்ட சமூகசேவைகள் திணைக்களமும் மாற்றுத்திறனாளிகளுக்காக சேவையில் ஈடுபடும் அரசசார்பற்ற நிறுவனங்களும் இணைந்து குறித்த மாற்றுத் திறனாளிகள் விழாவை நடத்தினர்.

மாற்றுத் திறனாளிகளின் திறமைகளை வெளிப்படுத்தும் கலை, கலாசார நிகழ்வுகள், வினாவிடைப் போட்டிகளென பல அரங்கு நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் மாவட்டச் செயலாளர் ஐ.எம்.கனீபா, மாகாண சமூகசேவைகள் திணைக்களப் பணிப்பாளர் வனஜா செல்வரட்ணம், வவுனியா தேசிய கல்வியியற்கல்லூரியின் பீடாதிபதி கதிரேசன் சுவர்ணராஜா, உளநல வைத்தியர் சி.சுதாகரன் எனப் பலரும் கலந்து கொண்டு மாற்றுத் திறனாளிகளை கௌரவப்படுத்தினர். (9-299)

# பொலிஸ் நிலையத்தில் துப்பாக்கிச் சூடு!

## பெண் பொலிஸ் உத்தியோகத்தர் காயம்

(கம்பஹா)

கம்பஹா மாவட்டத்திற்குட்பட்ட ஜா-எல பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் பெண் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் காயமடைந்தார்.

இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவ்ருவதாவது.

பொலிஸ் அதிகாரி ஒருவரின் துப்பாக்கி தவறுதலாக வெடித்ததிலேயே இச் சம்பவம் இடம்பெற்றதாக ஜா-எல பொலிஸார் தெரிவித்தனர்.

அத்தோடு காயமடைந்த உத்தியோகத்தர் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# மருத்துவக் கழிவுகள் எரியூட்டப்படுவதால் மக்களுக்கு பெரும் சுகாதார நெருக்கடி

## வாகனத்தை மறித்து போராட்டம்




(யாழ்ப்பாணம்)

வைத்தியசாலைகளில் இருந்து வெளியேற்றப்படும் மனித உடற்பாகங்கள் மற்றும் பாவித்த மருத்துவ உபகரணங்கள் என்பன பருத்தித்துறை மந்திகை ஆதார வைத்தியசாலையில் எரியூட்டப்படுவதாக கம்பன் கழக சனசமூக நிலையமும், பொது மக்களும் குற்றம் சாட்டினர்.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் எரிக்கப்படும் மருத்துவக் கழிவுகள் காரணமாக அப்பகுதியிலுள்ள பொதுமக்கள் பாரிய சுகாதாரச் சீர்கேட்டினை எதிர்நோக்கியுள்ள போதிலும் அது குறித்து உரிய அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியும் இதுவரை எந்தவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சீரற்ற முறையில் காணப்படும் கழிவுகள் எரிக்கும் பகுதியில் கிழமைக்கு இரு நாட்கள் பெருமளவு மருத்துவக் கழிவுகள் எரிக்கப்பட்டு வருகின்றன.

இதனால் வைத்தியசாலைக்கு அருகாமையில் இருக்கும் கரும்பன் கிராமத்தைச் சேர்ந்த மக்கள் பெரும் சுகாதார நெருக் கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

இது தொடர்பில் மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டும் அவர்களால் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. வைத்தியசாலைக சத்திர சிகிச்சைக் கூடங்களிலிருந்து அகற்றப்படும் மருத்துவக் கழிவுகள் மற்றும் காலா வதியான மருந்துகள் என்பன இங்கு எரிக்கப்படுவதால் அரு கிலுள்ள கிராமத்தில் வசிக்கும் சிறுவர்கள், கர்ப்பிணிப் பெண்கள், முதியோர்கள் பாதிக்கப்பட டுள்ளனர்.

இந் நிலையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மருத்துவக் கழிவுகளை ஏற்றி வந்த வாகனத்தை வைத்தியசாலையினுள் நுழையவிடாது வழி மறித்து மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் மருத்துவக் கழிவுளை உள்ளே கொண்டு செல்ல முடியாத நிலை ஏற்பட்டது.

இதேவேளை மருத்துவக் கழிவுகளை ஏற்றிவர அனுமதியளித்த அதிகாரி அவ்விடத்துக்கு வராமையால் வாகனத்தின் சாரதி பருத்தித்துறை பொலிஸாரின் உதவியை நாடினார்.

இதனையடுத்து சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி மருத்துவக் கழிவுகளுடன் வந்த வாகனத்தை திருப்பியனுப்பினார்.

இதேவேளை மருத்துவக் கழிவுகளை மக்கள் நடமாட்டமற்ற பகுதியில் எரிப்பதற்குரிய நடவடிக்கையை உரிய அதிகாரிகள் மேற்கொள்ள வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-10-60)

# ஐ.தே.கவின் தலைமைப் பதவியையும் ரணில் விட்டுக் கொடுக்க வேண்டும்

## இராதாகிருஷ்ணன் வலியுறுத்து



(தலவாக்கலை)

எதிர்க்கட்சித் தலைவர் பதவியை விட்டுக்கொடுத்தது போல ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பதவியையும் ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாஸவிற்கு வழங்க வேண்டும் என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதித் தலைவருமான வே. இராதாகிருஷ்ணன் வலியுறுத்தினார்.

தலவாக்கலை பிரதேசத்தில் நேற்று சனிக்கிழமை செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஐக்கிய தேசிய கட்சியின் தலைமை பதவியையும் ரணில் விக்கிரமசிங்க விட்டுக்கொடுப்பு செய்து சஜித் பிரேமதாஸவிற்கு வழங்கி ஐக்கிய தேசியக் கட்சியின் எதிர்கால நலன் கருதி வழிநடத்துவதற்கான வாய்ப்பினை உருவாக்கி தருவதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டும்.

கடந்த 25 வருடங்கள் ரணில் விக்கிரமசிங்க இந்தக் கட்சியை வழிநடத்தி வந்தாலும், இந்தக் கட்சியினுடைய முன்னேற்றகரமான செயல்களை செய்வதற்கு தவறியிருந்தார் என்பது தான் உண்மையான கருத்து.

ஏனென்றால் ஒவ்வொரு தேர்தல்களிலும் பின்னடைவை சந்திக்கக்கூடிய நிலையிலேயே இருந்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. தேர்தல் காலங்களில் மக்களுடைய விருப்பத்தைப் பொறுத்து எங்களுடைய முடிவை தெரிவிப்போம்.

அத்தோடு, தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் ஆயிரம் ரூபா கிடைத்தால் மிக வரவேற்க கூடிய ஒரு விடயம். இன்று இந்த நாட்டினுடைய ஜனாதிபதி பல்வேறு விடயங்களில் முனைப்புடன் செயற்பட்டு வருகின்றார்.

விசேடமாக வரிகள் குறைக்கப்பட்டுள்ளன. பல்வேறு திட்டங்களை மேற்கொண்டுள்ளார். மக்களுக்குச் சிறந்த சேவைகளைச் செய்யக்கூடிய வகையில் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார்.

அதேபோல் தோட்டத் தொழிலாளர்களுடைய சம்பள விடயத்திலும் அக்கறை காட்டி ஆயிரம் ரூபாய் சம்பளம் கொடுப்பதற்கான நடவடிக்கையும் எடுக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## நேபாளம் சென்ற

# இலங்கை வீரர்களுக்கு டெங்குக் காய்ச்சல்!

(காத்மண்டு)

13 ஆவது தெற்காசிய விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றுவதற்காக நேபாளம் சென்ற இலங்கையின் ஆறு வீரர்கள் டெங்குக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டதாகத் தகவல் வெளியானது.

குறித்த ஆறு பேரும் நேபாளத்தின் காத்மண்டு, தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாகவும் அதில் ஒருவர் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டதாகவும் தெரியவருகிறது.

குறித்த வீரர்களின் சிகிச்சைக்காக அதிக பணம் செலவிடப்படுவதாகவும் அந்தச் செலவீனங்களை விளையாட்டுத்துறை அமைச்சே பொறுப்பேற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் இவர்களை, 4 மணித்தியாலயத்திற்கும் மேற்பட்ட விமானப் பயணத்தின் ஊடாக நாட்டுக்கு அனுப்பிவைப்பது சிக்கலுக்குரிய விடயம் எனவும் சுட்டிக்காட்டப்பட்டது. (இ-7)

# பொலிஸ் உத்தியோகத்தர்கள் அறுபது பேருக்கு இடமாற்றம்

(கொழும்பு)

உடன் அமுலுக்குவரும் வகையில் பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் நால்வர் உள்ளிட்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் அறுபது பேருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டது.

இற் [illegible] இடமாற்றங்களை நேற்று முன்தினம் முதல் அமுலுக்கு வரும் வகையில் தேசிய பொலிஸ் ஆணைக்குழு வழங்கியது.

பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் நால்வருக்கு மேலதிகமாக எட்டு சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளும், 11 பொலிஸ் அதிகாரிகளுக்கும் இடமாற்றம் வழங்கப்பட்டது.

அத்துடன் உதவிப் பொலிஸ் அதிகாரிகள் 18 பேருக்கும், பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் 20 பேர் உள்ளிட்ட அறுபது பேருக்கு இவ்வாறு இடமாற்றம் வழங்கப்பட்டது. (இ-7)

## காட்டுப் பகுதியில்

# அநாதரவாக வீசப்பட்ட சிசு மீட்பு



(புத்தளம்)

புத்தளம் - குருநாகல் பிரதான வீதியின் 4 ஆம் கட்டைப் பகுதியில் கடற்படை முகாமுக்கு அருகிலுள்ள காட்டுப் பகுதியில் அநாதரவாக வீசப்பட்ட நிலையில் காணப்பட்ட பிறந்து ஒருநாளேயான சிசு மீட்கப்பட்டு புத்தளம் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அவ்வீதியால் சென்ற ஒருவர் இக் குழந்தையைக் கண்டதுடன் இது தொடர்பில் புத்தளம் பொலிஸ் நிலையத்திற்கு தகவல் கொடுத்தார்.

இதனையடுத்து சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸ் குழுவினர் அம்புலன்ஸை வரவழைத்து உடனடியாக புத்தளம் ஆதார வைத்தியசாலைக்கு அச்சிசுவை அனுப்பினர். (இ-7)

# பார்த்தனுக்கு பகவான் உரை செய்த பகவத்கீதை

இந்து சமயத்தின் சாஸ்திர நூல்களுள் இவ் இதிகாசங்களும் அடங்குகின்றன. மகாபாரதம் இவ் இதிகாசங்களுள் ஒன்றாகும். மகாபாரதம் மண் ஆசையால் ஏற்படும் விபரீதங்களையும் அவற்றிற்கான தீர்வுகளையும் எடுத்துக் கூறும் நூலாகும். இந்நூலை வியாச பகவான் உரைக்க விநாயகப்பெருமான் எழுதியதாக வரலாறுகள் கூறுகின்றன.

இதில் சந்தனு எனும் ஓர் அரசனின் இரு புதல்வர்களான திருதராஷ்டிரன், பாண்டு ஆகிய இருவரில் மூத்தவனான திருதராஷ்டினன் பிறவியிலேயே அந்தகன். ஆதலால் சந்தனு மகாராஜா தனது ஆட்சிப் பொறுப்பை பாண்டுவிடம் ஒப்படைக்க வேண்டியிருந்தது.

இந்நிலையில் பாண்டு மன்னன் அரசாட்சிப் பொறுப்பேற்று நல்லாட்சி நடத்திவரும் நாளில் அவருக்கு தருமன் வீமன், அர்ச்சுனன், தகுலன், சகாதேவன் என ஐந்து (5) ஆண் குழந்தைகள் கிடைக்கப் பெற்றார். ஆனால் அவருக்கு முன்னரே கிடைத்த ஒரு முனி சாபத்தினால் இளமையிலேயே இறப்பைத் தழுவினார்.

அந்தகனான திருதராஷ்டினனுக்கு (101) நூற்றியொரு புதல்வர்கள். இந்நிலையில் பாண்டுவின் இறப்பினால் ஆட்சிப் பொறுப்பு திருதராஷ்டினனிடம் சேர்ந்தது. இதனால் பாண்டுவின் புதல்வர்களான பஞ்சபாண்டவர்களும் துரியோதன் முதலாய் நூற்றொருவரும் பிதாமகன் பீஷ்மர் அவர்களின் வழி நடத்தலில் கல்வியையும் வில்வித்தை முதலான கலைகளையும் குரு துரோணாச்சாரியாரிடம் பயின்றனர்.

சத்வகுண இயல்புகளைக் கொண்ட கலைகளில் தீரர்களாகத் திகழ துரியோதனனின் மனதில் பொறாமைத் தீ வளர ஆரம்பித்தது. திருதராஷ்டினனுக்கு புத்திர பாசம், துரியோதனன் பாண்டவர்களுக்கு இழைக்கும் துரோகங்கள் யாவற்றுக்கும் உடந்தையாக இருந்து தர்மத்தை உதாசீனம் செய்தார்.

தர்மத்தின் வழிநடந்த பாண்டவர்களுக்கு சித்தப்பா விதுரர், அர்ஜுனனின் நண்பனான கிருஷ்ண்ர் ஆகியோர் துணைநின்று பாதுகாத்து வந்தனர்.

எது எப்படி நடந்தாலும் விதிவசம் பாண்டவர்கள் (12) பன்னிரண்டு வருட வனவாசமும் (1) ஒரு வருட அஞ்ஞாதவாசமும் அனுபவிக்க நேர்ந்தது. அதர்ம வழியில் நின்றவர்களிடம் ஆட்சிப் பொறுப்பு நிலைத்தது. பாண்ட வர்கள் வனவாசம், அஞ்ஞாத வாசம் ஆகியவற்றின் மூலம் பல அனுபவங்களைப் பெற்றனர். இவற்றை முடித்து நாடு திரும்பிய பாண்டவர்கள் தமது பாகத்தை தமக்கு வழங்கும்படி கேட்டனர். அது கிடைக்காத பட்சத்தில் ஐந்து கிராமங்களை தமக்குத் தரும்படி கேட்டனர்.

அதற்கும் இணங்காத பட்சத்தில் ஐந்து வீடுகள் கேட்டனர். அதற்கும் மறுப்புத் தெரிவித்து ஒரு ஊசிகுத்தும் இடம்கூட கொடுக்க முடியாது என கௌரவர்கள் (துரியோதனன்) முதலியோர் தெரிவித்தனர்.

பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் இடையில் யுத்தம். அதாவது தர்மத்துக்கும் அதர்மத்துக்கும் இடையில் யுத்தம். யுத்தகளத்தில் கிருஷ்ணர் துரியோதனன் மற்றும் அர்ச்சுனனின் விருப்பப்படி கௌரவர்களுக்கு தனது படைபலம் முழுவதையும் அளித்ததுடன் பாண்டவர்களுக்கு அர்ஜுனனின் தேரோட்டியாக தானே பாகம் வகித்தார்.



இன்று பகவத்கீதை ஜெயந்தி தினமாகும். இதனை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.

இப்போர்க்களத்தில் என்ன நடைபெறுகின்றது என்பதை உடனுக்குடன் அறியவிரும்பிய திருதராஷ்டினனும் அவரது அமைச்சரான சஞ்சயன் நேர்முக வர்ணனை வழங்கக்கூடிய விதத்தில் சஞ்சயனுக்கு ஞானதிருஷ்டியை வழங்கினார். தற்போது நாம் வீடியோவில் நேர்முகக் காட்சிகளைக் காண்பது போல் சஞ்சயன் போர்க்களத்தில் நடப்பவற்றைப் பார்த்து திருதராஷ்டிரனுக்கு கூறினார்.

குருஷேத்திரத்தில் இருபகுதி சேனைகளும் அணிவகுத்து நின்று சங்குகள் முழங்கி யுத்தம் ஆரம்பமானது. அர்ஜுனன் ரதத்தை எதிரணியினரின் படைநடுவே நிறுத்துமாறு கிருஷ்ணனிடம் வேண்டினான். கிருஷ்ணர் இரதத்தை பிதாமகர் பீஷ்மர், குரு துரோணாச்சாரியர் மற்றும் உறவினர்கள் பலர் சூழ்ந்திருக்கும் பகுதியில் நிறுத்தினார்.

எதிரணியினரின் படைபலம் மற்றும் அங்கு முன்னிலை வகிக்கும் பிதாமகர், குரு மற்றும் உறவினர்களைப் பார்த்த அர்ச்சுனன் கலங்கிய நிலையில் தன்னால் போரிட முடியாது எனத் தேர்த்தட்டில் உட்கார்ந்து விட்டான். அவனது கலகத்தைப் போக்கி, உண்மையை, அவனது கடமையை, தர்மத்தை உணர்த்துவதற்காக கிருஷ்ணர் வழங்கிய உபதேசங்களே "பகவத்கீதை" என மகாபாரதத்தின் மத்தியில் (700) எழுநூறு சுலோகங்களைக் கொண்டுள்ள பகுதியாகும். இவை வியாச பகவானால் (18) பதினெட்டு அத்தியாயங்களாகத் தொகுக்கப்பட்டுள்ளன.

முதலாவது அத்தியாயத்தில் அர்ஜுனன் தான் போரிட மறுத்தமைக்கான காரணங்களை எடுத்துப் பலவாறாகக் கூறி புலம்புகின்றான். இரண்டாவது அத்தியான ஆரம்பத்திலும் புலம்பல் தொடர்கின்றது. இவையெல்லாவற்றையும் கேட்டும் கிருஷ்ணர் மௌனம் சாதித்தார். இதனைத் தாங்க முடியாத அர்ஜுனன் நான் வேதனையில் துடிக்கின்றேன். நீ ஏன் மௌனமாக இருக்கின்றாய்? எனக்கு ஒன்றும் தெரியவில்லை. உன்னிடம் சரணாகதி அடைகின்றேன். நான் என்ன செய்ய வேண்டும் என்பதைக் கூறு என்று கேட்டான்.

அதன் பின்னரே கிருஷ்ணர் இவ்வுடலுடன் கூடிய வாழ்வின் நிலையாமையையும் அதனுள் இருந்து இயக்கும் ஆத்மாவின் நிலையான தன்மையையும் எடுத்துக் கூறினார். தொடர்ந்து தர்மத்தை நிலைநாட்ட அதர்மத்தை அழிக்க போரிடுவது ஷத்திரியனின் சுயதர்மம் என்பதை உணர்த்தியதுடன் தனது உண்மை நிலையையும் அதாவது தானே எல்லாம்வல்ல பரம்பொருள் என்பதையும் உணர்த்தினார்.

மேலும் கடமைகளை எவ்வாறு என்ன மனப்பாங்குடன் செய்ய வேண்டும் என்பதை உபதேசித்த கிருஷ்ண பகவான் மனிதப் பிறவியின் இறுதி இலக்கு என்ன? அதனை எப்படி அடையலாம் என்பன பற்றி விரிவாக உபதேசித்தார்.

மொத்தமாக ஒரு மனிதன் தன் வாழ்வில் கடைப்பிடித்து ஒழுக வேண்டிய அத்தனை தர்மங்களையும் விரிவாக விளக்கியுள்ளார்.

அவ்வுபதேசம் அர்ஜுனனுக்கு மட்டுமல்ல அர்ச்சுனன் போல் வாழ்வில் தடுமாறும் எம் அனைவருக்குமான உபதேசமாகக் கொண்டு அதனை முறைப்படி கற்று ஒழுகுவோமானால் மண்ணில் வாழ்வாங்கு வாழ்ந்து மனிதப் பிறவியின் இலக்கை எட்டலாம்.

இதனை கற்றுணர்ந்த குரு மூலம் கற்பதே சிறந்தது. இப்பணியை சின்மயா மிஷன் உலகளாவிய ரீதியில் சுவாமிகள் பிரம்மச்சாரிகள் மூலம் செய்து வருகின்றது.

அந்தவகையில் யாழ். சின்மயா மிஷனில் பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 7.45 - 8.45 இற்கும் பிரதி திங்கட்கிழமைகளில் மாலை 4.30 - 5.30 வரையும் சுவாமி கீதை விளக்கவுரை வகுப்புகள் இலவசமாக நடத்தப்படுகின்றன. ஆர்வலர்கள் அனைவரும் கலந்து பயன்பெறுமாறு யாழ்.சின்மயாமிஷன் அழைக்கின்றது.

ச.ஓங்காரரூபி






வலி.தெற்கு பிரதேச சபை உறுப்பினர் வைத்தியர் ஆ.திருநாவுக்கரசு, பிரதேச சபை ஊதியத்திலிருந்து பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை வழங்கிவருகிறார். அந்த வகையில் அண்மையில் புன்னாலைக்கட்டுவன் கணேசா முன்பள்ளி மற்றும் கப்பன் புலம் பாரதி முன்பள்ளிகளைச் சேர்ந்த சிறார்களுக்கு காலணிகள், புத்தகப்பைகள், கற்றல் உபகரணங்கள் என்பவற்றை வழங்கினார்.

(படங்கள்- இளவாலை செய்தியாளர்)

# இரணைமடுக்குளத்தின் நீர்மட்டம் உயர்வு 14 வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளன



(முறிகண்டி)

கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் நீர்மட்டம் வெகுவாக உயர்வடைந்துள்ள நிலையில் 12 வான் கதவுகள் திறக்கப்பட்டுள் ளன.

தொடர்ச்சியாக வருகை தரும் நீரினால் இரணைமடுக்குளத் தின் நீர்மட்டம் நேற்றுக்காலை வாசிப்பின் பிரகாரம் 35.6 அங் குலமாக உயர்ந்துள்ளது.

தொடர்ந்தும் நீர் வருகை தரு கின்றமையால் மேலும் வான் கதவுகள் உயர்த்தப்படும் சாத் தியமும் உள்ளன.

நான்கு வான் கதவுகள் 01"00" அடியாகவும், இரண்டு வான் கதவுகள் 01"-06" அடி யாகவும், இரண்டு வான் கத வுகள் 02"-00" அடியாகவும், இரண்டு வான் கதவுகள் 02"-06" அடியாகவும், இரண்டு வான் கதவுகள் 00"06" அடியாகவும் திறந்து விடப்பட்டுள்ளன.

இரணைமடுக் குளத்தின் வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ள நிலையில் அப்பகுதியில் பாது காப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

பொலிஸாரும் படையினரும் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட் டுள்ளனர்.

இதேவேளை வெள்ளத்த னால் பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்ந்தும் பாதுகாப்பு அமை விடங்களில் தங்க வைக்கப் பட்டுள்ளனர். இவர்களுக்கான உணவுமற்றும்சுகாதாரம்உள்ளிட் டவற்றை மாவட்ட இடர் முகா மைத்துவ நிலையம் வழங்கியுள் ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-100)




# பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி வழங்கிவைப்பு




(நெளுக்குளம்)

வவுனியா மகிழங்குளம் கிராம உத்தியோகத்தர் பிரிவி லுள்ள புதிய வேலவர் சின் னக்குளம் போன்ற பகுதிகளில் வசிக்கும் 52 குடும்பத்தினர் நிலவும் சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு பாதிக்கப்பட்டவர் களுக்கு தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் சந்தி ரகுமார் கண்ணனின் ஒழுங்கு படுத்தலில் உதவிகள் வழங்கி வைக்கப்பட்டன. (9-299)

# தண்ணிமுறிப்பு குளத்தின் 3 வான்கதவுகள் திறப்பு



(நெளுக்குளம்)

முல்லைத்தீவு தண்ணி முறிப்பு குளத்தின் மூன்று வான்கதவுகள் மூன்று அடி அளவில் நேற்றுமுன்தினம் காலை திறக்கப்பட்டன.

தண்ணிமுறிப்புக் குளத் தின் நீரேந்து பகுதிகளில் தொடர்ச்சியாக பெய்து வரும் கனமழை காரணமாக குளத் திற்கு நீர் அதிகளவு வருவ தனால் நீர் மட்டம் 21 அடியாக உள்ள நிலையில் மூன்று வான் கதவுகளும் திறக்கப்பட்டன.

எனவே தண்ணிமுறிப்பு குளத்தின் வான் நீர் வெளி யேறும் பகுதிகளில் வாழ்கின்ற பொது மக்கள் முன்னெச்சரிக் கையாக இருக்குமாறும் கோரப் பட்டுள்ளனர். (ஜ-299)

# மணியம்குளத்தைப் பாதுகாக்கும் முயற்சியில் பொது மக்கள்



(அக்காரயன்)

கிளிநொச்சி ஸ்கந்தபுரம் மணியம்குளத்தைப் பாதுகாக் கும் முயற்சியில் பொது மக்கள் ஈடுபட்டனர்.

மாவட்டத்தில் பெய்து வரும் கனமழை காரணமாக சிறிய குளமான மணியம்குளத்திற்கு அதிகளவு நீர் வருகை ஏற்பட்டு அணைக்கட்டுக்கு மேலாக நீர் வழிந்தோட ஆரம்பித்துள்ளது. இந் நிலைமையானது மிகவும் ஆபத்தானது. அணைக்கட்டுக்கு மேலாக நீர் பாய்ந்தோடினால் அணைக்கட்டை உடைத்துவிடும் என்ற நிலையில் கிராமத்தின் பொது மக்கள் ஒன்றிணைந்து மண் மூடைகளை அடுக்கி நீர் வழிந்தோடும் பகுதிகளை தற்காலி கமாகத் தடுத்துள்ளனர். (ஜ-350)

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சுவிஸ் நலிவடைந்தோர் உதவிச்சங்கம் உதவி



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் பெய்து வரும் கனமழை காரணமாக 15 நலன்புரி முகாம்களில் மக்கள் இடம்பெயர்ந்து தங்கியுள்ளனர்.

அந்தவகையில் முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட சுதந்திரபுரம், இருட்டுமடு, நெத்தலியாறு ஆகிய கிராமங்களில் தொடரும் கனமழையால் பாதிக்கப்பட்ட வறிய குடும்பங் களுக்கு உலருணவுப் பொருட்கள் மற்றும் குழந்தைகளுக்கான பால்மா பைக்கற்றுக்கள் போன்றன சுவிஸ் நலிவடைந்தோர் உதவிச்சங்கத்தின் ஊடாக அதன் முல்லைத்தீவு மாவட்டத்தின் தலைவர் கனகசபை விமலதாஸால் வழங்கி வைக்கப்பட்டன. (ஜ-281)

# தொடரும் கனமழையால் மன்னாரில் நெற்பயிர்ச்செய்கை பாதிப்பு

(மன்னார்)

பெய்து வரும் கடும் மழை மற்றும் வெள்ளப் பெருக்கின் காரணமாக மன்னார் மாவட் டத்தில் இதுவரை 5653 ஏக்கர் பெரும்போக நெற்பயிர்ச் செய்கை பாதிப்படைந்துள்ளன.

குறித்த தகவலை மாவட்ட அரசாங்க அதிபர் சி.ஏ.மோகன் றாஸ் உறுதிப்படுத்தியுள்ளனர்.

மேலும் பெரும்போக நெற் பயிர்ச் செய்கையினை பொறுத் தவரையில் மன்னார் மாவட் டத்தில் உள்ள 12 கமநல சேவை கள் நிலையங்களில் உள்ள சகல குளங்களின் வான்களும் பாய்ந்து கொண்டிருக்கின்றன.

இதனால் வெள்ளப் பாதிப் புக்களும் ஏற்பட்டுள்ளன. இது வரை 5653 ஏக்கர் நெற்செய்கை பாதிப்படைந்துள்ளதோடு மேல



திக விபரம் ஒரு வாரங்களில் சமர்ப்பிக்க முடியும் என மாவட்ட அரசாங்க அதிபர் மேலும் தெரி வித்தார். அயல் மாவட்டமான அநுராதபுரம் மாவட்டத்தில் இருந்து நாச்சியார் தீவு என்கின்ற குளத்தின் 7 வான் கதவுகள் திறக் கப்பட்டுள்ள நிலையில் நீர் வந்து கொண்டிருக்கின்றமை குறிப்பி டத்தக்கது. (ஜ-285)

சுதந்திரம்! அது இல்லாத போது நிலம், நீர், சிறப்பு, செல்வாக்கு ஆகிய எது இருந்தும் என்ன பயன்? சுதந்திரம் தான் மனிதனுக்கு முதல் தேவை.- எமர்சன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## உலகத் தூதுவராலயங்களின் திருக்கதவுகளைத் தட்டுங்கள்

மகாபாரதத்தில் தருமருக்கும் சகுனிக்கும் இடையில் நடந்த சூதாட்டத்தில் தருமர் எல்லாவற்றையும் இழந்து விடுகிறார்.

பாஞ்சாலியையும் சூதாட்டத்தில் தருமர் தோற்றுவிட, அவளை கௌரவர் சபைக்கு அழைத்து வருமாறு துரியோதனன் உத்தரவிடுகிறான்.

அந்தோ! வீஷ்மர், துரோணர், விதுரர் உள்ளிட்ட சான்றாண்மைமிக்க பெரியோர்கள் கூடியிருக்கும் சபைக்கு பாஞ்சாலியெனும் திரௌபதி அழைத்து வரப்படுகிறார்.

சால்புடைப் பெரியோர் பார்த்திருக்க, வில்லாண்மைமிக்க பஞ்சபாண்டவர்கள் கைகட்டி வாய்பொத்தி மௌனமாக நிற்க, மாடு நிகர்த்த துச்சாதனன் பாஞ்சாலியின் சேலை பற்றி துகிலுரிகின்றான்.

அச்சமயம் பாஞ்சாலி தன் ஒரு கையால் சேலையைப் பற்றிப் பிடித்தபடி மறுகையை உயர்த்தியவாறு கண்ணா... கண்ணா... காப்பாற்று எனத் துடிக்கிறாள்.

ஆபத்பாந்தவன் வருவதாக இல்லை. துச்சாதனனின் கைப்பலத்துக்கு ஈடுகொடுக்க முடியாத திரௌபதி தன்னால் முடியாதென்ற கட்டத்தில் தன் இரு கரத்தையும் உயர்த்தி கண்ணா என்ற கணமே கண்ணன் பாஞ்சாலியைக் காப்பாற்றுகிறான்.

இந்த இதிகாசக் கதையின் கட்டத்திலேயே ஈழத் தமிழர்களாகிய நாம் நிற்கின்றோம்.

அரசியலமைப்புச் சீர்திருத்தம் வரும். அதன் மூலம் எங்கள் உரிமையை வென்றெடுப்போம் என்பதெல்லாம் பாஞ்சாலி தன் ஒரு கையால் தன் சேலையைப் பற்றிப் பிடித்தது போன்றது.

இனி அதுவும் நடைபெறாது என்றளவில் ஈழத் தமிழர்களும் அவர்கள் சார்ந்த தமிழ் அரசியல் தரப்புகளும் தங்கள் இரண்டு கரங்களையும் உயர்த்தி காப்பாற்றுங்கள் என்று அபயக்குரல் எழுப்புவதுதான் ஒரே வழி.

இதைக்கூறும்போது பாஞ்சாலிக்கு உதவ உலகளந்த கண்ணன் வந்தான். நாங்கள் யாரிடம் அபயமும் அடைக்கலமும் கேட்பது என்று நீங்கள் யாரேனும் கேட்டால்; உலகம் எனும் கடவுளிடம்தான் கையேந்த வேண்டும்.

ஆம், உலகநாடுகளிடம் எங்கள் அவலத்தை எடுத்துரைக்க வேண்டும். எங்கள் இனத்துக்கான உரிமையைத் தருகின்ற மனநிலையில் இலங்கை ஆட்சியாளர்களும் பெரும்பான்மை இன மக்களும் இல்லை என்பதை எடுத்துக் கூற வேண்டும்.

உலகநாடுகள் தலையிடாவிட்டால் எங்களுக்கு எதுவும் கிடைக்காது.

இலங்கை சுதந்திரமடைந்த காலத்தில் இருந்து இன்றுவரை தமிழினம் நாதியற்று வாழுகின்ற அவலம் போக்க, சர்வதேச சமூகம் முன்வர வேண்டும்.

இலங்கை அரசுக்கு அழுத்தமும் காலக்கெடுவும் விதித்து எங்களைக் காப்பாற்ற சர்வதேச சமூகம் முன்வர வேண்டும் என்ற கோரிக்கையோடு உலக நாட்டுத் தூதுவராலயங்களின் திருக்கதவுகளைத் தட்டுங்கள். முடிந்தால் உலக நாட்டுத் தலைவர்களைச் சந்தியுங்கள். ஐ.நா சபையிடம் தஞ்சம் கோருங்கள்.

இதுவே எம் இனத்தைக் காப்பாற்றுவதற்கான ஒரே வழியாகும்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி வழங்கும் போது

## மாவட்ட இடர் முகாமைத்துவ பிரிவுடன் கலந்துரையாடி உதவி வழங்குங்கள்

### கிளி. மாவட்ட செயலர் சுந்தரம் அருமைநாயகம்

(கிளிநொச்சி)

மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கான உதவிகளை வழங்கும் போது மாவட்ட இடர் முகாமைத்துவ பிரிவுடன் கலந்துரையாடி வழங்குமாறு கிளிநொச்சி மாவட்ட செயலாளர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் தொடர்ச்சியாக பெய்த கன மழை காரணமாக பல குடும்பங்கள் நான்கு பிரதேச செயலாளர் பிரிவிலும் பாதிக்கப்பட்டுள்ளனர் இது தொடர்பாக நேற்று கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலினை தொடர்ந்து இடம்பெற்ற ஊடக சந்திப்பில் மாவட்ட செயலாளர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கிளிநொச்சி மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள அனர்த்தம் காரணமாக இதுவரை 7225 குடும்பங்களை சேர்ந்த 23344 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் இதில் 27 பாதுகாப்பு அமைவிடங்களில் 2200 குடும்பங்கள் தங்க வைக்கப்பட்டு அவர்களுக்கான சமைத்த உணவு, குடிநீர் மற்றும் சுகாதார வசதிகள் ஏற்படுத்தி கொடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

தொடர்ந்து மாலையில் மழைவீழ்ச்சி பதிவாகும் சந்தர்ப்பத்தில் இடப்பெயர்வுகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் எனவும் தெரிவித்தார். இரணைமடு குளமானது 36 அடி கொள்ளளவினை கொண்டது. ஆனால் தற்போது அந்த அளவினை அண்மித்துள்ளது. இதனால் தற்போது திறந்து விடப்பட்டுள்ள 14 வான் கதவுகளும் தொடர்ந்தும் திறந்து விடப்பட்டுள்ள நிலையில் நீரின் வரவு அதிகரித்து காணப்படுகின்றது. இதனால் வான் கதவுகளின் நீர் வெளியேறும் சந்தர்ப்பம் அதிகரிக்கப்படலாம். இதன் காரணமாக மக்கள் அவதானமாக செயற்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

அவ்வாறான சந்தர்ப்பம் தொடர்பில் முன்னாயத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அதற்கு அனைவரின் ஒத்துழைப்பும் தேவைப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்தோடு தங்கவைக்கப்பட்டுள்ள மக்களுக்கு தறப்பால், நிலவிரிப்புக்கள், குழந்தைகளுக்கான பால் மாக்கள், சுகாதார பொதிகள், பாய்கள், போர்வைகள், பொதிசெய்யப்பட்ட உணவுகள் போன்றவை மிக முக்கிய தேவையாக காணப்படுவதாகவும், அதனை அரச சார்பற்ற நிறுவனங்கள், தொண்டு நிறுவனங்கள் ஏனையவர்கள் என அனைவரும் மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவின் உதவிப்பணிப்பாளருடன் தொடர்பினை ஏற்படுத்தி வழங்க முன்வர வேண்டும்என தெரிவித்தார்.

சாதாரண தரப் பரீட்சை எழுதும் மாணவர்களுக்கான ஏற்பாடுகள் மாற்றுவீதி ஏற்பாடுகள் சுகாதார வசதிகள் போன்றவை உரிய அதிகாரிகள் மற்றும் முப்படையினரின் உதவிகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக தெரிவித்ததுடன் பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பாக பொலிஸாரிடம் அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் நேற்றைய ஊடக சந்திப்பில் தெரிவித்தார். (ம-3.10.100)

## மாணவிகளுடன் சேட்டை விட்டவர் பொலிஸாரால் கைது

### மன்னார் அடம்பனில் சம்பவம்

(மன்னார்)

மன்னார் அடம்பன் பகுதியை சேர்ந்த இரு மாணவிகள் நேற்று முன்தினம் தனியார் வகுப்புக்கு சென்றுவிட்டு வீடு திரும்பிய நிலையில் இனந்தெரியாத நபர் ஒருவரால் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்க முயன்ற நிலையில் இரு மாணவிகளும் கிராம மக்களால் காப்பாற்றப்பட்டு மன்னார் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த விடயம் தொடர்பாக மேலும் தெரிய வருகையில், அடம்பன் சாலமன் பகுதியை சேர்ந்த உயர்தரம் கற்கும் இரு மாணவிகள் நேற்று முன்தினம் மாலை நேர வகுப்பு முடிவடைந்து வீடு சென்ற வேளையில் குறித்த பகுதியில் நபர் ஒருவர் தகாத விதமாக நடந்து கொண்டதுடன் ஒரு மாணவியைத் தாக்கியும் கழுத்து மற்றும் கன்னத்தில் கடித்து குளத்தில் மூழ்கடிக்கவும் முயன்றுள்ளார்.

மற்றைய மாணவி தப்பித்து சென்ற நிலையில் கிராம மக்களின் உதவியுடன் மற்ற மாணவியை மீட்டுள்ளனர். குறித்த சந்தேக நபர் கிராம மக்களை பார்த்தவுடன் குளத்தினூடாக தப்பித்து சென்ற நிலையில் அடம்பன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (ம-3,285)

மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு

## காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி கோரி முல்லையில் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு, வடக்கு கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி கோரி நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை முல்லைத்தீவில் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப் படவுள்ளது.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் சங்கத்தின் ஏற்பாட்டில் அவர்கள் ஆரம்பித்த தொடர் போராட்டத்தின் 1008 ஆவது நாளான நாளை மறுதினம் காலை 10 மணிக்கு முல்லைத்தீவு வீரா கோவிலில் இருந்து ஆரம்பமாகும் பேரணி முல்லைத்தீவு மாவட்ட செயலகம் வரை சென்று அங்கு உரிமைக்கான போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்த போராட்டத்தில் எட்டு மாவட்டங்களை சேர்ந்த காணாமல் ஆக்கப்பட்டவர்களுடைய உறவுகளும் கலந்து கொள்ளவுள்ளனர். குறித்த போராட்டத்தில் அனைத்து சமூக அமைப்புக்களும் மக்கள் பிரதிநிதிகளும் பல்கலைக்கழக மாணவர்களும் கலந்து கொண்டு ஆதரவு வழங்குமாறு வடக்கு கிழக்கு மாகாணங்களில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் சங்கத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-3.9)

## நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

கலைமாமணி இராசையா ஸ்ரீதரன் எழுதிய "சிறுவர் கதைக் கொத்து" நூல் வெளியீடு இன்று 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணியளவில் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, ஈழத்துச் சீரடி சாயி மந்திரில் இடம்பெறும். (இ-5)

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

தீங்கு நினைத்தவருக்கும் நல்லதையே எண்ணுங்கள். அதைவிடக் கடுமையாக அவர்களை தண்டித்துவிட முடியாது. -திருவள்ளுவர்

பெண்களுக்கெதிரான வன்முறை ஒழிப்பு வாரம்

16
2019

யாழ். சமூக செயற்பாட்டு மையம்
(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)
பெண்களின் வாழ்வியல் முன்னேற இலகுவான பொறிமுறைகளை வகுப்போம். அவர்களுக்கான தடைகளை அகற்றி சுமுகமான பாதையைக் காட்டுவோம்.

JSAC


## இயேசுநாதரின் திருவாக்கியங்கள்



- இறைவன் நம்மிடம் அன்பு கொண்டிருப்பது போல் நாமும் பிறரிடம் அன்பு கொண்டவராக இருக்க வேண்டும்.
- உன் சகோதரர்கள் ஏழ்மைப்பட்டு இளைத்து போனால், அவர்களுக்கு உதவ வேண்டும். அவர்கள் அந்நியர் போலும் விருந்தினர் போலும் உன்னோடு வாழட்டும்.
- நீ நெருங்கிக் கொண்டிருக்கும் பாதாளத்தில் எவரும் செயல்புரிவதுமில்லை, சிந்தனை செய்வதுமில்லை.நீங்கள் அச்சத்தோடும், நடுக்கத்தோடும் உங்கள் மீட்புக்காக உழைத்து வாருங்கள்.
- அழிந்து போகும் உணவுக்காக உழைக்க வேண்டாம். நிலை வாழ்வு தரும் அழியாத உணவுக்காகவே உழையுங்கள்.
- கடவுளுக்காக நீங்கள் உழைப்பது வீண் போகாது என்பதை அறிந்து, கடவுளின் பணியை இன்னும் அதிகமாக எப்போதும் செய்யுங்கள்.
- நீங்கள் நன்மை செய்வதில் ஞானம் உடையவர்களாயும், தீமை என்றால் என்ன என்றே தெரியாத கபடமற்றவர்களாயும் இருக்க வேண்டும்.
- தூங்கிக் கொண்டேயிருப்பதை நாடாதே. கண் விழித்திரு. உனக்கு வயிறார உணவு கிடைக்கும்.

# தோற்றாலும் சிறந்த அணி என்ற பெயரோடு வாருங்கள்

## மே.தீவுகளுக்கு லாரா வேண்டுகோள்



இந்தியாவிற்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணி, தொடரில் வெற்றிபெறாவிட்டாலும், சிறந்த அணி என்ற பெயரோடு வெளியேற வேண்டும் என அணியின் முன்னாள் ஜாம்பவான் பிரையன் லாரா தெரிவித்துள்ளார்.

மேற்கிந்தியத் தீவுகள் அணி, இந்தியாவிற்கு கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டு மூன்று போட்டிகள் கொண்ட இருபது-20 தொடர், மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடுகின்றது.

இந்நிலையில் இவ் எதிர்பார்ப்பு மிக்க தொடர் குறித்து பிரையன் லாரா கருத்து தெரிவிக்கையில், "கிரன் பொல்லார்ட் அணியை கட்டமைப்பார். இந்தியாவில் இந்தியாவை எதிர்த்து விளையாடுவது மிகவும் சவாலான காரியம். அவர் இந்தியாவைவிட்டு வெளியேறும்போது வெற்றி பெற வேண்டும் என்ற அவசியம் இல்லை.

தொடருக்குப்பின் அவர்கள் சிறந்த அணி என்ற பெயரோடு வெளியேற வேண்டும்.

பொல்லார்ட், மேற்கிந்தியத் தீவுகள் அணிக்காக அதிக அளவில் விளையாடாமல் இருக்கலாம். ஆனால், உலகளவில் பெரும்பாலான இருபது-20 லீக்கில் விளையாடியுள்ளார். இதனால் அவரை அணித்தலைவராக நியமித்ததை மோசமானதாகக் கருதவில்லை" எனக் கூறினார். (ஐ)



**சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் பிரதம கராத்தே ஆசிரியர் சென்சே எஸ்.விஜயராஜ் கௌரவிக்கப்பட்டார். அண்மையில் ஜப்பான் நாட்டில் நடைபெற்ற சர்வதேச ரீதியிலான ஆசிரியர்களிற்கான கராத்தே சுற்றுப்போட்டியில் வெண்கலப்பதக்கத்தைப் பெற்றுக்கொண்டார். இவருக்கு திணைக்கள பொறுப்பதிகாரியால் பதக்கமும் வெற்றிக்கேடயமும் வழங்கி கௌரவிக்கப்பட்டது. இந்நிகழ்வு விசுவமடு பணியகத்தில் கடந்த 3 ஆம் திகதி நடைபெற்றது.**

# இருபது-20 கிரிக்கெட் தொடரில் விளையாட முஷ்டாபிசுர் ரஹ்மானுக்கு அனுமதி



ஐ.பி.எல்.இருபது-20 கிரிக்கெட் தொடரின் ஏலத்தில், வேகப்பந்து வீச்சாளரான முஷ்டாபிசுர் ரஹ்மான் கலந்து கொள்ள பங்களாதேஷ் கிரிக்கெட் சபை அனுமதி அளித்துள்ளது.

காயத்திலிருந்து மீண்டுள்ள முஷ்டாபிசுர் ரஹ்மான், மீண்டும் காயம் ஏற்படாத வண்ணம் தனது வேலைப்பளுவை நிர்வகித்துக் கொள்வார் என்பதால், 2020 ஆம் ஆண்டு தொடருக்கான ஏலத்தில் கலந்து கொள்ள அனுமதி அளித்துள்ளது.

பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளரான முஷ்டாபிசுர் ரஹ்மான், சன்ரைசர்ஸ் ஐதராபாத் அணிக்காக சம்பியன் கிண்ணத்தை வென்று கொடுத்துள்ளார்.

இதன்பிறகு மும்பை இந்தியன்ஸ் அணிக்காக விளையாடிய அவர், கடந்த தொடரில் காயம் காரணமாக விளையாடவில்லை.

2020 ஆம் ஆண்டு தொடருக்கான ஏலம் எதிர்வரும் 19 ஆம் திகதி கொல்கத்தாவில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த ஏலத்தில் கலந்து கொள்ளும் வீரர்கள் தங்களது பெயர்களை எதிர்வரும் 9 ஆம் திகதி மாலை 5 மணிக்கு முன்னதாக பதிவு செய்ய வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# அவுஸ்திரேலிய மண்ணில் தோற்றது கிரிக்கெட் பெருமையை புண்படுத்தியுள்ளது

## அசார் அலி வருத்தம்



அவுஸ்திரேலிய மண்ணில் டெஸ்ட் தொடரைத் தோற்றது எமது கிரிக்கெட் பெருமையை புண்படுத்தியுள்ளது என பாகிஸ்தான் டெஸ்ட் அணியின் தலைவர் அசார் அலி தெரிவித்தார்.

ஐ.சி.சி.டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் ஒரு அங்கமாக நடைபெற்ற இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுவதற்காக அவுஸ்திரேலியா சென்ற பாகிஸ்தான் அணி, இரண்டு போட்டிகளிலும் இன்னிங்ஸ் தோல்வியைச் சந்தித்தது.

சப்ராஸ் அஹமட்டின் அணித் தலைவர் பதவி நீக்கத்திற்கு பிறகு, பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் அணியின் பொறுப்பை ஏற்றார் அசார் அலி.

இந்த பெரும் எதிர்பார்ப்புடன் சாதிப்பார் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், இந்த படுதோல்வியானது அவர் மீது கடும் விமர்சனத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் இதற்கு பதிலளித்த அசார் அலி, "அவுஸ்திரேலியாவுக்கு எதிராக இரண்டு போட்டிகளிலும் நாங்கள் பெற்ற தோல்வியின் விதம் மிகவும் ஏமாற்றம் அளிக்கிறது. அவுஸ்திரேலியா மண்ணில் தோற்றது எங்களது கிரிக்கெட் பெருமையை புண்படுத்தியுள்ளது. இதை ஏற்றுக்கொள்ள கஷ்டமாக உள்ளது.

நாங்கள் அவுஸ்திரேலியாவுக்குச் சரியான தயார்படுத்துதலுடனும் நேர்மறையான மன நிலையுடனும் தான் சென்றோம். இரண்டு போட்டிகளிலும் இன்னிங்ஸ் தோல்வி அடைந்தது ஏற்றுக் கொள்ளக்கூடியது அல்ல. இதற்காக நான் 'சாக்குப்போக்கு சொல்ல விரும்பவில்லை" என மேலும் தெரிவித்தார். (ஐ)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# இலங்கையிலும் இருபது-20 கிரிக்கெட் திருவிழா



இலங்கையில் கடந்த சில வருடங்களாக இழுத்தடிப்பு செய்யப்படும் இருபது-20 கிரிக்கெட் திருவிழாவான 'லங்கன் ப்ரீமியர் லீக்' தொடர் அடுத்த ஆண்டு நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

இலங்கை கிரிக்கெட் சபையால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இத்தொடர் அடுத்த ஆண்டு ஒகஸ்ட் மாதம் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளதாக இலங்கை கிரிக்கெட் சபையின் தலைவரான ஷம்மி சில்வா தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு வீரர்களை உள்ளடக்கிய லங்கன் ப்ரீமியர் லீக் கிரிக்கெட் தொடர், நீண்டதொரு சர்ச்சைக்குப் பின்னர் இந்த ஆண்டு நடத்த திட்டமிடப்பட்டிருந்தது.

ஆனால் அனுசரணை, வெளிநாட்டு வீரர்களின் தேர்வு எனப் பல்வேறு விடயங்களில் எழுந்த குழப்ப நிலையில், இத்தொடரை நடத்துவதில் சிக்கல் நிலை எழுந்தது. தற்போது இந்நிலைமைகள் அனைத்தும் சரிசெய்யப்பட்டு அடுத்த ஆண்டு இத்தொடர் நடைபெறுமென இலங்கை கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

இந்தத் தொடரில் 5 அல்லது 6 அணிகள் பங்கேற்கும் என எதிர்பார்க்கப்படுவதுடன், தொடரின் பணிப்பாளராக கடந்த வருடம் நியமிக்கப்பட்டிருந்த ரசல் ஆர்னல்ட் மீண்டும் நியமிக்கப்படுவார்.

இதேவேளை, இலங்கை கிரிக்கெட் சபை வருடாந்தம் நடத்தும் உள்ளூர் ப்ரீமியர் லீக் கிரிக்கெட் தொடரில், அணிகள் குறைக்கப்பட்டு நடத்தப்படும் எனவும் ஷம்மி சில்வா மேலும் தெரிவித்தார். (ஐ)

# சர்தார் பட்டேல் பெயரில் மிகப்பெரிய கிரிக்கெட் மைதானம்



உலகின் மிகப்பெரிய கிரிக்கெட் மைதானம் எதிர்வரும் மார்ச் மாதத்தில் திறக்கப்படவுள்ளது.

இந்தியாவின் குஜராத் மாநிலம் அஹமதாபாத்தில் நிர்மாணிக்கப்பட்டு வரும் இந்த மைதானம் ஒரு இலட்சம் இருக்கை வசதிகளைக் கொண்டதும், அவுஸ்திரேலியாவின் மெல்பேர்ன் மைதானத்தை விட மிகப் பெரியதும் ஆகும்.

இந்த மைதானத்தில் மொத்தம் 11 ஆடுகளங்கள் அமைக்கப்படுகிறன. அத்துடன், மழை பெய்தால் 30 நிமிடத்திற்குள் தண்ணீர் வெளியேறும் வகையில் நவீன வடிகால் வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

அடுத்த ஆண்டு மார்ச் மாதத்திற்குள் இந்த மைதானம் தயாராகி விடும் என குஜராத் கிரிக்கெட் சங்கம் தெரிவித்துள்ளது.

சர்தார் பட்டேல் பெயரிலான இந்த புதிய மைதானத்தில் மார்ச் மாதம் ஆசிய லெவன்-உலக லெவன் அணிகளுக்கு இடையே கண்காட்சி கிரிக்கெட் போட்டியை நடத்த இந்திய கிரிக்கெட் நிறுவனம் திட்டமிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## மழையுடனான...

மண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சப்ரகமுவ, ஊவா மாகாணங் களிலும் காலி, மாத்தறை, களுத்துறை மாவட்டங்களிலும் 50 தொடக்கம் 70 மில்லிமீற்றர் வரையிலான மழைவீழ்ச்சி பதிவாகக்கூடுமென வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் சந்தர்ப்பங்களில் பலத்த காற்று வீசக்கூடும் என்பதுடன் இடி, மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய சேதங்களை குறைத்துக்கொள்ள தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (ம-3)

## மக்களைப் பார்...

குட்பட்ட ஊஞ்சல்கட்டி மற்றும் வெடிவைத்தகல் ஆகிய கிராமங்களின் கிராமசேவகராகப் பணியாற்றும் செல்வராஜா சுபாஸ் என்னும் கிராமசேவகரின் இரு பிரிவுகளும் மழையால் பாதித்த நிலையில் ஊஞ்சல் கட்டி பிரதேச மக்களை பார்வையிட்ட பின்னர் வெடிவைத்தகல் கிராமஅலுவலர் பிரிவில் உள்ள கலாபோகஸ்வெவ பகுதிக்கு மோட்டார் சைக்கிளில் சென்ற போது கஜபாபுர பகுதியில் பாய்ந்து சென்ற ஆற்றில் அடித்துச் செல்லப்பட்டார்.

இவ்வாறு கிராம சேவகர் அடித்துச் செல்லப்பட்ட சமயம் அந்த ஆற்று நீரில் மீன்பிடித்துக் கொண்டிருந்தவர்கள் அவதானித்துள்ளனர். இதனால் உடனடியாக மூவர் ஆற்றில் குதித்து நீண்ட போராட்டத்தின் மத்தியில் கிராமசேவிகரை மீட்டனர்.

இதன்போது கிராம சேவகர் காயமடைந்ததுடன், அவரது உடைமையில் இருந்த கைத்தொலைபேசி மற்றும் பேர்ஸ் உட்பட்ட அனைத்து உடமைகளும் அடித்துச் செல்லப்பட்ட நிலைமையிலேயே மீட்கப்பட்டார். மீட்கப்பட்ட கிராமசேவகர் சிகிச்சைக்காக வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேநேரம் மோட்டார் சைக்கிள் நீண்ட நேரத்தின் பின்னர் மீட்கப்பட்டமையினால் அது பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. (ம-3.250.299)

## ஒரே பிரசவத்தில்...

விஜேதுங்க என்பவரது மனைவி தேவிகா உதயங்கனி ஜயசூரிய முதல் பிரசவத்திலேயே 4 ஆண் குழந்தைகளை பெற்றெடுத்துள்ளார்.

பிரசவம் பேராதனை வைத்தியசாலையில் நடந்துள்ளது. தாயும் குழந்தைகளும் வீட்டுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளதுடன் அவர்கள் ஆரோக்கியமாக இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பிறந்துள்ள நான்கு ஆண் குழந்தைகளுக்கு ஹிருத், வினுத், கெனுத் மற்றும் சனுத் என பெயரிட்டுள்ளதாக தந்தையான நளிந்த லக்சான் விஜேதுங்க தெரிவித்துள்ளார்.

நான்கு குழந்தைகளுக்கும் தாயால் பாலூட்ட முடியாது என்பதால், குழந்தைகளுக்கு பால் மா மூலம் பாலூட்டி வருவதாகவும் அந்த பால்மா ரின் ஒன்றின் விலை ஆயிரத்து 500 ரூபாய் எனவும் அது ஒரு நாளுக்கே போதுமானது எனவும் அவர் கூறியுள்ளார்.

தாயாருக்கு விசேட பால் மா வழங்கப்பட்டு வருகிறது. ஒரே நேரத்தில் பிறந்த நான்கு குழந்தைகளை வளர்ப்பது என்பது மிகப் பெரிய பொறுப்பு என்ற போதிலும் அந்த பொறுப்பை தைரியத்துடன் நிறைவேற்ற சகல நடவடிக்கைகளும் எடுப்பதாகவும் நளிந்த லக்சான் விஜேதுங்க குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## 4 வயதுச் சிறு...

கிழமை காலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு மீட்கப்பட்ட சிறுவனின் சடலம் திருகோணமலை பொது ஆதார வைத்திய சாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

அத்தோடு குறித்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை திருகோணமலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-3)

## ஒரு வகையான...

நாட்டின் சில இடங்களில் ஒரு வகையான காய்ச்சல் பரவும் அபாயம் காணப்படுவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நாட்டின் 22 மாவட்டங்களில் தற்போது சீரற்ற காலநிலை நிலவி வருகின்றது.

இதன்காரணமாக பல்வேறு பகுதிகள் வெள்ள நீரில் மூழ்கியுள்ளதுடன், அதிகளவானவர்கள் இடம்பெயர்ந்து தற்காலிக முகாம்களில் தங்கியுள்ளனர்.

இந்நிலையிலேயே சீரற்ற காலநிலை காரணமாக ஒரு வகையான காய்ச்சல் பரவும் அபாயம் காணப்படுவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தொற்று நோய்கள் ஒழிப்புப் பிரிவின், தொற்றுநோய்கள் தொடர்பான பிரதான் வைத்தியர் சுதத் சமரவீர இந்த எச்சரிக்கையினை விடுத்துள்ளார்.

இருமல், வயிற்றுவலி, தலைவலி, உடல் சோர்வு போன்றவையே இந்த காய்ச்சலின் அறிகுறிகள் எனவும் அவர் தெரிவித்துள்ளார். இவ்வாறான அறிகுறிகள் காணப்படுமாயின் உடனடியாக வைத்திய ஆலோசனைகளை பெற்றுக் கொள்ளுமாறும் அவர் வலியுறுத்தியுள்ளார். (ம-3)

## மரண அறிவித்தல்

### திருமதி சிவபாக்கியம் கந்தசாமி



கரணவாய் மத்தியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவபாக்கியம் கந்தசாமி நேற்று (07.12.2019) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - முத்தம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - முத்தம்மா தம்பதியரின் மருமகளும் கந்தசாமியின் மனைவியும் மயூரன், சிந்துஜா, பானுஜா, ஆகியோரின் தாயாரும் மேனகா, கஜானன், நிரஞ்சன் ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.12.2019) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் எள்ளங்குளம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

குருந்தடி தோட்டம்,
கரணவாய் மத்தி, கரவெட்டி.

(1418)

தகவல்:
குடும்பத்தினர்

## அரசுடைமையாக்...

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உயர்கல்வி அமைச்சுக்கு உத்தரவிட்டுள்ளார்.

சவூதி அரேபியாவின் அமைப்புக்களின் நிதியுதவியுடன் கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் ஹிஸ்புல்லாவினால் மட்டக்களப்பில் இந்த ஷர்யா பல்கலைக்கழகம் நிர்மாணிக்கப்பட்டது. இந்தப் பல்கலைக் கழகத்திற்கு எதிராக பலவழிகளிலும் எதிர்ப்புக்கள் வெளியிடப்பட்ட போதிலும் அரசுடமையாக்குவதற்கு இடமளிக்க முடி யாது என்ற நிலைப்பாட்டில் ஹிஸ்புல்லா தொடர்ந்தும் இருந்து வந்தார்,

இந்த நிலையிலேயே மேற்படி பல்கலைக்கழகத்தை அரச பல்கலைக்கழகமாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு உயர்கல்வி அமைச்சின் அதிகாரிகளை நேற்று முன்தினம் சந்தித்த ஜனாதிபதி பணித்திருப்பதாக தகவல்கள் கூறுகின்றன. (ம-3)

## நாடு முழுவதும்...

குடும்பங்களை சேர்ந்த ஒரு இலட்சத்து 70 ஆயிரத்து 709 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வட மாகாணத்தில் 17 ஆயிரத்து 62 குடும்பங்களை சேர்ந்த 55 ஆயிரத்து 453 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வடமேல் மாகாணத்தில் ஆயிரத்து 486 குடும்பங்களை சேர்ந்த 5 ஆயிரத்து 87 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஊவா மாகாணத்தில் 483 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 59 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மத்திய மாகாணத்தில் 330 குடும்பங்களை சேர்ந்த ஆயிரத்து 291 பேரும் சப்ரகமுவ மாகாணத்தில் 61 குடும்பங்களை சேர்ந்த 242 பேரும் தென் மாகாணத்தில் 49 குடும்பங்களை சேர்ந்த 189 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களுடன் பொலநறுவை மாவட்டத்திலும் நிலவும் மழையுடன் கூடிய காலநிலை தொடரும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

நாட்டில் நிலவும் மழையுடன் கூடிய காலநிலையுடன் சில நீர்த்தேக்கங்களின் வான்கதவுகள் தொடர்ந்தும் திறக்கப்பட்ட நிலையிலேயே உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி - இரணைமடு குளத்தின் 4 வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதன் காரணமாக, நீர்த்தேக்கத்தின் தாழ்நிலப் பகுதியில் வாழும் மக்கள் அவதானத்துடன் இருக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, கலா ஓயாவின் இரண்டு வான் கதவுகளும் இராஜாங்கனை நீர்த்தேக்கத்தின் 8 வான்கதவுகள் தொடர்ந்து திறந்த நிலையில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக குறித்த நீர்த் தேக்கங்களின் தாழ்நிலப் பகுதிகளில் வாழும் மக்கள் அவதானத்துடன் இருக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ம-3)

## இரணைமடுக்குளத்தின் நீர்மட்டத்தை 35 அடியாக வைத்திருக்க தீர்மானம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி இரணைமடு குளத்தின் நீர் மட்டத்தை 35 அடியாக வைத்திருப்பதற்கு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஆலோசனைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நேற்று காலை பத்து மணிக்கு அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தின்போதே இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ம-3)

## 269 ஹெக்டேயர்..

மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதி பதவியில் இருந்தபோது சீன ஜனாதிபதி ஷீ ஜிங் பின்க் தலைமையில் இந்த துறைமுக நகர திட்டத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

நேற்றைய நிகழ்வின்போது, துறைமுக நகரில் முதலிட வருமாறு முதலீட்டாளர்களிற்கு மகிந்த அழைப்பு விடுத்தார். (ம-3)


செவன

| | |
|---|---|
| திகதி | 2019/12/07 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 242 |

B 16 31 64 68

ஜாதிக சம்பத

| | |
|---|---|
| சீட்டிழுப்பு திகதி | 07.12.2019 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0998 |

ஆங்கில எழுத்து U — வெற்றி இலக்கங்கள் 5 5 4 7 4 7

தேசிய லொத்தர் சபை

கொவிசெத — உத்தியோகபூர்வ முடிவுகள்

| | |
|---|---|
| சீட்டிழுப்பு திகதி | 07-12-2019 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2323 |

ஆங்கில எழுத்து J — வெற்றி இலக்கங்கள் 01 25 65 78

தேசிய லொத்தர் சபை

சுபிரி வாசனா

| | |
|---|---|
| திகதி | 07/12/2019 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1484 |

எழுத்து 21 — வெற்றி இலக்கம் 16 21 34 44 — 64 39

தேசிய லொத்தர் சபை

SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் 1087

சீட்டிழுப்பு திகதி 07.12.2019 சனி

A 03 39 51 69

அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 85,441,780

ராசி அதிர்ஷ்டம்

| திகதி | வெற்றி வாரம் | வர்ணம் |
|---|---|---|
| 07/12/2019 | 2700 | இளம் நீலம் |

வெற்றி இலக்கங்கள்: கும்பம் 02 13 21 27

ஞாயிற்றுக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 4,266,740

வெற்றி பெற்ற சீட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

அத கோடிபதி ADA KOTIPATHI

சீட்டிழுப்பு இல: 814

வர்ணம் : மஞ்சள்

சீட்டிழுப்பு திகதி: 2019.12.07

இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 71,315,560/-

வெற்றி இலக்கங்கள் 09 10 49 64 — ஆங்கில எழுத்து A

சனிக்கிழமை அதிர்ஷ்டம்

சீட்டிழுப்பு இல: 3271 திகதி: 2019.12.07

பச்சை சனிக்கிழமை

சுப்பிரி தனஸ் — விசேட இலக்கம் 4552

வெற்றி இலக்கங்கள் 10 27 44 52 — ஆங்கில எழுத்து M

அடுத்த ஜக்பொட் ரூ. 31,410,235/-

## ஆங்கில வகுப்பு

இலக்கணப் பிழையின்றி ஆங்கில மொழி சரளமாகப் பேச 16 வருட ஆசிரிய அனுபவமுள்ளவரால் கற்பிக்கப்படுகிறது. விடுமுறை விலைக்கழிவு உள்ளது. முதல் 20 பேருக்கு புத்தகம் மற்றும் CD இலவசம்.

077 478 7007 in Kokuvil, Jaffna. (1403)

## காணி விற்பனைக்கு

மீசாலைச் சந்தியிலிருந்து 1km தூரத்தில் 2 1/2 பரப்பு காணி உடன் விற்பனைக்கு.

தொடர்பு :- 077 958 1741 (1402)

## நீர்க்கசிவை தடுப்பதற்கு Water Proofing

உங்கள் சீமெந்தினாலான கட்டடங்களில் ஏற்பட்ட நீர்க்கசிவுகளை 10 வருட உத்தரவாதத்துடன் நிறுத்தித் தருகிறோம். உலகத்தரம் மிக்க இரசாயனப்பொருட்களை (Finco) விலைக்கழிவுடன் இங்கே பெற்றுக்கொள்ளலாம்.

North and East Engineering,
No.55, Stanley Road, Jaffna

077 524 4177,
077 232 3000,
021 222 2363 (1400)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

CONGRATULATIONS

செல்வி
**சுரேஸ்குமார் பிரிந்திகா**

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் 34ஆவது பொதுப் பட்டமளிப்பு வைபவத்தில் திட்டமிடல் சிறப்புக் கலைமாணிப் பட்டத்தினைப் (B.A) பெற்றுக்கொண்ட செல்வி.சுரேஸ்குமார் பிரிந்திகா அவர்களை மென்மேலும் பல பட்டங்களை பெற்று சீரும் சிறப்புடன்கும் வாழ வாழ்த்துகின்றோம்.



வாழ்த்துவோர்
குடும்பத்தினர்
பலாலி வீதி, யாழ்ப்பாணம். (1417)

## தேவை

இந்தியாவில் உள்ள Maria Annai Pictures இன் இரண்டாவது தமிழ் சினிமாவில் நடிப்பதற்கு நடிகர், நடிகை, சிறுவர்கள் தேவை. சிறு முதலீடு நல்ல சம்பளம். Call or Whatsup -
(1403) 0766841113, 00919626882987

## ICT வகுப்புக்கள்

A/L, O/L ICT வகுப்புக்கள் குழு வகுப்புகளாகவோ தனிப்பட்ட வகுப்புகளாகவோ கற்பிக்கப்படும்.

ஆசிரியர் : திரு. S.சத்தியன் (B.Sc) PGDE
இடம் : யாழ்நகர், சாவகச்சேரி.
077 271 8498 (1391)

## வெளிநாடு - உள்நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை

WESTERN UNION 070 330 5500 WESTERN UNION

அண்ணா பொதிகள் சேவை

976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம் (C-8404)
021 221 5656 077 888 9388

பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும் நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்.

3 - 6 நாட்களுக்குள் உங்கள் கைகளில்

வேலணை – அரியாலை – சங்கானை – சுன்னாகம்
கரணவாய் –மீசாலை–கிளிநொச்சி–கனகராயன்குளம்
முல்லைத்தீவு–மன்னார்–வவுனியா–திருகோணமலை

## விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு



DELIVERY IN 3-5 DAYS

UK – 550 /=Kg
கனடா - 950 /=Kg
ஜேர்மனி - 650 /=Kg
நெதர்லாந்து- 700 /=Kg
இத்தாலி- 700 /=Kg (நிபந்தனைகளுக்கு உட்பட்டது) (C-8315)

● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி ● மானிப்பாய் ● திருகோணமலை ● கொடிகாமம் ● வல்வெட்டித்துறை ● பருத்தித்துறை ● சாவகச்சேரி ● சுன்னாகம் ● மருதங்கேணி

0768226240 V2 TRAVELS

## நெல்லியடியில்...

வெளிநாடுகளுக்கான துரித தபால் பொதிகள் சேவை

லண்டன் - 540/=
ஜேர்மனி - 640/=
இத்தாலி - 690/=
கனடா - 950/=
நெதர்லாந்து - 690/=

சலுகை அட்டை (Discount Card) பெற வேண்டும் எனும் நிபந்தனை இல்லை.



076 443 1576

அருள்

பெற்றோல் செற் எதிரில் பிரதான வீதி, நெல்லியடி. (C-8397)

## பயிற்சி நெறியுடன் கூடிய தொழில் வாய்ப்பு

ஏற்றுமதி, இறக்குமதியுடன் தொடர்புடைய எமது EPL நிறுவனத்தில் புதிய வேலைத்திட்டங்கள் வட மாகாணத்தில் வசிக்கும் இளைஞர் யுவதிகளுக்கு அறிமுகப்படுத்துகின்றோம்.

- கணக்காளர்
- மேற்பார்வையாளர்
- விநியோகஸ்தர்
- நிர்வாகி
- பதிவேட்டாளர்

மேற்குறிப்பிட்ட பதவி வெற்றிடங்களுக்கு விண்ணப்பிக்க வேண்டுவதாயின் தேசிய அ.அ.இல, பிறப்புச்சான்றிதழ் ஆகியவற்றை கொண்டு நேர்முகத் தேர்வில் பங்கு கொள்ளவும்.

சம்பள அளவுத்திட்டம் 15800 - 45000 வரை

தொடர்புகளுக்கு : 077 144 0786
முற்பதிவுகளுக்கு : 077 985 8580 (1399)

## ஆசிரியர் தேவை

தரம் 1 – 5 வரை ஆங்கிலம் உட்பட ஏனைய பாடங்களும் கற்பிக்கும் திறன் கொண்டவர்கள் விரும்பத்தக்கது.

இடம்: மல்லாகம் (தனியார் கல்வி நிலையம்) (1378)

தொடர்பு:- 0774488222


# மரண அறிவித்தல்

## Dr.காசிநாதர் குட்டித்தம்பி துரைரட்ணம்

**(ENT Surgeon - Old boy of Jaffna Hindu College, St Patricks and Ananda College.)**



மியன்மார் ரங்கூனைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் கொட்டடி, லண்டன் Walthamstow Redbridge ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட Dr.காசிநாதர் குட்டித்தம்பி துரைரட்ணம் அவர்கள் 03.12.2019 செவ்வாய்க்கிழமை அன்று இலண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பாரிஸ்டர் காசிநாதர் குட்டித்தம்பி - கண்மணி தம்பதிகளின் பாசமிகு புதல்வரும், காலஞ்சென்றவர்களான சாம் சபாபதி (முதல் மேயர் - யாழ் மாநகரசபை) - கனகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகனும் பத்மினி அவர்களின் அன்புக்கணவரும் காலஞ்சென்வர்களான மனோன்மணி, ஜெயரட்ணம்(இலங்கை புகையிரத சேவை), இராஜரட்ணம்(இலங்கை புகையிரத சேவை), சண்முகராஜா ( Sri Lankan Ministry of Defence), தியாகராஜா ( Sri Lankan Pension Department ), சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரரும் சுமதி, மாலதி, உதிஷ்ரா, விஷ்னு மோகன், சுதர்ஷன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜனகன், Dr.இரவீந்திரன், சிவகுமாரன், கிரேஸ், பிரேமினி ஆகியோரின் அன்பு மாமனாரும் Dr.கஜன், சாம் நரேன், மிலன், கிரன், டாஷன், மிதுரன், நிலுஷி, உமிகா, பிரியங்கா, சுவேதா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (08.12.2019) ஞாயிற்றுக்கிழமை City of London Cemetery and Crematorium எனும் இடத்தில் தகனம் செய்யப் படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இல 35, மருதடி வீதி, யாழ்ப்பாணம்.
021 221 7162

தகவல் : சுந்தரம் டிவகலாலா
சிவமலர் டிவகலாலா (சம்மந்தியர்)

(1410)

# மரண அறிவித்தல்

## தங்கராசா அருட்பிரகாசம்

பிறப்பு
04 ✿ 08 ✿ 1951



இறப்பு
07 ✿ 12 ✿ 2019

தம்பசிட்டி பருத்தித்துறையை பிறப்பிடமாகவும் 3ஆம் யூனிற் பாரதி நகர் மல்லாவியை வசிப்பிடமாகவும் கொண்ட தங்கராசா அருட்பிரகாசம் 07.12.2019 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் விநாயகாவின் அன்புக் கணவரும், Dr.செந்தில்குமரன் (ஆதார வைத்தியசாலை பருத்தித்துறை / கஜமுகன் Dental Care - நெல்லியடி), மோகனதாஸ் (கனடா), ஜெனனி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தீபா, லோகேஸ்வரி, சுதர்சன் ஆகியோரின் அன்பு மாமனாரும், அஜீஷ், ஆதித்யா, சஜீஸ், சஜீனா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நாளை (09.12.2019) திங்கட்கிழமை மதியம் 12.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பாலியாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

3ஆம் யூனிற், பாரதிநகர்,
மல்லாவி.

(C-8459)

தகவல் :
குடும்பத்தினர்

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.12.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

விலை : 30.00
Registered as a Newspaper in Srilanka
வாரமலர்
# வலம்புரி
சங்குநாதம்
நாதம் 245
Viber 076 636 3378
வள்ளுவர் ஆண்டு 2050 08.12.2019 தொலைபேசி : 021 222 3378

## கொட்டித்தீர்த்த மழை
## கட்டுக்கடங்காத பெருவெள்ளம்





உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு



## இந்தியப் பொலிஸார் செய்த மிக உன்னதமான செயல்

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள்அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர். இறை வணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார். தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் ஆரம்பகர்த்தாக்களில் ஒருவரான அருளர் எனப்படும் இ. அருள்பிரகாசம் அவர்கள் காலமாகி விட்டார். அவருக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக் கூற, மீண்டும் அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிட அகவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

வடக்கு மாகாண ஆளுநராக யாரை நியமிக்கப் போகினமாம். சாத்திரியார் சதாசிவம் அதிரடியாகக் கேள்வியெழுப்பினார்.

சாத்திரியாரின் கேள்வி ஒருவரின் முகத்தை ஒருவர் பார்ப்பதாக இருந்ததேயன்றி பதில் கிடைப்பதாக இல்லை. இதனடிப்படையில் சில நிமிடங்கள் மௌனம் நிலவியது.

மௌனத்தைக் கலைக்க விதானையார் விசுவலிங்கம் குரல்கொடுத்தார்.

**விதானையார்:** இலங்கையில வடக்கு மாகாணத்தைத் தவிர ஏனைய மாகாணங்கள் அனைத்திற்கும் ஆளுநர்கள் நியமிக்கப் பட்டுவிட்டனர். ஆனால் வட்க்கு மாகாணத்திற்கு மட்டும்தான் இன்னமும் ஆளுநர் நியமிக்கப்படவில்லை.

**கங்காணி:** ஆளுநர் நியமிக்கப்படவில்லை என்பது உண்மைதான். ஆனால் முன்னாள் ஆளுநரை வெளிநாட்டிற்கு வரவழைத்த எங்கட புலம்பெயர் உறவுகள் அவருக்கு மிகப் பெரிய வரவேற்புகளை வழங்கி பல கோரிக்கைகளை முன் வைத்தனர்.

ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசாரங்கள் நடந்து கொண்டிருக்கையில், எங்கட புலம்பெயர் தமிழ் உறவுகள் சிலர் மேற்கொண்ட மேற்படி நடவடிக்கை எதைக்காட்டுது என்பதை ஒருகணம் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

ஜனாதிபதித் தேர்தலில யார் வெற்றி பெற்றாலும் ஆளுநர்களை பதவி விலகுமாறு கூறுவது வழமை.. இதைத்தெரிந்த பின்பும் எங்கட புலம்பெயர் தமிழ் உறவுகள் எதுவும் தெரியாதவர்களாக நடக்கினம். என்ன செய்யிறது?

**வாத்தியார்:** காயத்திற்கு மருந்து கட்டுபவருக்கு ஏதேனும் காசு கொடுக்கிறதா இருந்தால், மருந்தைக் கட்டமுதல் அந்தக் காசைக் கொடுக்கவேணும். மருந்து கட்டியபின்பு காசைக் கொடுக்கிறதால எந்தப் பயனும் இல்லை. அதுமாதிரித்தான் எதிலும் நடந்து கொள்ள வேணும்.

**மூப்பர்:** என்ன வாத்தியார் சொல்லுறியள். எனக் கெண்டால் ஒண்டும் விளங்கல்ல.

**வாத்தியார்:** ஆளுநராகப் பதவியேற்ற கையோட வரவேற்று கோரிக்கைகளை முன்வைத்தால் அதனால் நன்மை இருக்கும். இதை விட்டிட்டு ஆளுநர் பதவியை இழக்கிற நேரத்தில போய் வரவேற்பு வைத்து கோரிக்கைகளை முன்வைப்பதால ஏதும் நன்மை கிடைக்குமா என்ன?

**சிறாப்பர்:** அதுசரி இந்தியாவில நல்லதொரு வேலை நடந்திருக்குது.

**சாத்திரியார்:** என்ன சிறாப்பர் சொல்லுறியள்.

**சிறாப்பர்:** இளம் மருத்துவப் பெண்ணொருவரை வன்கொடுமைப்படுத்தி எரித்துக் கொலை செய்த நான்கு இளைஞர்களை அதே யிடத்தில் வைத்து இந்தியப் பொலிஸார் சுட்டுக் கொன்றிருக்கினம். இப்படியான நடவடிக்கையால மற்றவர்களும் திருந்திறதுக்கான படிப்பினை கிடைக்கிறது. ஆகையால நல்லதொரு வேலையை இந்தியப் பொலிஸார் செய்திருக்கினம்.

இவ்வாறு சிறாப்பர் கூறிக்கொண்டிருக்கையில், கங்காணி கார்த்திகேயன் நுளம்பு அடித்துக் கொண்டிருந்தார்.

இதனை அவதானித்த மூப்பர் கவனம் கவனம். இப்ப வடபகுதி முழுவதிலும் டெங்கு நுளம்புப் பெருக்கம் தலைவிரித்தாடுகிறது என்றார்.

**விதானையார்:** டெங்கு நுளம்புக் கட்டுப்பாட்டில இன்னமும் நாங்கள் முன்னேற்றம் காணவில்லை என்று தான் சொல்லவேணும். டெங்கைக் கட்டுப்படுத்தும் நோக்கில் இரண்டு கிழமைகளேனும் தனியார் கல்வி நிறுவனங்கள் வகுப்புக்களை நிறுத்துமாறு யாழ். மாவட்ட அரச அதிபர் கேட்டவர். எனினும் அது தொடர்பில தனியார் கல்வி நிறுவனங்கள் கவனம் செலுத்தினதாகத் தெரியவில்லை.

**பண்டிதர்:** டிசெம்பர் மாதம் பாடசாலைகளுக்கு லீவு வழங்கப்படுகிற காலம். இருந்தும் மூன்றாம் தவணை விடுமுறை விடுத்த மறுநாளே 2020 ஆம் ஆண்டுக்கான கல்விச் செயற்பாடுகளைத் தனியார் கல்வி நிறுவனங்கள் ஆரம்பித்துப் போட்டினம் எண்டால் பாருங்களன்.

**வாத்தியார்:** எங்கட மாணவர்களுக்கு ஓய்வு இல்லாமல் கல்வி புகட்டப்படுவதாலதான் பல மாணவர்கள் கல்வியில வெறுப்படைந்து பரீட்சையில பெயில் விடுகினம். எனவே பாடசாலை விடுமுறைக் காலத்தில தனியார் கல்வி நிறுவனங்களும் விடுமுறை வழங்குகிற ஏற்பாட்டைக் கொண்டு வரவேணும். இதைவிட்டிட்டு பாடசாலைகளைத் தொடர்ந்து தனியார் கல்வி நிறுவனம் என்று மாணவர்கள் சதா அலைந்து திரிந்தால் ஈற்றில மாணவர்களின்ர அடைவு மட்டம் மிகமோசமாகத்தான் இருக்கும்.. ஆகையால மாணவர்களுக்கு நெருக்கடியை இல்லாமல் செய்வதற்காக விடுமுறை வழங்கப்படவேணும்.

**பண்டிதர்:** இதுமட்டுமல்லப் பாருங்கோ. பாடசாலைகளிலும் மாணவர்களுக்கு நெருக்கடி இருக்கக்கூடாது.

**மூப்பர்:** என்ன பண்டிதர் ஐயா திடீரென்று இப்படிச் சொல்லுறியள்.

**பண்டிதர்:** ஒரு வகுப்பறையில 35 மாணவர்களுக்கு மேல் இருந்தால் அங்கயும் நெருக்கடி தானே.

**சாத்திரியார்:** ஏதோ இந்தமுறை மாணவர் அனுமதிகளைக் கட்டுப்படுத்தி ஏனைய பாடசாலைகளில் மாணவர்கள் சேர்ந்து படிப்பதற்கான ஏற்பாடுகள் நடப் பதாகக் கேள்வி.

**கங்காணி:** அப்படியானதொரு ஏற்பாடு செய்யப்பட்டால் எத்தனையோ பாடசாலைகள் மாணவச் செல்வங்களைப் பெற்றுக் கொள்ளும்.

இப்ப பல பாடசாலைகள் மாணவச் செல்வம் இல்லாமல் தவம் கிடக்கின்றன.

**விதானையார்:** உண்மைதான். கற்றல் வளம் உண்டு, பௌதீக வளம் உண்டு, ஆசிரியர் வளம் உண்டு, மாணவச் செல்வங்கள்தான் இல்லை என்று எத்தனையோ பாடசாலைகள் இருக்கின்றபோது, ஒரு சில பாடசாலைகளில மாணவர்கள் குவிந்து கொள்வது ஆரோக்கியமானதல்ல.

எல்லாப் பாடசாலைகளிலும் மாணவர்கள் அதிகரித்தால் எல்லா ஆசிரியர்களும் தரமான ஆசிரியர்கள் என்பது நிரூபிக்கப்படும். மாணவர்களின் அடைவு மட்டமும் அதிகரிக்கும். இதனைச் செய்வதற்கு எங்கட வடமாகாண கல்வி நிர்வாகம் நடவடிக்கை எடுக்குமென நம்பிறம்.

**வாத்தியார்:** சரி... சரி... மழை திரும்ப வரப் போகுது. பண்டிதர் ஐயா வேறு ஏதேனும் தீர்மானம் இருக்குதோ?

**பண்டிதர்:** ஓம் வாத்தியார். யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதியையும் ஸ்ரான்லி வீதியையும் இணைக்கும் சிறாம்பியடி ஒழுங்கையையும் யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதியால யாழ். புகையிரத நிலையத்திற்குச் செல்கின்ற குறுக்கு ஒழுங்கையையும் ஆட்டோ, கார் போன்ற வாகனங்களுக்கு ஒருவழிப்பாதையாக அறிவிக்கவேணும்.

இந்த இரண்டு இணைப்பு ஒழுங்கையாலும் ஆட்டோ, கார் போன்ற வாகனங்கள் இருவழியாலும் வருகிற போது அந்தப் பாதைகள் அப்படியே ஸ்தம்பித்துப் போகின்றன.

எனவே இந்த இரண்டு இணைப்புப் பாதையாலும் ஆட்டோ, கார் உள்ளிட்ட பெரிய வாகனங்களுக்கு ஒருவழிப்பாதை என யாழ்ப்பாண மாநகரசபை அறிவிக்கவேணும் என்ற தீர்மானத்தை நிறைவேற்றுவோம்.

இப்படிப் பண்டிதர் கூற, அனைவரும் ஏகமனதாக அத்தீர்மானத்தை நிறைவேற்ற, அந்நேரம் பார்த்து ஆலடிப் பிள்ளையார் கோயில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

**ஆதித்தன்**

# தமிழர்களை நடுத்தெருவில் நிற்க வைத்த கூட்டமைப்பு



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சியில் தமிழர்கள் எவ்வாறு கவனிக்கப்படுவார்கள் என்ற விடயம் மிக்வும் முக்கியத்துவம் பெறுகின்றது.

நல்லாட்சி அரசாங்கத்துடன் கூட்டுச் சேர்ந்து அரசியலமைப்பினூடாகத் தீர்வுத் திட்டத்தைப் பெறுதல் என்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் திட்டம் படுதோல்வி கண்டு விட்டது.

இதை நாம் கூறும்போது அரசியலமைப்புச் சீர்திருத்தம் என்பதனூடாகத் தீர்வுத் திட்டத்தை அடைதல் என்பது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஏமாற்றுவதற்காக நல்லாட்சி கையாண்ட ஒரு நுட்பமேயன்றி அரசியலமைப்புச் சீர்திருத்தம் அமுலுக்கு வரப்போவதில்லை என்பது நல்லாட்சியினருக்கு ஏலவே தெரிந்த விடயம் என்று கூறுவோரும் உளர்.

இவ்வாறு கூறப்படுமாயின் அதில் ஏற்புடைய உண்மைகளும் உண்டு என்பதை நாம் நிராகரிக்க முடியாது.

எது எவ்வாறாயினும் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான நல்லாட்சி புதிய அரசியலமைப்புச் சீர்திருத்தம் என்பதனூடாகத் தமிழர்களின் பிரச்சினைகளுக்கான தீர்வு என்ற விடயத்தை எழுகை பெறாமல் அப்படியே அமிழ்த்தி விட்டதென்பதை ஏற்றுத்தானாக வேண்டும்.

அதிலும் நல்லாட்சி அப்படிச் செய்தது என்பதை ஒரு பக்கமாகக் கூறினால் அதன் மறு பக்கம் நல்லாட்சி அரசாங் கத்திடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏமாந்து போனது என்றே கூறவேண்டும்.

இவ்வாறு நல்லாட்சி அரசாங்கத்திடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏமாந்து போனது என்று கூறும்போது, இல்லை அது மிக மிகத் தவறு. ரணில் விக்கிரமசிங்கவோடு சேர்ந்து கூட்டமைப்பின் முக்கிய புள்ளிகள் நடத்திய ஒரு நாடகமே புதிய அரசியலமைப்புச் சீர்திருத்தம் என்ற விடயமாகும்.

இங்கு எதுவும் ஆகப் போவதில்லை என்பது சம்பந்தப்பட்டவர்களுக்கு நன்கு தெரியும். ஆகையால்தான் இரா. சம்பந்தருக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவியைக் கொடுத்து நீங்களும் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்திற்கு சளைத்தவர் அல்ல என்று கூறி அவரை அடக்கிவிட்டனர்.

எனினும் விடயம் தெரிந்தவர்கள்-தமிழினம் வாழ வேண்டும் என்று விரும்பியவர்கள், ஐயா சம்பந்தர் அவர்களே! நாங்கள் ஏமாற்றப்படுகிறோம். புதிய அரசியலமைப்புச் சீர்திருத்தத்திலும் எதுவும் இல்லை. அதில் இருப்பதும் அமுலாகினால் மட்டுமே கிடைக்கும்.

அப்படியிருக்கும்போது அரசியலமைப்புச் சீர்திருத்தம் இனப் பிரச்சினைக்குத் தீர்வாக அமையும் என்று நீங்கள் நம்புவது எந்தவகையில் நியாயம் என்று கேட்ட போதெல்லாம் அவர்களுக்கு தனது சுட்டுவிரலைக் காட்டி உறுக்கி அவர்களின் கேள்விகளுக்குப் பதில் இல்லாமல் செய்தவர் இரா. சம்பந்தர்.

அதுமட்டுமல்ல அரசியலமைப்புச் சீர்திருத்தம் அமுலுக்கு வரும், இல்லையேல் எனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமாச் செய்வேன் என்று உறுதியளித்தவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன்.

இவற்றின் அடிப்படையில் ஐ.நா. மனிதவுரிமைகள் பேரவை இலங்கை அரசுக்கு விதித்த நிபந்தனைகளை அரசாங்கம் நிறைவேற்றக் காலஅவகாசம் வழங்க வேண்டும் எனக்கூறிய கூட்டமைப்பு எல்லாவழிகளிலும் நல்லாட்சியைக் காப்பாற்றிவிட, இன்று தமிழ் மக்கள் நடுத்தெருவில் நிற்கின்றனர்.

ஆக, நல்லாட்சியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் சேர்ந்து தமிழ் மக்களை ஏமாற்றி விட்டனர் என்பது தான் உண்மை.

இப்போது மைத்திரி ஜனாதிபதியும் இல்லை, ரணில் பிரதமரும் இல்லை என்ற நிலையில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மகிந்த ராஜபக்ஷ என்ற புதிய அரசியல் சூழமைவிற்குள் தமிழர்களின் வாழ்வியல் உள்ளடங்கியுள்ளது.

நிலைமை இதுவாக இருக்கையில், அமெரிக்கத் தூதுவரைச் சந்தித்த இரா. சம்பந்தர் அரசியல் தீர்வுத் திட்டத்தினூடாக எங்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணுகின்ற முயற்சியில் ஈடுபட்டுள்ளோம் எனக் கூறியுள்ளார் எனும் போது தமிழ் மக்கள் இனியும் கூட்ட மைப்பை நம்புவது பொருத் தமா? என்பது பற்றி ஆராய வேண்டும்.

அமெரிக்கத் தூதுவரைச் சந்திக்கின்ற வாய்ப்புக் கிடைத்தபோது, புதிய அரசியலமைப்புச் சீர்திருத்தமும் அமுலுக்கு வரவில்லை. நல்லாட்சியும் பாடை ஏறிவிட்டது. இனி உங்களை விட்டால் எங்கள் தமிழினத்திற்கு யாருமில்லை. எம் தமிழினம் நடுத்தெருவில் நிற்கிறது. எல்லோரும் எங்களை ஏமாற்றிவிட்டார்கள். நீங்கள்தான் உதவி செய்ய வேண்டும் என்றுதான் இரா. சம்பந்தர் கூறியிருக்க வேண்டும்.

இதைவிடுத்து அரசியலமைப்புச் சீர்திருத்தத்தின் மூலமாகத் தீர்வுத் திட்டத்தை அடைய முயற்சிக்கின்றோம் என்று அமெரிக்கத்தூதுவரிடம் சம்பந்தர் கூறினால், அமெரிக்கா எங்க ள் தொடர்பில் கரிசனை செலுத்துமா என்ன? கிடைக்கின்ற சந்தர்ப்பங்களையும் போட்டுடைக்கின்ற அளவிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை உள்ளது.

இனிமேலும் அவர்கள் தமிழர்களின் விடயத்தில் பேசுகின்ற சக்தியாக இருந்தால் தமிழினம் மீள முடியாத அளவிற்குச் செல்வது தவிர்க்க முடியாதது என்பதே உண்மை.

**திருநீலகண்டன்**




# புண்ணியம் தந்திடும் கார்த்திகை தீப தரிசனம்

தமிழ் மாதங்களில் சிறந்ததாக கருதப்படுவது கார்த்திகை மாதம். கார்த்திகை என்று நினைத்த மாத்திரத்திலேயே நினைவுக்கு வருவது அறியாமை என்ற இருளை நீக்கி ஞானம் எனும் ஒளியைத் தருகின்ற உலகெங்கும் இந்து மக்களால் இயற்றப்படுகின்ற தீப ஒளிகளும் திருவண்ணாமலையில் ஏற்றப்படுகின்ற திருவண்ணாமலை தீபமும் தான்.

நினைத்தாலே முக்தி தரும் புண்ணியத்தலமான திருவண்ணாமலையில் "மகா தீபம்" ஏற்றப்படுவது இக் கார்த்திகை மாத பௌர்ணமியில் தான். நீர், நிலம், காற்று, நெருப்பு, ஆகாயம் இவைகளைக் கொண்டு அமையப் பெற்றதே இந்த பிரபஞ்சம் ஆகும்.

கார்த்திகை மாதத்தில் ஜோதி வடிவமாக அருளும் லோக நாயகன் சிவபெருமானையும் கார்த்திகை மாதத்தில் அவதரித்த முத்தமிழ் காவலராம் முருகப் பெருமானையும் தீபங்கள் ஏற்றி வழிபட்டால் பக்தர்களுக்கு சகல சௌபாக்கியங்களும் கிட்டும் என்று புராணங்கள் கூறுகின்றன.

ஆதி காலம் முதற்கொண்டே தெய்வ வணக்கத்தின்



தொடக்கமாக மனிதர்கள் இயற்கை வடிவங்களான பஞ்சபூதங்களையே வணங்கினார்கள். இவற்றில் தீபங்களை வடிவமைத்து அவற்றுள் ஈசனை ஜோதி வடிவில் கண்டு வழிபடும் மிகப்பெரிய திருவிழா தான் "கார்த்திகை தீபத்திருவிழா" என அனைத்து இந்து மக்களாலும் பக்தி பெருக்கோடு கொண்டாடப்படுகின்றது.


கார்த்திகை மாதத்தில் திருக்கார்த்திகை பௌர்ணமி தினத்தில் திருவண்ணாமலையில் ஏற்றப்படுகின்ற மகாதீபத்தை காண்பதும் அன்றைய தினம் கிரிவலம் வருவதும் மானிடராக பிறந்தவர்க்கு மகா புண்ணியத்தை அளிக்க வல்லதும் செய்த பாவங்கள் களையப் படுகின்ற அற்புததருணம் என்று புராணங்கள் கூறுகின்றன. இந்த அற்புத மலையின் அருமையும் பெருமையும் வாயாலும் எழுத்தாலும் விபரிக்கமுடியாது. ஆயிரக் கணக்கான ரிஷிகளும் சித்தர்களும் இப்புண்ணிய தலத்தில் தங்கி ஈசனின் திருவடிகளில் தவம் இருந்து மெய்ஞ்ஞானம் பெற்று உலகிற்கு நல்வழிகாட்டி சைவ சித்தாந்த நெறிகளை பரப்பி தானும் முக்தியடைந்திருக்கிறார்கள் என்றால் திருவண்ணாமலையானையும் அபீதா குஜாம்பிகையின் திருவருட்களையும் நாம் நன்குணரலாம்.

ஒரு சமயம் பிரம்மாவிற்கும் விஷ்ணுவிற்கும் தம்முள் உயர்ந்த்வர் யார் எனும் வாதம் தோன்றிய போது அவர்களுக்காக ஆதியும் அந்தமும் அற்ற அடியும் முடியும் காண முடியாத வானத்தையும் பூமியையும் ஒன்றாக தொடுகின்ற உலக சோதியாய் காட்சி தந்த சிவபெருமான் பிரம்மா, விஷ்ணுவின் உயர்வு தாழ்வு எனும் அஞ்ஞானத்தை போக்கினார். சிவன் சோதியாய் காட்சி தந்த அத்திருநாளே "திருக்கார்த்திகை திருநாளாக" இன்று உலகத்தில் உள்ள இந்துக்களால் பக்தி பூர்வமாக கொண்டாடப்படுகின்றது.

இராமலிங்க வள்ளலார் ஒளியின் வடிவம் சிவம் என்று போற்றி அருட்பெருஞ்சோதி பாடினார். நாயன்மாரில் அப்பர் சுவாமிகள் நமசிவாய வடிவமே ஒளி வடிவமானது என்கின்றார். கிருஷ்ணபகவான் கீதோபதேசத்தில் விளக்கின் ஒளி போன்று மனதை அசையாமல் இறைவழிபாட்டில் ஒரு நிலைப்படுத்த வேண்டும் எனக் கூறுகின்றார். திரிசங்கு மன்னன் இழந்த நாட்டையும் செல்வங்களையும் ககார்த்திகை தீப விரதமிருந்தே திரும்பப்பெற்றான் என வரலாறு செப்புகின்றது.

-சிவனடியான்-

## எந்த இடமோ?



ஒரு குடியானவன் பாதிரியாரிடம் தனது கஷ்டத்தை விண்ணப்பிக்கப் போயிருந்தான். பாதிரியார் அப்பொழுது முட்டையும் கோழி ரோஸ்டும் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்.

"சாமி! நான் நாளெல்லாம் கஷ்டப்பட்டு உழைக்கிறேன். ஒரு வேளைக்குக்கூட வயிறு நிறைய உண்ண முடியவில்லையே" என்றான்.

"உன் போன்றவர்கள்தான் ஆண்டவனின் அருட் குழந்தைகள். பசி நோக்காது. கண் துஞ்சாது. பிறர் சுகப்படுவதைக் கண்டு பொறாமைப்படாது. உழைத்து ஆண்டவனுக்குத் தொண்டு செய்பவர்களே மறு பிறப்பில் சொர்க்கத்தை அடைவார்கள்" என்றார் பாதிரியார்.

உடனே குடியானவன் "எந்த உழைப்பும் இல்லாமல் எப்பொழுதும் சுகமாக இருக்கிறார்களே அவர்கள்?" என்று கேட்டான். "அவர்கள் கடவுளால் சபிக்கப்பட்டவர்கள். பாவிகள் அவர்களுக்கு மறு உலகத்தில் நரகந்தான் இடம்" என்றார் பாதிரியார்.

குடியானவன் அடக் கமாகப் பாதிரியாரிடம் "அப்ப டியானால் உங்களுக்கு எந்த இடமோ" என்றான்.

## பயனுள்ள பொது அறிவுத் தகவல்கள்

- முதன் முதலாக தொழில் புரட்சி நடைபெற்ற நாடு - இங்கிலாந்து
- குளோரினிலிருந்து தயாரிக்கப்படும் மருந்து பொருள் - குளோரோஃபார்ம்
- மனிதனுடைய உடல் உறுப்புகளில் வாழ்நாள் முழுவதும் ஆரோக்கியமாக இருப்பது - மூளையில் உள்ள செல்கள்
- எச்.பி.ஜே. பைப்லைன் திட்டமானது எதை கொண்டு செல்ல உருவாக்கப்பட்டது - இயற்கை வாயு
- இத்தாலி நாட்டின் தேசிய மலர் - லில்லி
- மின் விளக்கை கண்டுபிடித்தவர் - ஹம்ப்ளி டேவி
- ஒரு மணி நேரத்தில் 74 கி.மீ.வேகத்தில் ஓடுவது - நெருப்புக் கோழி



ஜோய்எவ்றோம்,
தரம் 7சி. SOS சிறுவர் கிராமம், சதயம் இல்லம்.




பி.சஞ்ஜேய்,
பாலர், கலைமகள் மாதிரி முன்பள்ளி.

## பழமொழிகள்

- மாரிகாலத்தில் பதின்கல மோரும் கோடைகாலத்தில் ஒருபடி நீருஞ் சரி.
- கடைந்த மோரிலே குடைந்து வெண்ணெய் எடுக்கிறது.
- கள்ளனும் தோட்டக்காரனும் ஒன்று கூடினால் விடியும் மட்டும் திருடலாம்.
- எண்ணிச்செய்வது செட்டு, எண்ணாமல் செய்வது வேளாண்மை.
- மேய்த்தால் கழுதை மேய்ப்பேன், இல்லாதே போனால் பரதேசம் போவேன்.
- அன்று குடிக்கத் தண்ணீர் இல்லை ஆனைமேல் அம்பாரி வேணுமாம்.
- சுண்டைக்காய் காற்பணம், சுமை கூலி முக்காற்பணம்.
- எருமை வாங்கும் முன்னே நெய் விலை கூறாதே.
- செடியிலே வணங்காதது மரத்திலே வணங்கும்?








அவுஸ்திரேலியா அணியின் வோர்னரின் தற்போதைய துடுப்பாட்டம் எப்படி உள்ளது.

ஜனாதிபதி யாழ்ப்பாணம் வருவாரா?

அகோர மழை மனிதனை அழிக்கும் போலத் தெரிகிறதே?

**நீலாம்பரி — விஸ்வமடு**

ஜனாதிபதி யாழ்ப்பாணம் வருவாரா?

அவர் இந்த நாட்டின் ஜனாதிபதி. மக்கள் சேவை செய்வதே அவருக்கான கடமை. அதை அவர் நன்கு உணர்ந்து செயற்படுகிறார் போலத் தெரிகிறது.

எதிர்வரும் காலங்களில் நிச்சயம் யாழ். விஜயத்தை மேற்கொள்வார்.

தமிழரின் மனங்களை எப்படியும் வெல்ல வேண்டும் என்ற எண்ணம் அவருக்கு தோன்றி விட்டது என்பதே உண்மை.

**சங்கவி — யாழ்ப்பாணம்**

அகோர மழை மனிதனை அழிக்கும் போலத் தெரிகிறதே?

மனிதன் இயற்கையுடன் விளையாடத் தொடங்கி விட்டான். அந்த விளையாட்டின் விளைவு எப்படியாக இருக்கும் என்பதை அவ்வப்போது இயற்கை காட்டிக் கொண்டே இருக்கிறது.

மனிதா என்னை என்போக்கில் விடு சீண்டாதே என்று அடிக்கடி எச்சரிக்கிறது. ஆனாலும் பாவி மனிதன் இயற்கையுடனான சீண்டலை விடுவதாக இல்லை.

அதன் சீற்றம் இந்த உலகை அழிக்கப் போகிறது என்பதே நிதர்சனமானது.

**சுதன் — குப்பிளான்**

தேர்தல் முடிவில் ஈழநாட்டின் வடிவம் தெரிகிறதாம் உண்மையா?

தேர்தல் முடிவு யாரை ஆதரித்தோம். அது சரியா? தவறா? என்ற வாதப்பிரதிவாதத்தை தவிர்த்து தமிழர் எல்லோரும் ஒருமித்து ஒன்றாய் தமக்கான தீர்ப்பை வழங்கியிருக்கிறார்கள்.

இது ஆட்சியாளர்களுக்கு தமிழ் மக்கள் கூறிய தமிழர் ஒற்றுமை என்ற உன்னத செய்தி.

தமிழர் ஒற்றுமையைப் புரிந்து கொண்டு தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு தரவேண்டும் என்பதே அதன் பொருள்.

**ஈஸ்வர் — வடமராட்சி**

என் வழி தனி வழி என்று ரஜினி சொன்னார். அப்படியென்றால் உங்கள் வழியும் தனிவழியா வியாசரே?

அடப் போடா நீவேற. இப்பவும் இரவு பாத்தூறும் வந்தால் அம்மாவை எழுப்ப வேண்டிக் கிடக்கு. நீவேற கடுப்பேத்தாதை. என்வழி தனிவழி என்பது ரஜினிக்குப் பொருத்துமோ இல்லையோ நமக்குப் பொருந்தாது.

**சிவா — சுழிபுரம்**

கூட்டமைப்பின் கதி என்ன?

பாகுபலி படத்தில் காட்டுமிராண்டித் தனமான காலகேயன் படையை எப்படி எதிர்கொள்வது என திட்டம் தீட்டப்படுகிறது.

அப்போது கட்டப்பா கூறுவார் ஒரு அணி படைகளுடன் போரிட்டுக் கொண்டிருக்க இன்னொரு அணி படைத்தலைவன் காலகேயனை கொல்ல வேண்டும்.

தலைவன் இல்லாத படைகள் போரிட மன உறுதி இல்லாது ஓடத் தொடங்குவார்கள் என. தலைவன் இல்லாத படையின் நிலை தான் இப்போது கூட்டமைப்பிற்கும்

**உங்கள் எண்ணத்தில் தோன்றும் கேள்விகளை வியாசரிடம் கேளுங்கள் 021 567 1532 என்ற இலக்கத்துக்கோ SMS அனுப்புங்கள்**

**நாதன் — யாழ்ப்பாணம்**

உடைந்து போன கூட்டமைப்பை உடைக்க முடியாது என்று கூறுகிறார்களே?

ஒரு படத்தில் ஒரு ரீக்கடைக்கு முன்னால் விவேக்கிற்கு நாலுபேர் சேர்ந்து சாத்து சாத்தென்று சாத்துவார்கள்.

கடையில் இருந்த அனைவரும் எழுந்து ஓடி விடுவார்கள். ஆனால் கடைக்காரர் ரீ ஆத்துவதை நிறுத்தாமல் ஆத்திக் கொண்டே இருப்பார்.

விவேக் கூறுவார்.
ஆளே இல்லாத கடையிலை யாருக்கடா ரீ ஊத்துறாய் என. இது தான் இன்றைய நிலையும்.

ஏதோ நடக்கிறது. நடப்பதைப் பார்த்துக் கொண்டிருப்போம். கீரைக்கடைக்கு எதிர்க்கடை வராமலா போய்விடப் போகிறது.

**தவம் — மந்துவில்**

மனைவி அடிக்கடி சண்டை போடுகிறாரே என்ன செய்ய வியாசரே?

ஓ... அப்படியா
ஆள் ஆளுக்கு பத்து டம்ளர்களை எடுத்துக் கொள்ளுங்கள். இருவரும் 10 மீற்றர் இடைவெளியில் நில்லுங்கள். பொதுவான ஒரு கரண்டியை எடுத்துக் கொள்ளுங்கள்.

முதலில் மனைவி கரண்டியை உங்களை நோக்கி எறிய வேண்டும். கரண்டி உங்களில் பட்டுவிட்டால் சில்வர் டம்ளர் ஒன்றை மனைவிக்குக் கொடுக்க வேண்டும்.

எறிந்த கரண்டி உங்களில் படாவிட்டால் மனைவி உங்களுக்கு டம்ளர் ஒன்றைத் தர வேண்டும்.

இப்படி மாறி மாறி சண்டையை விளையாட்டாய் விளையாடுங்கள் வாழ்க்கை சொர்க்கமாகும்.

**நிறோக் — யாழ்ப்பாணம்**

எனது மனதிற்குச் சரி என்பட்டதை நான் செய்வது தவறா?

அது தவறில்லை. ஆனால் சில விடயங்களை நாம் நமக்குச் சாதகமாக யோசித்து முடிவெடுத்து விடுவோம். அந்த முடிவில் நியாயம் இருக்காது.

இந்த முடிவு தவறானது என வேறு யாரும் கூறினால் அதை ஆராயும் மனப் பக்குவத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

மாறாக அதைப் புறந்தள்ளி எனது முடிவுதான் சரியானது என அதில் இருந்து விலகாமல் இருப்பது ஆரோக்கியமான உறவை இழக்கச் செய்யுமே தவிர வேறு எதையும் தந்து விடாது.

**டிலக்சன் — நவாலி**

அவுஸ்திரேலியா அணியின் வோர்னரின் தற்போதைய துடுப்பாட்டம் எப்படி உள்ளது.

வோர்னர் மிகவும் அச்சுறுத்தலான வீரர்.

எந்த நிலையிலும் எவ்வாறான நெருக்கீட்டையும் எதிர்கொண்டு எதிரணியை துவம்சம் செய்யக்கூடிய வீரர்.

அண்மையில் பாகிஸ்தானுடனான போட்டியில் ஆட்டமிழக்காமல் 335 ஓட்டங்களைக் குவித்தார்.

போட்டியின் பின் வோர்னர் கூறும் போது. டெஸ்ட் போட்டியில் அதிக ஓட்டமான லாராவின் 400 ஓட்டத்தை முறியடிப்பதே எனது இலக்கு எனக் குறிப்பிட்டுள்ளார்.

**உங்கள் கேள்விகளை 021 567 1532 எனும் இலக்கத்துக்கு SMS அனுப்புங்கள்**

## மனிதா!

-கி.ஜதுஷிஹறன்-

உயர்ந்த மனிதா!
உன்னை தாழ்த்தாதே!
உணர்வாய் மனிதா!
உன் கீழ் தான் உலகம்!

இறைவன் கொடுத்ததில்
இழக்க ஒன்றுமில்லை!
இல்லாததை கொடுக்கிறான்
இருப்பதை எடுக்கிறான்!

இழந்ததற்கு வருந்தாதே!
இருப்பதை கொண்டு
இல்லாதவர்க்கு உதவு!
இன்னமும் உயரு!!

விதையும் வீழ்கிறது!
மண்ணில் ஒருமுறை
மரமாய் வளர்வதற்கு!
மறுமுறை எழுவதற்கு!!

எத்தனைமுறை வீழ்ந்தாலும்
எதற்கும் அஞ்சாதே
எப்போதும் மறக்காதே!
எழவேண்டும் என்பதை!!

வீழ்ந்ததற்கு வருந்தாதே!
எழுவதற்கு தயங்காதே!
வீழ்ச்சிகளை விலக்கு!!
எழுச்சிகளை விரும்பு!!

உணர்ந்திடு மனிதா
உனக்காகவே பூமி
உறங்குகிறது
உன் காலடியில் !!!



## காந்தள்

கவிதைக் கலசம்

தாயகக் கனவுகளை மனதில் சுமந்து
தம் உயிர் நீத்த மறவர்கள்
தன்னிகரற்ற தலைவன் கட்டளைகளை
செவிமடுத்து தரணிகாத்த உத்தமர்கள்
தேசத்தின் புயலாகி தேகத்தில்
வெடிகுண்டு சுமந்த வேங்கைகள்
மணமாலை சுமக்கும் வயதில்
களமாடி மாண்ட கன்னியவான்கள்
இனமானம் ஒன்றே இலக்கு என்று எண்ணி
இன்னுயிர் நீத்த வீரர்கள்
கல்லறைக்குள் கண்மூடித் தூங்கும்
காவிய நாயகரே நீங்கள்
புதைக்கப்பட்டவர்கள் அல்ல
ஈழ விடுதலைக்காய் விதைக்கப்பட்டவர்கள்
விதைக்கப்பட்ட விதைகள் வீணாகிப் போய்விடாது
என்றோ ஒருநாள் பெருவிருட்சமாகி
தமிழினத்திற்கு நிழல் கொடுக்கும்
எப்போதும் எப்போதும் கார்த்திகைப்பூ மலர்ந்து
கொண்டுதானிருக்கும் உங்கள்
கல்லறையில் போடுவதற்கு

தமிழ்யோகி

## மாற்றுத் திறனாளி

ஊனம் ஊனம் என்கிற
வார்த்தையிலே ஊனம் இருக்கிறது
அவர் மனதினை எட்டிப் பார்த்தால்
எம் மனம் ஊனமாகிறது
மனிதருள் மாற்றுத் திறனாளியும்
இன்று இங்கு பலர்
செவிப்புலனற்றோர் சீர் பொங்கு
கைவினை கலைகளை
படைத்து வரும் போது
இப்பூமியில் அவர்களை விட
உயர்வானோர் உண்டோ சொல்
விழிப்புலனற்றோர் வியத்தகு
சாதனைகளை நிலைநாட்டி
இனிய குரலோனாய்
பன்ன வேலையாளனாய்
இன்றும் பல கைவினை
கலைகளுடன்
வாழும் அவர்களை
ஊனம் எனச் சொல்லி
ஒதுக்குவது தகுமா சொல்?
சாதிக்கத் துடிக்கும் மனம் படைத்த
சாதனையாளர்கள் அவர்கள்
எதிர்காலமதை வீணடித்து
வீடுகளில் முடக்கி
ஊனமாக்கி விடாதே
மாற்றுத்திறன் கொண்ட
மாற்றுத் திறனாளிகளுக்கு
சம உரிமை வழங்கி
அவர்களை உயர்த்த
நாம் உறுதுணையாக நிற்போம்
அவர்களையும் உயர்த்திடுவோம்

சுபா, மானிப்பாய்

## இதயத்து வலி

கொடுக்கப்பட்ட
வாக்குறுதிகளுக்கு மத்தியில்
கொப்பளித்துக் கொண்டிருக்கிறது
வேரிட்ட இதயம்

எதேச்சையாய்த் தரப்பட்டவை
அனைத்தும்
ஏனோ எடுக்கப்படுகிறது
எதேச்சைத்தனமாக

பிடிக்கப்பட்டவை
பிடிக்கப்படாதவை
இரண்டிற்கும் நடுவில்
உழன்று கொண்டிருக்கிறது
முடித்துக் கொண்டிருக்கும் ஜீவன்


கொடுக்கப்பட்டது எதுவோ
அதுவே இன்றும் நிலையாய்
இருப்பினும்
கொடுக்கப்பட்டது
கொடுக்கப்படாததாய்
முடிக்கப்பட்டது முடிவாய்

இருட்டு மேகங்கள்
ஒருநாளும் இருளைக்
கொட்டுவதில்லை
மாறாய் மழையாய் மண்ணில்
செழிக்கும் அல்லது அழிக்கும்

அழிவுகளுக்குப்
பழக்கப்பட்டுவிட்டது
ஆனாலும் உண்மை
உறவுகளை அழித்தொழிப்பது
ஏற்கப்படாதது ஆதலாலோ
இதயம் அழுது புரள்கிறது

மாவை.நா.கஜேந்திரன்

## மௌனத்தின் தேடல்- 475




## வறுமையில் கலங்காதே

வறுமை உன் கால்களை
கட்டி இழுத்தால் கலங்காதே
தன்னம்பிக்கையுடன்
விடாமுயற்சியாக
உறுதியோடு போராடு
உன் இலக்கை நோக்கி
வெற்றி நிச்சயம்

சி.பிரியங்கா
மட்டுவில் தெற்கு

## வறுமையின் தேடல்

வியர்வை சிந்தி உழைப்பவன்
விலைவாசியில் ஏங்குகிறான்
வாங்கிய கடனை தீர்க்கவென
வட்டிக்காக அலைகிறான்
ஓடி ஓடி தேடினான்
வறுமையை ஒழிக்க
மரணம் தான் பதில் என
வாழ்க்கையை பாதியில் முடிக்கிறான்

ஆ.நிருஷினி
யா/ சுண்டுக்குளி ம.க.

## தடைகளை உடை

முயன்று நீ முன்னேற்றப் படியிலே
முன்னோக்கி ஏறிட
முயன்றிடும் போது
வறுமை என்னும் அரக்கன்
வந்துனை வாட்ட
வகையற்று நீ செயலிழந்து வாட
தன்னம்பிக்கையோடு
தடைகளை உடை
தளராத உறுதியோடு
போராடு நீ
எதிர்காலமிங்கே
பொன்னாக உருவாகும்

சி.திவ்வியா
யா/ப/மெ/ம/வி.

## சங்கிலியின்

சங்கிலியின் குண்டொன்றை
தகர்த்தால் போதும்
வறுமைச் சுமை வலுவிழக்கும்
வாழ்வின் வெற்றிப் படிகளில்
விரைக பயன்தரும் முயல்க

சிவனடியான், சரவணை

## ஒன்றுபட்டு துணிந்து செல்

வறுமையின் பிடியில் சிக்கி
வாழ்விழந்த மக்கள்
பொறுமையிழந்து
பொங்கியெழுந்து
ஒன்றுபட்டு துணிவோடு
தடை தகர்த்து
தன்னம்பிக்கையோடு
அடிமை விலங்கறுத்து
படியேறி மேலே செல்ல
சுதந்திர வாழ்வு
கையில் வரும்

துரை
தென்மட்டுவில்

## வாழ்வின் தடைக்கல் வறுமை

உயர்த்தும் படிகளிலே ஏறி
மேலே செல்வதற்கு எண்ணம்
ஆனால் காலில் பூட்டிய சங்கிலி
மறுக்கிறது காரணம் வறுமை
வாழ்க்கையை பூரணமாக
அனுபவிக்க ஏக்கம்
கொண்ட மனிதர்களை
வாட்டுகின்றது வறுமை
உலகெங்கும்
அநாதைச் சிறுவர்கள்
அகதிகள் குவிந்தது
வாட்டுகின்றது கொடிய வறுமை
வறுமை ஒழிக! வாழ்வு சிறக்க
நலம் தேடும் பெரியவர்களே
உதவிக்கரம் நீட்டுவீர்கள்

அபிகுலமாலிகா
சங்கானை

## மௌனத்தின் தேடல் -476



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதைகளை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி- சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

## வெற்றி எனும் சிகரம்

ஏறு ஏறு வெற்றியென்னும்
படிக்கல்லில் நீ
ஏறு மானிடா!
வறுமையென்னும்
தடைக்கல்லை
கண்டு நீ தடக்கி
விழாதே- மானிடா!
உன் திறமை
வெளிக்காட்டாமல்
மண்ணுக்குள்ளே நீ
மாண்டு போகாதே மானிடா!
உழைப்பாலே
வெற்றியென்னும்
சிகரத்தை நீ
தொட்டுவிடு மானிடா!

ச.பிரநிதன்
மட்டுவில்

## சிந்தித்துச் செயற்படு

பஞ்சம் என்பது
பஞ்சு போன்றது
அதனைப் பிடித்து
வாய்முன் ஊது!
பஞ்சாய்ப் பறந்திடும் பஞ்சம்
வறுமையும் இதுவே மனிதா!-நீ
வீணே இருந்து
காலம் கழித்தால்
அதுவும் விலங்காய்
தோன்றும் உனக்கு
விரைந்து நீயும்
செயற்படுவாயெனில்
வறுமை என்ன போடா
வாழ்வே வாழ்க்கை!

கணபதிதாசன்
கட்டைக்கதடு

சிறுகதை

# தனிமை



முற்பகற்பொழுது. பகலவன் தன் வெப்பக்கதிர்களால் பூமியை வருடிக் கொண்டிருந்த வேளையது. வெப்பத்தினால் தகித்த தணிகாசலத்தின் மேனியில் முத்து முத்தாக வியர்வைத் துளிகள் அரும்பி அவரை உபாதைக்குள்ளாக்கிய போது அவர் வாய்விட்டுப் புலம்பி அலுத்துக் கொண்டார்.

சே!... என்ன வெப்பம்.

தோளில் போட்டிருந்த துவாயை எடுத்து முகத்தை ஒற்றிக் கொண்டவர். அவரருகே சாத்தி வைக்கப்பட்டிருந்த ஊன்றுகோலை எடுத்து அதன் உதவியுடன் காலடி எடுத்து வைத்து அவரருகே போய் மின்விசிறியை இயக்கிவிட்டு மெதுவாகத் திரும்பி வந்து தனது கட்டிலில் அமர்ந்து கொண்டார். பலவீனமாக இயங்கிக் கொண்டிருக்கும் அவரது இதயத்தின் துடிப்பு அதிகரித்ததால் அவருக்கு மூச்சு வாங்கியது. மெதுவாகப் படுக்கையில் சரிந்து கொண்டார்.

மின் விசிறியின் அசைவினால் சுழன்றடித்த காற்று அந்தத் தருணத்தில் அவருக்கு இதமாக இருந்தது. இலேசாகக் கண்களை மூடி தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டார்.

"கடவுளே! என்னை ஏன் இன்னும் உயிரோடு வைத்திருக்கிறாய்?" மனம் வேண்டிக் கொண்டது. தவிர வார்த்தைகள் வாயினால்வெளிவரவில்லை. மாறாக மனம் அவர் கடந்து வந்த வாழ்க்கைப் பயணத்தை அசை போடத் தொடங்கி விட்டது.

பள்ளிப் பருவத்தில் பல நண்பர்களுடன் கூடித்திரிந்து குலாவி கும்மாளமடித்த நாட்கள் பசுமையாக அவர் உள்ளத்தில் விரிந்த போது... அவரது உள்ளம் காற்றில் பறக்க ஆரம்பித்தது. ஒரு தரம் அவரும் நண்பன் பாலனுமாக இணைந்து பாடசாலைக்கு மட்டம் போட்டுவிட்டு சினிமாவுக்குப் போனதும் மறுநாள் வகுப்பாசிரியரிடம் வசமாக மாட்டிக் கொண்டதும் நினைவில் வந்த போது அவரையறியாமலே அவரது உதடுகள் விரிந்து புன்னகைத்துக் கொண்டது. காலப்போக்கில் அவரும் ஆசிரியராகப் பணிபுரிந்த காலத்தில் எத்தனையோ மாணவர்களை குறும்புத்தனத்திலிருந்து விடுவித்து நல்வழிப்படுத்தியிருக்கிறார் அந்த நினைப்பு தந்த நிறைவில் நிம்மதியடைந்தவராய் மேலும் சிந்தனையை ஓடவிட்டார்.

அவர் ஆசிரியராக பணிபுரியத் தொடங்கிய இளமைப்பருவத்தில் அவரது மனத்தில் தன்னுடன் கூடப்படிப்பிக்கும் ஆசிரியையான சரஸ்வதி மேல் சபலம் ஏற்பட்டது என்னவோ வாஸ்தவம்தான். இருந்தாலும் அவர் அதில் மூழ்கிவிடவில்லை. தக்க தருணத்தில் அவரது பெற்றோர் அவருக்கு கமலவேணியை திருமணம் செய்துவைத்து விட்டார்கள்.

மனைவி கமலத்தின்மீது அவர் உயிரையே வைத்திருந்தார். அவள் மட்டும் என்ன... தான் பெற்றெடுத்த மூன்று குழந்தைகளோடு நான்காவதாக அவரையும் ஒரு குழந்தையாகவே கருதி அன்பு செலுத்தியதுடன் அக்கறையாகவும் கவனித்துக் கொண்டாள். காலம் இனிதே கரைந்து போக பிள்ளைகளும் வளர்ந்து பெரியவர்களாகினர்.

மூத்தவன் மோகன் வங்கியொன்றில் முகாமையாளராக கடமையாற்றுகிறான். இளையவன் வரதன் ஒரு பட்டதாரி ஆசிரியர். இருவருக்கும் கமலம் தானே முன்னின்று திருமணத்தையும் செய்து வைத்துவிட்டாள். குடும்ப விடயங்களில் தணிகாசலம் பெரிதாகத் தலையிடுவதில்லை. சற்று ஒதுங்கியே நின்று கொள்வார். எனவே பொறுப்புக்கள் கமலத்தின் மீது பொறிந்து விட்டது.

கடைக்குட்டியான கவிதா ஒரு பயிற்றப்பட்ட ஆசிரியை. அவளுக்கும் ஊரோடு ஒரு மாப்பிள்ளையைப் பார்த்து திருமணம் செய்து வைத்து விட்டார்கள். அவரும் ஒரு ஆசிரியர்தான்.

கமலம் உயிரோடு இருந்தவரை அவர்களிருவரும் தனிக்குடித்தனம் செய்து வந்தார்கள். கவிதாவுக்கு சீதனமாகக் கொடுத்த வீடு வளவையும் பராமரித்துக் கொள்ளவும் அது ஏதுவாக அமைந்து விட்டது. தணிகாசலத்தாரின் ஓய்வூதியம் அவர்களது வாழ்வாதாரத்திற்குப் போதுமானதாக இருந்ததால் அவரது பிள்ளைகள் எவரது உதவியையும் எதிர்பார்க்கவில்லை.

வீட்டின் சகல பொறுப்புக்களையும் சுமந்து தணிகாசலத்தையும் கவனித்துக் கொண்டாள் கமலம். தவிர அவர் வீட்டில் நடக்கும் எந்தவொரு கருமத்தின் மீதும் சிரத்தை காட்டியதில்லை. தானும் தன்பாடும் என காலம் கழித்து வந்தார். ஓய்வூதியத்தை எடுத்து மனைவியிடம் கையளித்துவிட்டால் போதும். தன் கடமை அவ்வளவுதான் என நினைத்துக் கொள்வார்.

காலம் எவருக்காகவும் காத்திருப்பதில்லை. ஒருநாள் அவரது சொகுசு வாழ்வுக்கு அது முற்றுப்புள்ளி வைத்து விட்டது. ஆம், அவரது அன்பு மனைவி கமலம் திடீரென நெஞ்சை வலிக்குது எனக் கூறியவள் ஒரேயடியாகக் கண்களை மூடி விட்டாள்.

மரண நிகழ்விற்கு வந்திருந்த பிள்ளைகள் மூவரும் கூடி ஒரு முடிவு எடுத்தனர். அதன் பிரகாரம் தணிகாசலம் கவிதாவின் வீட்டில் குடியேற வேண்டியதாயிற்று. தண்ணீரிலிருந்து தரையில் எடுத்துவிடப்பட்ட மீனாக இருந்தது அவரது நிலை. பிள்ளைகள் மோகனும் வரதனும் அடிக்கடி வந்து அப்பாவைப் பார்த்துப் போயினர். என்னதான் இருந்தாலும் கமலத்தின் வெற்றிடம் அவரது இதயத்தில் ஏற்படுத்தியிருந்த தனிமையெனும் வலி அவரைக் குடைந்தெடுத்தது.

குறிப்பாக நேற்று நடந்த ஒரு சம்பவம் அவர் மனதில் இழையோடிக் கொண்டிருந்தது. என்னதான் முயன்றும் அந்த நினைவலைகளை அவரது மனதிலிருந்து அப்புறப்படுத்த முடியவில்லை.

இளையவன் வரதன் நேற்று அவரைப் பார்க்க வந்திருந்தான். அவருடைய அறைக்கு வந்தவன் சிறிது நேரம் ஆற அமர்ந்திருந்து சுகநலம் விசாரித்துவிட்டுப் புறப்பட்டான். மகனுடைய அக்கறையான செயல் அவரது மனதுக்கு இதமாக இருந்தது.

கமலம் இல்லாவிட்டாலும் பிள்ளைகள் தன்மீது கரிசனை காட்டுவது அவருக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது. மெதுவாகக் கண்களை மூடியவாறு படுத்திருந்தார். அந்தச் சமயத்தில்தான் வரதனும் கவிதாவும் சம்பாஷிப்பது அவரது காதுகளில் வந்து விழுந்தது.

"கவிதா! அப்பாவுக்கு சஸ்டோஜனும் மாமைற்றும் வாங்கிக் கொண்டு வந்திருக்கிறன். இடைக்கிடை கரைச்சுக்குடு என்ன...!" இது வரதனின் குரல்.

" அண்ணா! நீயே யோசிச்சுப்பார். நானும்தான் என்ன செய்ய. வேலைக்கும் போய்வந்து வீட்டு வேலைகளையும் பார்த்து... பிள்ளைகளையும் கவனிக்கவே நேரம் போதாமல் இருக்கு. இதுக்ுள்ள அப்பாவையும் பார்க்கிறதெண்டால் என்னால முடியவே இல்லை"

" கவிதா! நீ என்ன சொல்ல வாறாய். அப்பா தன்ரை அலுவல்களைத் தானே தான் பார்த்துக் கொள்ளுறார். நீ சாப்பாடு குடுக்கிறது மட்டும் தானே உனக்கு வேலை."

"நீ வாயால லேசா சொல்லிப் போட்டாய் மூன்று நேரமும் அவருக்கு சாப்பாடு தண்ணி அறைக்குக் கொண்டு போய்க் குடுக்க வேணும். மனுசன் வெளியில வராது"

" என்ன கவிதா! இது ஒரு பெரிய வேலையா. அப்பாவுக்குத்தானே செய்யிறாய். எங்களைப் பெத்து வளர்த்தவருக்கு இதுகூடச் செய்யாமல்... இடையே கவிதா குறுக்கறுத்தாள்.

" அண்ணா! அப்பிடியெண்டால் ஒன்று செய்யலாம். நீ அப்பாவைக் கொண்டு போய் உன்ரை வீட்டில வைச்சுப் பாரன்"

அத்துடன் அவர்களது வாக்குவாதம் நின்றுவிட்டது. இதயம் படபடக்க தணிகாசலம் காதுகளைக் கூர்மையாக்கியபோதும் தணிந்த குரலில் அவர்கள் பேசியது அவருக்குக் கேட்கவில்லை. ஆனால் ஒன்றுமட்டும் நிச்சயமாக அவருக்குப் புரிந்தது. " நான் அவர்களுக்கு ஒரு சுமையாகிவிட்டேன். விம்மித் தணிந்தது நெஞ்சம்.

அவரது மனதை ஆயிரமாயிரம் புழுக்கள் குடையத் தொடங்கின. அவர் அந்த வீட்டில் ஒரு வேண்டாத விருந்தாளியாக இருப்பதாகப்பட்டது.

கவிதாதான் மூன்று வேளையும் உணவுத் தட்டோடு வந்து போகிறாள். மருமகனோ... பேரப்பிள்ளைகளோ அவரைத் தேடி அவரது அறைக்கு வருவதில்லை.

அவரும் அப்படித்தான். தானும் தன்பாடும் என வாழ்க்கையை ஓட்டியவரே தவிர எவருடனும் ஒட்டி உறவாடுவதில்லை. அவருடைய ஐக்கியமெல்லாம் கமலமும் பிள்ளைகளுடனும் தான். இப்போது மட்டும் பிள்ளைகள் தன்னை அந்நியப்படுத்திவிட்டார்கள் என்ற ஏக்கம் அவருக்குள் புகுந்து கொண்டது. இனிமேல்நான் உணவை ஒறுத்து என்னுயிரை மாய்த்துக் கொள்வதுதான் சிறந்தவழி என மனம் ஒரு கணம்திடசங்கற்பம்பூண்டு கொண்டது. மறுகணமே அந்த எண்ணத்தை தூக்கியெறிந்தார்.


"நான் தன்னிச்சையாகச் செயற்படுவதற்கு இந்த உடலில் தென்பு இருக்க வேண்டியது அவசியம். உடற்தென்பை நான் இழந்துவிட்டால்... என்னைப் பராமரிப்பதற்கு நான் மற்றவர்களை நாட வேண்டிவரும்"

மனம் அவரை அறிவுறுத்தியது. தனிமையெனும் போர்வைக்குள் அவர் தன்னை முற்றாக அமிழ்த்திக் கொண்டார். அவருக்குள் கமலத்தின் நினைவுகள் மட்டும் குமுறலாய் கிளர்ந்தெழுந்தன. கூடவே ஒரு தத்துவமும் நிழலாடியது.

வாழ்க்கையில் முதுமையெனும் நிலைக்கு நாம் வந்துவிட்டோமேயானால் தனிமையை நாம் அனுபவித்தேயாக வேண்டும். சுற்றம், பிள்ளைகள் எனப் பலர் இருந்தபோதிலும் அவர்களுக்கென தனிப்பட்ட சுமைகள் இருக்கவே செய்யும். எனவே, எல்லாவற்றையும் அனுசரித்து கடந்து போக நாம் எம்மைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும். மனம் ஒருநிலைப்பட தூக்கம் அவரைத் தழுவிக் கொண்டது.

மலரன்னை

# தமிழுக்கு அறம் என்று பேர்!




தமிழ்த் தேசிய இனம் மொழியை முதன்மையான அடையாளமாகக் கொண்டிருக்கிறது. இயற்கை மரபைக் கொண்டாடும் செவ்விலக்கியம் இம்மொழியில் இருக்கிறது. செவ்விலக்கணமும் இருக்கிறது. இம்மரபுக்கு நீண்ட வரலாறும் உண்டு. தொடக்கக்கால ஆக்கங்களில் மனிதனை முதன்மைப்படுத்திய அவைதிக மரபுதான் இருந்துள்ளது. செவ்வியல் மரபு, அறம்பேசும் மரபு ஆகியவற்றைக் கொண்ட அவைதிக மரபுதான் தமிழின் அடையாளம்.

தமிழின் பண்டைய அடையாளத்தின் புதிய வாசிப்பாக, சிந்துசமவெளி அகழ்வாய்வு, ஆதிச்சநல்லூர் அகழ்வாய்வு, கீழடி அகழ்வாய்வு, கொற்கை அகழ்வாய்வு ஆகிய பல. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இடைக்காலம் தொடங்கி, அச்சு வாகனம் ஏறிய செவ்விலக்கியம், செவ்விலக்கணம் ஆகிய பலவும் தமிழ் அடையாளச் சின்னங்களாக உள்ளன. தமிழ் மொழிக்கு கி.மு. 700 முதல் எழுத்துப் பொறிப்பு உண்டு என்றும் கொற்கை, கீழடி அகழ்வாய்வுகள் மூலம் அறிகிறோம். தமிழ் அடையாளம் என்பதை, தமிழ் மொழி மற்றும் நிலம் சார்ந்து இப்படித்தான் புரிந்து கொள்ள முடிகிறது.

தமிழ் அடையாளங்கள் காலந்தோறும் எதிர்கொள்ளப்பட்ட கதை சுவையானது. சிலப்பதிகாரம் எழுதப்பட்ட காலம் முதல் தமிழ் ஆக்கங்களில் வைதீகம் படிப்படியாக இடம்பெறத் தொடங்கியது. செவ்விலக்கியப் பிரதிகளில் மிக மேலோட்டமாகக் காணப்பட்ட வழிபாடுகள், நம்பிக்கைகள் அனைத்தும் புராணிய மரபாக மாறின. சிவன், திருமால் போன்ற கடவுளர்கள் இலக்கியங்களிலும் இடம் பெறத் தொடங்கினர்.

மிகப் பிரமாண்டமான கோயில்கள் உருவாயின. இவை வைதீக மரபின் அடையாளங்கள். கோயிலில் வழிபாட்டு மொழி சமஸ்கிருதம். அரசர்களின் நிர்வாக மொழி சமஸ்கிருதம். காலனிய காலத்தில் ஆங்கிலம் அதிகார மொழியாக வடிவம் பெற்றதைப்போல், பல்லவர் காலம் தொடங்கி சமஸ்கிருதம் அதிகார மொழியானது. பிற்காலச் சோழர் காலத்தில் வைதீக மரபே தமிழ் அடையாளமாக ஆகிப் போனது.


மணிப்பிரவாளத் தமிழ், பரதநாட்டியம், கர்நாடக இசை, ஆகம விதிகள் சார்ந்த நூல்கள் எனக் கலை மற்றும் புலமைத்துவ மரபுகள் அனைத்தும் சமஸ்கிருதம் மொழி சார்ந்த வைதீக அடையாளமாகிப் போயின.

ஆடல் மரபு, இசை மரபு, வழிபாட்டு மரபு, காப்பிய மரபு, பிரபந்த மரபு, நாட்டுப்புற மரபு என அனைத்தும் தமிழ் அடையாளத்தை இழந்து போயின.

இராமாயணம், பாரதம் ஆகிய புராணங்கள் வட தமிழகச் சூழலில் விரிவாக வாசிக்கப்பட்டது. சுமார் 1,500 ஆண்டுகளில் இவை நிகழ்ந்து போயின.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் இந்தியாவுக்கு, காலனியம் முந்தைய வரலாறுகளை மறுவாசிப்புக்கு உட்படுத்தின. ஐரோப்பிய புத்தொளி மரபு நமது சமூகத்திற்கும் வந்து சேர்ந்தது. எழுத்தறிவு ஜனநாயகமானது. அச்சுப்பண்பாடு உருவானது. வாசிப்புப் பழக்கம் வந்தது. ஜனநாயகம், கல்வி அறிவு, ஆதிக்கத்தில் இருந்து விடுதலை எனும் பண்புகள் உருவாகின. இதன் மூலம் தமிழ் அடையாளம் குறித்த புதிய குரல்கள் எழுந்தன.

மனோன்மணீயம் சுந்தரனார் “ஆரியம்போல் உலக வழக்கொழிந்து அழியாநின் சீரிளமை திறன் வியந்து வாழ்த்துதுமே” என்று மனோன்மணீய



நாடகத்தின் மொழி வாழ்த்தில் எழுதினார்.

மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளை, மறைமலை அடிகள் (1876-1950), வி.க. (1883-1953), வ.உ.சி. (1872-1936) போன்ற அறிஞர்கள் தமிழ் அடையாளத்தை சைவ அடையாளத்தோடு இணைத்துப் பேசினர். இந்த அடையாளம் யாழ்ப்பாண சமூகத்தில் 'கந்தபுராணக் கலாசாரமாக'வும் வடிவம் பெற்றது. சமஸ்கிருதமொழி சார்ந்த அடையாளம், சைவம் சார்ந்த அடையாளம். இவற்றின் அடுத்தகட்ட அடையாளமாக திராவிட அடையாளம், சுயமரியாதை அடையாளம் ஆகியவை உருவாகின். இருபதாம் நூற்றாண்டில் மீண்டும் தமிழர் அடையாளம் என்பது வைதீக மரபுக்கு மாற்றாக புதிய அவைதிக மரபாக உருப்பெற்றது. இதற்கு மூலங்களாக ஒரு வகையில் அயோத்திதாசரையும் (1845-1914), கலக மரபாகக் கட்டமைந்த ஈ.வெ.ரா பெரியாரையும் (1879-1973) சொல்ல வேண்டும்.

தி.மு.க. என்ற அமைப்பு, செவ்வியல் இலக்கிய மரபுகளைத் தங்கள் அடையாளமாக்கிக் கொண்டது. தங்களைப் புறநானூற்றுத் தமிழர்களாகக் கூறிக் கொண்டனர். ம.பொ.சியின் தமிழரசுக் கட்சியினர் தேசிய நீரோட்டம் சார்ந்த தமிழ் அடையாளத்தைப் பேசினர். சிலப்பதிகாரத்தைக் கொண்டாடினர். தி.மு.கவினர் சங்க இலக்கியங்களைக் கொண்டாடினர். பெரியார் திருக்குறளைக் கொண்டாடினார். இவ்வகையில் உருவான தமிழ் அடையாளத்தால், தி.மு.கவின் ஆட்சி அதிகாரத்தில். 'தமிழ்நாடு' என்னும் பெயர் சூட்டப்பட்டது. சுயமரியாதைத் திருமணத்திற்கு சட்ட அங்கீகாரம் வழங்கப்பட்டது. வைதீக மரபு சார்ந்த சடங்குகள் பெரிதாக முன்னெடுக்கப்படவில்லை. சாதி அடையாளத்தைப் பெயரோடு இணைத்துக்கொள்ளும் வழக்கம் இல்லாமல் போனது. ஆட்சி அதிகாரத்தில் வைதீகத்தின் செல்வாக்கு குறைந்தது. இவையெல்லாம் தமிழர் அடையாளங்களாக அமைந்துபோகின.

சாதி அதிகாரம், மத அதிகாரம் ஆகிய வைதீக மரபுகளுக்கு எதிரான அடையாளமாகவே தமிழ் அடையாளம் இருபதாம் நூற்றாண்டில் கட்டப்பட்டது: திருக்குறள் என்ற நூலை எழுதியவரின் உருவம், பல காலங்களிலும் பல வடிவங்களில் வரையப்பட்டது. சைவ அடையாளங்களோடு தான் முதன் முதலில் திருவள்ளுவர் ஓவியத்தை உருவாக்கினர். இந்த அடையாளம் 1964 இல் முதலமைச்சராக இருந்த பக்தவச்லம் ஆட்சிக்காலத்தில் நீக்கப்பட்டு, வேணுகோபால் சர்மா என்னும் ஓவியரால் மதக் குறியீடுகளற்ற திருவள்ளுவர் ஓவியம் உருவானது. பாரதிதாசன், ஜீவா, அண்ணா போன்றோர் மதச் சார்பற்ற இந்தத் திருவள்ளுவர் உருவத்தை வரவேற்றுப் பாராட்டினார்கள். பிறகு தொடர்ந்து இந்தத் திருவள்ளுவர் அடையாளமே தமிழர்களால் அங்கீகரிக்கப்பட்டது.

திருக்குறளில் மிக அதிகமான குறட்பாக்கள் பொருட்பால் பகுதியில் உள்ளவை. இப்பகுதியில் பேசப்படுபவை அரசு நடத்தும் அரசர்களுக்காகக் கூறப்பட்டவை. திருவள்ளுவர் காலம் என்பது அரசு உருவாக்கம் (State formation) முழுமைபெற்ற காலம். அரசர்களுக்கே முதன்மையாக அறநெறி புகட்டுகிறார் திருவள்ளுவர்.

இல்லறம், துறவறம், காமத்துப்பால் சொல்லப்பட்டிருக்கும் செய்திகளை நாம் பொது மனிதருக்கானதாக ஓரளவு கொள்ளலாம். ஆனால் பொருட்பால் அப்படி இல்லை. எனவே அரச உருவாக்கம் பெற்ற ஒரு சமூகத்திற்குச் சொல்லப்படுவதைப் பொதுமனிதருக்கான அறநெறியாக முழுமையாகக் கொள்ள முடியுமா? ஆனால் திருக்குறள் 'பொதுமறை' என்று கூறி, இடம், பொருள் சூழல் இன்றி அதற்கு விளக்கம் தருகிறார்கள். இதனால்தான், அவர் முதன்மையாக அவைதிக சமண மரபு பற்றிப் பேசியதை, ஒவ்வொரு சமயத்தினரும் தங்களது சமயச் சார்பு என்று சொல்லிக் கொள்கிறார்கள்.


ஒவ்வொருவரும் விரும்பும் வகையில் பேச முடிவதற்குக் காரணம், திருக்குறள் மிகச் சுருக்கமாக ஏழு சீர்களில் இயற்றப்பட்டிருப்பதே. ஒவ்வொரு சொல்லையும் தனித்தனியாக எடுத்துத் தங்களுக்குச் சாதகமாகப் பேசுகிறார்கள். அது எந்த அதிகாரத்தில், எந்தப் பிரிவில் என்ற அடிப்படையான புரிதல் இல்லாமல் திருக்குறளை மானாவாரியாகப் பேசுகிறார்கள்.

திருவள்ளுவரின் சூழல் என்பது அவைதிகச் சூழல். கடவுளை முதன்மைப்படுத்தாமல் மனிதர்களை முதன்மைப்படுத்திய சூழல். அது தமிழின் மிகச் சிறந்த அடையாளம்.

## பெண் மருத்துவர் பாலியல் வன்கொடுமையின் பின் எரித்துக்கொலை

# அதிகாலை விசாரணை சம்பவ இடத்தில் நடந்தது என்ன?

### என்கவுண்டரை விபரித்த சஜ்ஜனார் ஐ.பி.எஸ்.







தெலுங்கானா மருத்துவர் பாலியல் வன்கொடுமை செய்து கொல்லப்பட்ட வழக்கில் கைது செய்யப்பட்ட நான்கு பேரும் என்கவுண்டரில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

தெலுங்கானா மாநிலத்தைச் சேர்ந்த பெண் மருத்துவர் கடந்த நவம்பர் 27 ஆம் திகதி பணி முடிந்து திரும்பியபோது அடையாளம் தெரியாத நபர்களால் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு எரித்துக்கொல்லப்பட்டார். இந்தச் சம்பவம் தொடர்பாக வழக்குப்பதிவு செய்த பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். கடைசியாக அந்த மருத்துவர் தன் சகோதரிக்கு போன் செய்து டோல் கேட் பகுதியில் இருப்பதாகக் கூறியுள்ளார்.

இதையடுத்து டோல்கேட்டில் அமைந்திருந்த சிசிடிவி கமரா பதிவுகளைக் கொண்டு பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். இந்தச் சம்பவத்தில் நாராயன் பேட்டை மாவட்ட ஜக்லரைச் சேர்ந்த லொறிச்சாரதி முகமது பாஷா, நவீன், க்ளீனர்கள் கேசவலு, சிவா ஆகிய நால்வர் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் நடத்திய விசாரணையில் மருத்துவரைப் பாலியல்வன்கொடுமைசெய்துகொலை செய்ததை ஒப்புக்கொண்டனர்.

ஃகைது செய்யப்பட்ட நால்வரும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர். அவர்களுக்கு 7 நாட்கள் நீதிமன்றக் காவல் விதிக்கப்பட்டிருந்தது. இந்தச் சம்பவம் நாடு முழுவதும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. இந்தச் சம்பவத்தில் ஈடுபட்டவர்களுக்குக் கடுமையான தண்டனை வழங்க வேண்டும் என நாடு முழுவதுமிருந்து குரல்கள் எழுந்தன. இந்நிலையில், கைதுசெய்யப்பட்ட நான்கு பேரும் நேற்று முன்தினம் காலை என்கவுண்டரில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

நான்கு பேரும் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தில் மக்களிடம் இருவேறு கருத்துகள் நிலவுகின்றன. என்கவுண்டர் ஒரு தீர்வாகாது எனவும், இதுபோன்ற கோரச் செயல்களுக்கு இதுவே சரியான தண்டனை எனவும் விவாதங்கள் எழுந்துள்ளன.

தெலுங்கானா மக்கள் பொலிஸாருக்கு ராக்கி கட்டி தங்களது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். என்கவுன்டர் செய்த பொலிஸாருக்கு மரியாதை செலுத்தும்விதமாக ரோஜா பூக்களைத் தூவினர். பிரபலங்கள், விளையாட்டு வீரர்கள் எனப் பலரும் சைபராபாத் ஆணையர் சஜ்ஜனாருக்குப் பாராட்டுகளைத் தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில் இந்த என்கவுண்டர் தொடர்பாக சைபராபாத் பொலிஸ் ஆணையர் வி.சி.சஜ்ஜனார் செய்தியாளர்களைச் சந்தித்தார்.

அப்போது பேசியவர், “பெண் மருத்துவர் கொல்லப்பட்ட வழக்கில் ஆதாரங்களின் அடிப்படையில் நான்கு பேரை கைது செய்தோம். டிசெம்பர் 4 ஆம் நான்கு பேரையும் பொலிஸ் காவலில் எடுத்து இரண்டு நாட்களாக விசாரணை நடத்தினோம். மருத்துவரின் செல்போன் உள்ளிட்ட பொருட்களை பதுக்கி வைத்திருப்பதாகக் கூறினார்கள்.

அதன் காரணமாகவே விடியற்காலையில் விசாரணைக்காக இங்கு அழைத்து வந்தோம். நான்கு பேரின் உயிருக்கும் அச்சுறுத்தல் இருந்ததால் அதிகாலையில் அழைத்து வந்தோம். நான்கு பேரையும் அழைத்து வரும்போது பத்துக்கும் மேற்பட்ட பொலிஸாரைப் பாதுகாப்புக்காக அழைத்து வந்தோம்.

திடீரென கற்கள், குச்சிகள் எனக் கையில் கிடைத்த பொருட்களைக் கொண்டு நால்வரும் தாக்குதல் நடத்தினர். சென்ன கேசவலு, முகமது ஆரிஃப் ஆகிய இருவரும் காவலர்கள் வைத்திருந்த துப்பாக்கியைப் பறித்தனர். துப்பாக்கிகளைக் காட்டி எங்களை மிரட்டினர். மற்ற இருவரும் கற்கள், குச்சிகளைக் கொண்டு தாக்கினர். அவர்கள் தாக்குதல் நடத்தியபோதும் நாங்கள் அமைதியாகவே இருந்தோம். சரணடையுமாறு நால்வருக்கும் எச்சரிக்கை விடுத்தோம். நாங்கள் கூறுவதை அவர்கள் கேட்பதாக இல்லை. தொடர்ந்து எங்களை நோக்கித் தாக்குதல் நடத்தினர், துப்பாக்கிகளால் சுடவும் செய்தனர்.

இதையடுத்து தற்காப்புக்காக பதில் தாக்குதல் நடத்தினோம். இதில் நான்கு பேரும் உயிரிழந்தனர். இதில் இரண்டு காவலர்களுக்குக் கடுமையான காயம் ஏற்பட்டது. துப்பாக்கியால் சுட்டதில் அவர்களுக்குக் காயம் ஏற்படவில்லை. கற்கள் மற்றும் குச்சிகளைக் கொண்டு தாக்கியதில் காயம் ஏற்பட்டுள்ளது. காவல் ஆய்வாளர் வெங்கடேஷலு, காவலர் அரவிந்த் ஆகிய இருவலு் காயமடைந்தனர். இருவரும் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கடந்த நான்கு நாள்களாக குற்றவாளிகளுக்கு எதிராக ஆதாரங்களைத் திரட்டினோம். டி.என்.ஏ பரிசோதனை செய்துள்ளோம். அறிவியல்பூர்வமான ஆதாரங்களை இந்த நான்கு பேருக்கு எதிராகச் சேகரித்தோம். தெலுங்கானா, ஆந்திரப்பிரதேசம், கர்நாடகா மாநிலத்தில் இதுபோன்று பெண்கள் எரித்துக்கொல்லப்பட்ட வழக்கின் விபரங்களையும் சேகரித்தோம். இவர்களுக்கு அதில் தொடர்பு இருக்கிறதா? என விசாரித்து வந்தோம்.






இந்த வழக்கில் உயிரிழந்த மருத்துவரின் பெயரையும் அவரது குடும்பத்தினரின் பெயரையும் வெளியிட வேண்டாம் எனக் கேட்டுக்கொள்கிறேன். சட்டம் தன் கடமையைச் செய்துள்ளது. அதைத்தான் என்னால் கூற முடியும். இந்தச் சம்பவம் காலை 5.45 முதல் 6.15 மணிக்கு இடையே நடந்தது. அங்கிருந்து செல்போன், வாட்ச், பவர் பேங்க் உள்ளிட்ட பொருட்களைக் கைப்பற்றியுள்ளோம். என்கவுன்டர் குறித்து மாநில அரசுக்கும், மனித உரிமைகள் ஆணையத்துக்கும் விளக்கம் தரப்படும்” என்றார்.


# அயோத்தியில் என்ன நடந்தது? 04

## புதைக்கப்பட்ட கல்யாண் சிங் கொடுத்த வாக்குறுதி

தயார் நிலையில் இருக்க வேண்டி 5 டிசெம்பர் 1992 அன்று 195 குழுக்கள் அடங்கிய மத்திய துணை இராணுவப்படைகளை அயோத்தியில் களமிறக்கியது மத்திய அரசு. மற்றொரு பக்கம் மொத்தம் 70,000 கரசேவகர்கள் அயோத்தியில் குழுமியிருந்தார்கள்.

அயோத்தி தீர்ப்பு யாருடைய வெற்றியையும் தோல்வியையும் தீர்மானிப்பது அல்ல என ஒற்றுமை காக்கச் சொல்லி அறிவுறுத்தியிருக்கிறார் இன்றைய இந்தியாவின் பிரதமர் நரேந்திர மோடி. தீர்ப்பு இன்று அறிவிக்கப்பட இருக்கிறது. ஆனால் இதே ஒற்றுமைக்கு முக்கியத்துவம் கொடுத்து 1949 இல் இந்து மகா சபா சிந்தித்திருந்தால் 1992 இல் விஷ்வ இந்து பரிஷத் சிந்தித்திருந்தால் மதம் என்றாலே மண்ணின் மக்கள் அச்சத்துடன் அணுகும் போக்கு ஏற்பட்டிருக்காது. மதம் என்றாலே அரசியலுக்கானது என்னும் பார்வை பதிந்திருக்காது. ஆனால் அன்று நடந்தது வேறு.





கல்யாண் சிங் கொடுத்த வாக்குறுதி 2 நவம்பர் 1991 இல் நடைபெற்ற தேசிய ஒருமைப்பாட்டுக் கவுன்சிலின் கூட்டத்திலேயே புதைக்கப்பட்டது எனலாம். ஏனெனில் உத்தரப்பிரதேச அரசு கையகப்படுத்திய சர்ச்சைக்குரிய இடத்தின் சுற்றுப்பட்டு நிலத்தில் அதற்கடுத்த சில காலங்களிலேயே கரசேவகர்கள் தங்களது பணிகளைத் தொடங்கியிருந்தார்கள். ஜூலை 1992 இல் கோயில் கட்டுமானத்துக்கான பணிகளை கரசேவகர்கள் தொடங்கியிருந்தபோது மத்திய அரசு உத்தரப்பிரதேச அரசை அது குறித்துக் கேள்வி எழுப்பியது. 18 ஜூலை 1992 இல் நடைபெற்ற மற்றொரு தேசிய ஒருமைப்பாட்டுக் கவுன்சில் கூட்டத்திலும் கேள்வி எழுப்பப்பட்டது. இருந்தும் கரசேவகர்களின் செயற்பாடுகள் மாநில அரசால் கட்டுப்படுத்த முடியாததாக இருந்தது. அப்போதைய பிரதமர் பி.வி.நரசிம்மராவ் தலையிட்டு கரசேவகர்களுடனான பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு கோயில் கட்டுமானப் பணிகளை நிறுத்தினார். இவை அத்தனை குறித்தும் அரசு 1993 இல் வெளியிட்ட வெள்ளை அறிக்கை பதிவு செய்கிறது.

சுமூகமாக நகர்ந்துகொண்டிருந்த பேச்சுவார்த்தையில் குழப்பத்தை ஏற்படுத்தவே விஷ்வ இந்து பரிஷத் இந்த முடிவை எடுத்தது என்பது தெள்ளத்தெளிவாகத் தெரிந்தது" என்று அடிக் கோடிடுகிறது வெள்ளை அறிக்கை.



பாபர் மசூதி இடம் இடிக்கப்பட்ட அன்று நரசிம்மராவ் தொலைக்காட்சியில் அது குறித்த செய்திகளைப் பார்த்துக்கொண்டிருந்தார் என்கிற விமர்சனம் பல ஆண்டு காலமாக இருந்துவந்தது உண்டு. ஆனால் அதற்குப் பல மாதங்கள் முன்பிருந்தே சர்ச்சைக்குரிய இடத்தை அவர் காக்க எடுத்த நடவடிக்கைகள் குறித்து அரசின் இதே வெள்ளை அறிக்கை விபரிக்கிறது.

27 ஜூலை 1992 இல் அயோத்தி குறித்த விவாதம் நாடாளுமன்றத்தில் எழுந்தபோது பதிலளித்த நரசிம்ம ராவ், இந்த நிலையைச் சீராக்கி, எந்தத் தரப்பையும் குற்றவாளியாக்காமல் இதில் தொடர்புடைய அத்தனை தரப்பின் பார்வைக்கும் இந்தத் தீர்வின் வழியாக நிவாரணம் வழங்குவதே மத்திய அரசின் நோக்கம் (Defuse the situation, avoid the confrontationist approach and to bring about a reconciliation of the views of various concerned parties) என்கிறார். சொல்லுவதோடு மட்டுமல்லாமல் பிரதமர் அலுவலகத்திலேயே அது தொடர்பாக தனி சிறப்பு செல் ஒன்று அமைக்கப்படுகிறது. முந்தைய பிரதமரின் ஆட்சிக்காலத்தில் இந்த விவகாரம் தொடர்பாக முடித்து வைக்கப்படாமல் இருந்தவை அத்தனையும் ஆய்வு செய்யப்படுகின்றன. இணைகோடாக தனிநபர்கள், குழுக்கள், பத்திரிகையாளர்கள், அரசியல், மத மற்றும் சமூகத் தலைவர்களுடன்தொடர்ந்துபிரதமர்அலுவலகம் சந்திப்புகளை நிகழ்த்தியது.

அரசு தரப்பு இந்த பிரச்சினைக்கு என்று தனிப்பட்ட தீர்வு எதுவும் குறிப்பிடவில்லை என்றாலும் பிரதமருடன் நடத்திய தொடர் பேச்சுவார்த்தையின் மூலம் இந்த விவகாரத்தில் அவர்களது நிலைப்பாடு என்ன என்பதைத் தெளிவாக அறிந்துகொள்ள முடிந்தது என வெள்ளை அறிக்கை விளக்குகிறது. குறிப்பாக பிரதமர் என்கிற பொறுப்பில் இருந்த நரசிம்மராவ் நாட்டின் ஒருமைப்பாட்டையும் ஒற்றுமையின் அவசியத்தையும் முன்னிறுத்தி பல்வேறு அரசியல் தலைவர்களின் பொறுப்புணர்வை இந்த விவகாரத்தில் வேண்டி அவர்களுக்குக் கடிதம் எழுதியிருக்கிறார் என்கிறது அறிக்கை.

### கலவரத்துக்கு இரண்டு மாதங்களுக்கு முன்பு...

3 ஒக்டோபர் 1992 இல் மத்திய உள்துறை அமைச்சர் சங்கர் ராவ் சவான் தலைமையில் விஷ்வ இந்து பரிஷத் மற்றும் பாபர் மசூதி கமிட்டிக்கும் இடையே பேச்சுவார்த்தை தொடங்கியது. தொடர் பேச்சுவார்த்தையில் பேராசிரியர் பி.பி.லால் உள்ளிட்டவர்கள் மேற்கொண்ட நடுநிலையான சில தொல்லியல் ஆய்வு முடிவுகளும் விவாதிக்கப்பட்டன. 8 நவம்பர் 1992 இல் மீண்டும் பேச்சுவார்த்தைக்காக கூடுவதென முடிவு செய்து குழு கலைந்தது. அந்த கூட்டத்தில் சில முக்கிய முடிவுகள் எடுக்கப்படும் என்றும் சொல்லப்பட்டது.

இதற்கிடையேதான் விஷ்வ இந்து பரிஷத்தின் கிளை அமைப்பான கேந்திரிய மகாதர்ஷக் மண்டல் 29 மற்றும் 31 ஒக்டோபர் 1992 இல் கூட்டம் ஒன்றைக் கூட்டியது. அந்தக் கூட்டத்தில்தான் 6 டிசெம்பர் 1992 இல் மீண்டும் கரசேவையைத் தொடங்குவது என முடிவு செய்யப்பட்டது. சுமுகமாக நகர்ந்து கொண்டிருந்த பேச்சுவார்த்தையில் குழப்பத்தை ஏற்படுத்தவே விஷ்வ இந்து பரிஷத் இந்த முடிவை எடுத்தது என்பது தெள்ளத்தெளிவாகத் தெரிந்தது" என்று அடிக்கோடிடுகிறது வெள்ளை அறிக்கை.

இதையடுத்துஅரசும்தன்னை நெருக்கடியான சூழல்களுக்காகத் தயார்படுத்திக் கொள்ளத் தொடங்கியிருந்தது. சர்ச்சைக்குரிய இடத்தைச் சுற்றியுள்ள இடங்களை மத்திய அரசு கையகப்படுத்தக்கோரிய மனு தனியாரால் உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. சுவாமி சின்மயானந்தா மற்றும் விஜயராஜே சிந்தியா கைப்பட எழுதப்பட்ட கடிதங்களை உத்தரப்பிரதேச அரசு உச்சநீதிமன்றத்தில் கொடுத்தது. அதில் மதம் சார்ந்த சடங்குகளுக்காகத்தான் கரசேவகர்கள் அயோத்தியில் கூட இருப்பதாகவும் மற்றப்படி வன்முறைகள் எதுவும் நிகழாமல் பார்த்துக்கொள்ளப்படும் என்றும் பாரதிய ஜனதா கட்சியும் விஷ்வ இந்து பரிஷத்தும் இணைந்து கொடுத்த அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. இருந்தும் தயார் நிலையில் இருக்க வேண்டி 5 டிசெம்பர் 1992 அன்று 195 குழுக்கள் அடங்கிய மத்திய துணை இராணுவப்படைகளை அயோத்தியில் களமிறக்கியது மத்திய அரசு. மற்றொரு பக்கம் மொத்தம்70,000 கரசேவகர்கள்அயோத்தியில் குழுமியிருந்தார்கள். மதச்சடங்குகள் நடைபெற இருப்பதாக அனைவரும் எண்ணிக்கொண்டிருந்த சமயத்தில்தான் 6 டிசெம்பர் 1992 மதியம் 12:20 மணிக்குச் சரியாக அந்தச் சம்பவம் நிகழ்ந்தது.

(அடுத்த வாரம் தொடரும்)

ஜூனியர் விகடன்

# மீளுமா வடக்கின் பொருளாதாரம்?

பொருளாதாரம் என்றவுடன் எமது நினைவுக்கு வருவது அபிவிருத்தி. அபிவிருத்தி என்பது ஒரு நாட்டின் வளர்ச்சிப்போக்கினை அறிந்துகொள்வதற்கும் அதனூடாக நாட்டின் மேன்மைக்கு வித்திடுவதற்குமானது. அந்த வகையில் முழு இலங்கையையும் எடுத்துக்கொண்டால் யுத்தத்திற்கு முன்னர் பல மாவட்டங்களில் பல பெருங்கைத்தொழில்கள் துறைமுக அபிவிருத்தி, மீன்பிடி, குடிசைக் கைத்தொழில்கள் என பலவாறு வளர்ந்து வந்த நிலமைமைகளை காணக்கூடியதாக உள்ளது (எண்பதுகளுக்கு முன்பு) எனினும் இந்த நிலைமையில், யுத்த காலப் பகுதியிலும் அதன் பின்னரும் வளர்ச்சி என்பதற்கு பதிலாக வீழ்ச்சிப்போக்கு பரவலாக காணப் பட்டதனை அறியமுடிகிறது.

> “யாழ்ப்பாணத்தில் இன்று பல பிரமுகர்களை, கல்விமான்களை காண்கின்றோம். அவர்களின் மூதாதையர்களை எடுத்துக்கொண்டால் குடிசைக் கைத்தொழிலில், விவசாயத்தினூடாக வளர்ந்த கதையை அவர்கள் சொல்லக் கேட்கலாம்.”

குறிப்பாக வடக்கு மாகாணத்தை எடுத்துக்கொண்டால் இது தமிழர்கள் செறிந்து வாழும் பகுதி. அத்துடன் தமிழர்களின் பூர்வீகம், பண்பாடு, கலை, கலாசாரம் என்பன விரிந்து பரந்து காணப்படுகின்றது. அதிலும் 1980 இற்கு முன்னைய காலப்பகுதியை எடுத்துக்கொண்டால் குடிசைக் கைத்தொழில் மட்டுமன்றி விவசாயம், மீன்பிடி என்பன அதிகரித்த தொழில் வாய்ப்பினையும், அதிகமான முதலீடுகளையும், அதற்கு மிகை அதிகரிப்பான வருமானங்களையும் ஒருங்கே கொண்டிருந்தது குறிப்பிடத்தக்கது.


ஆனால், விவசாயம் இந்தக் காலங்களில் பருமட்டான வீழ்ச்சியைக் கொண்டதாகவும் ஆனால் விவசாயத்தில் ஒரு தன்னிறைவினையும் காணமுடிந்தது. இங்கு தன்னிறைவு கொண்ட வீழ்ச்சி என்று குறிப்பிடுவது தொண்ணூறுகளில் வடக்கு பகுதிகளை பொறுத்தமட்டில், அதிலும் யாழ்ப்பாண மாவட்டம் என்பதை எடுத்துக்கொண்டால் ஒரு மூடிய பொருளாதாரம் கொண்ட நிலையே காணப் பட்டது.

ஆனாலும் அன்றைய காலப் பகுதியில் விவசாயத்திற்கு பயன்படுத்தப்படும் உள்ளீடுகளின் விலையில் அதிகரிப்பும் எரிபொருட்களின் விலை என்பது பெருமளவிலான அதிகரித்த தன்மையிலும் காணப் பட்டது. ஆனாலும் மொத்த விவசாயத்தின் வீழ்ச்சியை காட்டிலும் யாழ்ப்பாண மாவட்டம் விவசாயத்தில் ஒரு மறுமலர்ச்சியை காட்டியது. அதாவது இந்த காலப்பகுதியில் தரிசு நிலங்கள் என்ற ஒன்றை கூட காணமுடியாத அளவிற்கு விவசாயம் பெருமெடுப்பில் மேற்கொள்ளப்பட்டது.

இவ்வாறே குடிசைக்கைத்தொழில் என்பது தமிழர்களின் பாரம்பரிய காலம் தொட்டே ஒரு முக்கியமான தொழில் மூலமாகும். அதாவது யாழ்ப்பாணத்தில் இன்று பல பிரமுகர்களை, கல்விமான்களை காண்கின்றோம். அவர்களின் மூதாதையர்களை எடுத்துக்கொண்டால் குடிசைக்கைத் தொழிலில், விவசாயத்தினுடாக வளர்ந்த கதையை அவர்கள் சொல்லக் கேட்கலாம். அந்தளவிற்கு குடிசைக் கைத்தொழில் விவசாயம் எமது மண்ணை வளர்த்தெடுத்த தொழில் மூலம். அதனை விட வடநிலத்தில் ஒரு புரட்சியை ஏற்படுத்திய ஒரு தொழில் மூலம் என்று குறிப்பிடலாம்.

விவசாயம், குடிசைக்கைத்தொழில் தவிர்த்து பெருங்கைத்தொழிகள் என்பதனை எடுத்துக்கொண்டால், யுத்தத்திற்கு முன்னர் பரந்தன் இரசாயன தொழிற்சாலை, ஆனையிறவு உப்பு உற்பத்தி, காங்கேசன் துறையில் சீமெந்து தொழிற்சாலை, காங்கேசன்துறை துறைமுகம், பருத்தித்துறை துறைமுகம், சுன்னாகத்தில் கண்ணாடித்தொழிற்சாலை, மஸ்கன் கூரைத் தகடுகள், அச்சுவேலி கைத்தொழிற் பேட்டை, ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலை மறுபுறத்தே கிழக்கு மாகாணத்தை பார்ப்போமானால் வாழைச்சேனை கடதாசித் தொழிற்சாலை, புல்மோட்டை இல்மனைற் தொழிற்சாலை இதனைவிடமும் இன்னும் வேறு தொழிற்சாலைகள் இன்று எமது கண்ணுக்கு தெரியாத வெறும் கட்டடங்களாகவே காணப்படுகின்றன.

இப்பெரும் கைத்தொழில்கள் பல ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பை கொடுத்ததோடு, நாட்டின் உள்ளூர் உற்பத்தியை அதிகரிக்கவும், மொத்த தேசிய வருமானத்தில் செல்வாக்கு




செலுத்துமளவிற்கும் இருந்துள்ளது. யுத்தம் முடிந்த பின்னர் கூட ஆட்சிக்கு வந்த எந்தவொரு அரசும் இக் கைத்தொழில்களை மீட்டெடுப்பதற்கான முயற்சிகளையோ அல்லது இவற்றிற்கு மாற்றீடான முயற்சிகளை மேற்கொள்ளவோ முன்வரவில்லை.

யுத்தம் முடிவடைந்த பின்னர் விவசாயத்தினை எடுத்துக் கொண்டால் மருவி மருவி குறைந்துகொண்டே சென்ற விடயத்தினை பார்க்கக்கூடியதாக உள்ளது.

தற்போதைய நிலையில் தம்புள்ள மரக்கறிகள் இல்லை என்றால் திருநெல்வேலி சந்தையில் மரக்கறிகள் இல்லை என்ற நிலை வந்துவிடும். அந்தளவிற்கு விவசாயம் என்பது வீழ்ச்சியடைந்த தன்மையினை காட்டி நிற்கின்றது. இங்கு, விவசாயம் தொடர்பான கல்வியில் இருந்து விவசாயிகளுக்கான போட்டிகள், அவர்களின் உற்பத்தி பொருளுக்கான சந்தை வாய்ப்பு போன்ற காரணங்கள் நிவர்த்தி செய்யப்படாத தன்மையும் கால்நடை வளர்ப்பின் வீழ்ச்சியும் இதற்கு காரணங்கள் ஆகும்.

தற்போது வெளிநாட்டு மோகம், வெளிநாட்டில் இருந்து தருவிக்கப்படும் கண்ணுக்கு அழகும் கவர்ச்சியும் கொண்ட பொருட்களின் வருகை இன்றைய இளைஞர், யுவதிகளின் டாம்பீகமான வாழ்க்கை முறை இவற்றைவிட முக்கியமாக இன்றைய நிலையில் மேலோங்கியுள்ள பல்தேசிய கம்பனிகளின் ஆதிக்கம் என்பன குடிசைக் கைத்தொழில்கள் மீதான கவனத்தை குறைத்து அவற்றை முற்றாக அழித்து விட்டன என்றே சொல்லலாம்.

யுத்தத்திற்கு முன்பிருந்த ஓரளவு தன்னிறைவான பொருளாதாரத்தில் கைத்தொழில்கள், விவசாயம், மீன்பிடி, துறைமுகம் ஓரளவு வளர்ச்சிப்போக்கில் காணப்பட்டது. யுத்தம் முடிந்த பின்னர் அரசோ அல்லது, தமிழர்களை தலைவர்களாக கொண்ட வடமாகாண சபையோ பொருளாதார மூலத்தில் எவ்வித முன்னேற்றத்தினையும் ஏற்படுத்தாது, ஐந்து வருட காலத்தினை வெறுமனே கழித்தது.

இங்கே விவசாயம், குடிசைக் கைத்தொழில், மீன்பிடி, துறைமுக அபிவிருத்தி, உட்கட்டுமான அபிவிருத்தி என்பதில் எதுவித முன்னேற்றங்களைக்கூட எய்தவில்லை. மாறாக கைத்தொழிற்சாலைகள் இருந்த இடத்திலேயே வெறும் உடைந்த கட்டடங்களாகவும், பற்றைக் காணிகளாகவும் காணப்படுகின்றன.

முன்னேற்றமோ மாற்றமோ வடமாகாண சபையாலும் ஏற்படுத்தப்படவில்லை. இலங்கையினை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசாக இருந்தாலும், வடமாகாண சபையாக இருந்தாலும் இந்த விடயத்தினை கவனிக்க தவறிவிட்டது. அதாவது இருவருக்கும் இடையில் இதுவிடயத்தில் ஒத்த தன்மையினை காணமுடிகிறது.

இதன் விளைவு, இன்று வேலையற்ற இளைஞர்களின் நிலை நாட்டில், குறிப்பாக வடக்கு- கிழக்கில் அதிகரித்தே வருகின்றது. வருடாவருடம் வேலையற்ற பட்டதாரிகள் யாழ். மாவட்ட செயலகத்தின் முன் மாதக் கணக்கில் வேலைகேட்டு போராட்டங்களில் ஈடுபடுகிறார்கள். நாம் இழந்து போன குடிசைக் கைத்தொழில்கள், விவசாயம், தொழிற்பேட்டைகளை மீள் கட்டுமானம் செய்யாதவரை இந்த நிலை தொடரத்தான் போகின்றது.

அண்மையில் திருத்தப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு இடைநடுவில் நிறுத்தப்பட்ட அச்சுவேலி கைத் தொழில்பேட்டை என்னவாயிற்று? பன்னாட்டு நிறுவனங்களை உள்வாங்குவதற்கு பதிலாக கைவிடப்பட்ட எமது தொழிற்பேட்டைகளை மீளக்கட்டியமைக்கும் பணியை அரசும் இனிவரும் வடக்கு மாகாண சபையும் முன்னெடுக்குமா?

இன்று மக்கள் எதிர்நோக்கும் பல பொருளாதார பிரச்சினைகளுக்கு இதன் மாற்றம் என்பது பெரிய பலாபலன்களை கொடுக்கும். அது நிகழுமா? வடபொருளாதாரம் மீளுமா?

**எஸ்.தமிழினி**

# ஆக்கையால் பயனென்ன...



அன்பார்ந்த சங்குநாத வாசகர்களின் அன்பிற்கு தலைவணங்கி ஜிம்மிக்குட்டி கூறும் இனிய ஞாயிறு வணக்கங்கள். பொங்கி வரும் காட்டாறாய்ப் பூமகளை முழுக்காட்டி மகிழும் மாரித்தாய்க்கு அன்பும் பயமும் கலந்த ஆராதனை உரித்தாகட்டும்.

என்ன யோசிக்கிறியள். இஞ்சை பரவாயில்லை. அங்காலை வன்னிப் பெருநிலப் பரப்பிலை அவலம் சூழ்ந்து தவிக்கும் இனிய உறவுகளை நோக்கி பெரியவர் வீட்டில் இருந்து ஒரு ஹயஸ் வாகனமும் லொறியும் வெளிக்கிடுது. பெரியவர் சாமி கும்பிடுறார். கேட்குதோ உங்களுக்கு....

**"பூமியில் மானிட ஜென்மம் எடுத்தேன்**
**பூமலர்ப் பாதம் போற்றிப் பணிந்தேன்**
**ஆக்கையைக் காணிக்கையாகத் தந்தேன்**
**ஐயனே மானுடம் நேசிக்கும் வரம் தா..."**

ம்...ம்...மனிதத்தை நேசிக்கிறதென்றால் முதலில் அவர்களுக்கு மனசு இருக்க வேணும். அதிலை கருணை இருக்க வேணும். தயங்காமல் ஓடிப் போய்க் கைகொடுக்கும் பண்பு இருக்க வேணும். தேவை எங்கை என்று தேடி அறிந்து உள்நுழைந்து உதவிக்கரம் கொடுக்கும் மனிதாபிமானமும் மனிதநேயமும் தாராளமாகக் கொட்டிக் கிடக்க வேணும். கிராமங்களின்ர தொடக்கத்திலை மட்டும் நின்றுவிடாது உள்ளே போக வேணும்.

ஒரே குடும்பத்திற்கே தொடர்ந்து உதவி கிடைக்கிற நிலை மாறி ஒற்றையடிப் பாதையாலை பயணம் செய்யிற இடங்களுக்கும் கையிலை தூக்கிச் சுமந்து கொண்டு போய்க் கொடுக்க வேணும்.

றோட்டுச் சரியில்லை, ஒரே வெள்ளக்காடாக் கிடக்குது. வாகனம் போகாது எண்டு சும்மா நொண்டிச் சாட்டுக்களைச் சொல்லாமல் தேவை உள்ளவர்களைத் தேடிச் சென்று உதவி வழங்க வேணும். குழந்தைகளுக்குப் பால்மா கொடுக்கிற போது அதை அருந்தப் பால் புட்டியும் கொடுக்க வேணும். ம்...ஒரே வேணும் வேணும் எண்டு அடுக்கிக் கொண்டு போறன் எண்டு சினப்படக் கூடாது. பொறுமையாக் கேட்க வேணும்...

சிசிரி பெரியவர் வாறார். மகனையும் பாலா அண்ணையையும் கிட்டக் கூப்பிடுகிறார்...

மகன் என்னாலை உங்களோடை வர முடியாது. நான் உங்களை நம்பிறன். முடிஞ்ச வரைக்கும் உரிய இடத்திற்கு உதவி போற மாதிரிப் பார்த்துக் கொள்ளுங்கோ. சும்மா வீடியோவும் படமும் எடுத்துப் படம் காட்டாமல் அர்ப்பணிப்போடை அர்த்தமுள்ள சேவை செய்து போட்டுக் கவனமாத் திரும்புங்கோ. இந்த மனிதப் பிறவி எடுத்த நோக்கமே இந்த உடலை கருவியாக்கி உயர்வான செயல்களைச் செய்யத்தான் என்ற விசயத்தை மறக்கக் கூடாது. வேலை சுலபம் எண்டு நினைக்காதையுங்கோ.

எவர் முகமும் தன் மானமும் கோணாதபடி பார்த்துக் கொள்ளுங்கோ. திரும்பத் திரும்ப வந்து சிலர் பொருட்களுக்குக் கைநீட்டினால் கோபப்படாதையுங்கோ. பக்குவமாய்க் கதைச்சுக் காரியத்தைச் சீராய்ச் செய்யுங்கோ. அடுத்த லொறி சின்னாம்பியண்ணை கொண்டு வருவார். தொடர்பிலை இருக்கோ. இடையிலை நீங்கள் சந்திச்சுச் சேர்ந்து கொண்டு புது இடங்களுக்குப் போங்கோ. அமைப்புக்களோடை முரண்படாதையுங்கோ. எங்களிட்டைத் தாங்கோ. நாங்கள் குடுக்கிறம் என்று கேட்பார்கள். ஆனால் மக்களின் கைகளுக்கு அது போய்ச் சேருவதை அருகில் இருந்து உறுதிப்படுத்த வேணும்...சரி ஐயா ...மழை வெளிக்குது. வெளிக்கிடுங்கோ. ஒரு திட்டமிடலோடை செய்யிற எந்தக் காரியமும் சிதறாது. சீராத்தான் அமையும். பார்த்துப் பக்குவமாய்ப் போட்டு வாங்கோ..."

ஹயஸ் கதவைப் பெரியவர் சாத்திப் போட்டு விலகி வந்து நிற்கிறார்....ஏதோ முனகிறார்.

"அரனே...உன் கோயில் வலம் வந்து என் பிணி தீர வணங்கும் நிலைக்கு ஈடாக இந்த ஆக்கை... மனிதம் காக்கப் பயன்படட்டும். இளையோர் உலகம் முன்மாதிரியாப் புறப்பட்டுப் போகட்டும். கொடுப்பதும் வாங்குவதும் வாங்குவதும் கொடுப்பதும் கௌரவமாய் இருக்கட்டும்...."

சரி...நான் போட்டு வாறன்...

**திருமதி.பாரதி கணேஷ்**
**சுன்னாகம்.**

## காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : உத்தமபுத்திரன்
இயற்றியவர் : ஏ.மருதகாசி
இசை : ஜி.ராமநாதன்
பாடியவர்கள் : ரி.எம்.சௌந்தரராஜன், பி.சுசீலா



முல்லை மலர் மேலே
மொய்க்கும் வண்டு போலே
முல்லை மலர் மேலே
மொய்க்கும் வண்டு போலே
உள்ளம் உறவாடுதுங்கள் அன்பாலே
உள்ளம் உறவாடுதுங்கள் அன்பாலே
முல்லை மலர் மேலே

வெள்ளி அலை மேலே
துள்ளும் கயல் போலே
வெள்ளி அலை மேலே
துள்ளும் கயல் போலே,
அல்லி விழி தாவ கண்டேன் என் மேலே
அல்லி விழி தாவ கண்டேன் என் மேலே,
முல்லை மலர் மேலே

வெண்ணிலவை பூமியின் மேலே.........
வெண்ணிலவை பூமியின்
மேலே புன்னகையாலே,
வெண்ணிலவை பூமியின்
மேலே புன்னகையாலே,
கண்ணெதிரில் காணுகின்றேன்
பிரேமையினாலே
கண்ணெதிரில் காணுகின்றேன்
பிரேமையினாலே,

மின்னல் உருமாறி மணமேலே
கன்னியை போலே.யே.....யே.....யே.....
மின்னல் உருமாறி மணமேலே
கன்னியை போலே,
அன்னநடை பயில கண்டேன் ஆசையினாலே
அன்னநடை பயில கண்டேன் ஆசையினாலே,

ஆ.....ஆ......
முல்லை மலர் மேலே
மொய்க்கும் வண்டு போலே.....

விந்தை மிகும் மகுடி முன்னாலே
நாகத்தை போலே ஆ.....ஆ.....ஆ......
விந்தை மிகும் மகுடி முன்னாலே
நாகத்தை போலே,
எந்தன் மனம் ஆட கண்டேன் இன்பத்தினாலே,
எந்தன் மனம் ஆட கண்டேன் இன்பத்தினாலே,

சிந்தை நிலை மாறினதாலே
எந்தன் முன்னாலே,
சிந்தை நிலை மாறினதாலே
எந்தன் முன்னாலே,
செம்பவளம் நெருங்க கண்டேன்
என் மனம் போலே
செம்பவளம் நெருங்க கண்டேன்
என் மனம் போலே,
ஆ.....ஆ.....ஆ.......

முல்லை மலர் மேலே
மொய்க்கும் வண்டு போலே,
முல்லை மலர் மேலே
மொய்க்கும் வண்டு போலே,
ஆ.....ஆ.....ஆ......ஆ......ஆ.......




பரியேறும் பெருமாள், பிகில் ஆகிய படங்களுக்கு பிறகு நடிகர் கதிர் நடித்துள்ள படம் ஜடா.

இது கால்பந்து தொடர்பான படம் என ட்ரைலர் பார்த்தே தெரிந்திருக்கும். ஆனால் இது வழக்கமான கால்பந்து பற்றிய படம் அல்ல. சென்னை உள்ளிட்ட இடங்களில் விதிகள் சரிவர பின்பற்றப்படாமல் விளையாடப்படும் 7S விளையாட்டு பற்றியது தான். படம் எப்படி இருக்கு வாங்க பார்ப்போம்.

தேசிய அணியில் விளையாட வேண்டும் என்கிற முனைப்பில் சிறிய வயது முதல் கால்பந்து பயிற்சி பெற்று வருகின்றனர் கதிர் மற்றும் அவரது நண்பர்கள்.

அந்த சமயத்தில் 10 வருடங்கள் கழித்து 7S போட்டி நடத்துகின்றனர் வில்லன் குணா கேங். அதில் நான் விளையாடியே தீருவேன் என முடிவெடுக்கிறார் கதிர். ஏனென்றால் 10 வருடங்கள் முன்பு நடந்த போட்டியில் கதிருக்கு கால்பந்து பயிற்சி அளித்த கிஷோர் உயிரையே விட்டுவிடுகிறார்.

அதற்கு பழிவாங்க தற்போது அந்த போட்டியில் கலந்துகொள்ள போவதாக கூறுகிறார் கதிர்.

அந்த போட்டியில் அவர் அணி ஜெயித்ததா?, அதில் வரும் சிக்கல்களை எப்படி சமாளித்தார் என்பது தான் மீதி படம். பரியேறும் பெருமாளுக்கு பிறகு கதிர் மீது ஒரு பெரிய எதிர்பார்ப்பு இருந்தது. ஆனால் இப்படி ஒரு கதையை ஏன் அவர் தேர்ந்தெடுத்தார்



என்று தான் தெரியவில்லை. படம் தொடங்கி 5 நிமிடத்திற்கு கால்பந்து எப்படி வந்தது என பெரிய வரலாறை அனிமேஷனில் காட்டிவிட்டு அதன் பிறகு நேராக வடசென்னையில் கால்பந்து விளையாடும் கதிர் அணியை காட்டுகிறார்கள். அதன் பிறகு 5 நிமிடத்திற்கு மட்டும் ஒரு லவ் ட்ராக் ஓடுகிறது.

அதன் பிறகு பெரிய பில்டப் கொடுத்து 7S கால்பந்து போட்டி பற்றி காட்டுகிறார்கள். கை உடைந்துவிடும், கால் உடைந்துவிடும் என பில்டப் மட்டும் கொடுக்கிறார்கள். ஆனால் போட்டியில் காட்டும் போது எழைடநஉெந ஒன்றுமே இல்லையே?

அதன்பிறகு சம்பந்தமே இல்லாமல் ஒரு பேய் ஹாரர் ட்ராக் வருகிறது. ஆனால் அதிலும் ஹாரர் இல்லை. வெறும் சத்தத்தை மட்டும் காட்டி பயமுறுத்த முடியும் என நினைத்துவிட்டாரோ இயக்குநர்.

கதிர் நடிப்பில் ஜொலிக்க ஒன்றும் பெரிய வாய்ப்பு இல்லை, ஹீரோயின் எதற்கென்றே தெரியாத அளவுக்கு ஒரு ரோல். வெறும் ஐந்து நிமிடம் மட்டுமே ரொமான்ஸ் காட்சியில் மட்டுமே வந்து செல்கிறார். யோகிபாபு காமெடி பல இடங்களில் சிரிப்பே வராத ரகம்.

மொத்தத்தில் இப்படி ஒரு amateur படத்தில் நடிக்க கதிர் கொஞ்சம் யோசித்திருக்கலாம்.

ஹாரர் அல்லது ஸ்போர்ட்ஸ் எதாவது ஒன்றில் மட்டும் கவனம் செலுத்தியிருந்தால் படம் பார்க்கும் படியாகவாவது இருந்திருக்கும். இரண்டையும் கலந்து சொதப்பி விட்டனர்.




தமிழ் சினிமாவில் ஒரு நல்ல ஹாரர் படம் வந்து வெகு நாட்கள் ஆகிவிட்டது. ஹாரர் என்றாலே பயந்த காலம் போய் தற்போது காமெடி படங்களாக தான் பேய்களே வந்து செல்கின்றது. அந்த வகையில் அவள் படத்திற்கு பிறகு முழுக்க முழுக்க ஹாரர் ஜானர் படமாக வந்துள்ள இருட்டு திகிலூட்டியதா? பார்ப்போம்.


ஓர் ஊரில் பகல் 12 மணிக்கு திடீரென்று இருட்டாகிறது. அதைத் தொடர்ந்து அந்த இருட்டு போவதற்குள் 6 பேர் இறக்கின்றனர்.

இந்த கேஸை விசாரித்து வரும் பொலிஸும் தற்கொலை செய்துக்கொள்ள அந்த கேஸை விசாரிக்க சுந்தர்.சி அவருடைய குடும்பத்துடன் வருகிறார்.

அவர் அந்த ஊருக்கு வந்த பிறகு அவருடைய வாழ்க்கையிலேயே சில அமானுஷிய விடயங்கள் நடக்கின்றது. இதற்கெல்லாம் காரணம் என்ன, எப்படி அவர்கள் இறந்தார்கள், ஏன் கொல்லப்பட்டார்கள் என்பதே மீதிக்கதை.

சுந்தர்.சி நீண்ட நாட்களுக்கு பிறகு மீண்டும் ஹீரோவாக களம் இறங்கியுள்ளார். இந்தமுறை வெறுமென காமெடி, சண்டை, பாட்டு என்றில்லாமல் ஒரு த்ரில்லர் கதையம்சத்தை தேர்ந்தெடுத்து சிறப்பாக நடித்துள்ளார்.

துரை தமிழ் சினிமாவில் முகவரி, தொட்டிஜெயா, 6 கேண்டில்ஸ் போன்ற நல்ல படங்களை கொடுத்தவர். கொஞ்ச நாட்களாக இவர் தடுமாற இந்த முறை ஹாரர் என்ற ஜானரை எடுத்து அதை சிறப்பாகவும் எடுத்துள்ளார்.



பேய் படம் என்றாலே நமக்கு 1000 ரெபரன்ஸ் இருக்கு, ஸ்லோமோஷனில் ஜன்னலை காட்டினால் இப்ப பாரு ஒருத்தே முகத்தை காட்டி பயமுறுத்துவான் என்று கமெண்ட் அடித்துவிடுவார்கள். அவையெல்லாம் இந்த படத்தில் இருந்தாலும் எடுத்துக் கொண்ட கதைக்களம் கவர்கிறது.

இதுநாள் வரை பேய் என்றாலே இறந்துவிடுவார்கள், பழி தீர்ப்பார்கள் என்று தான் வரும், இதிலும் அப்படி என்றாலும் இதுவரை இந்திய சினிமா கண்டிராத ஜின் என்ற விடயத்தை அறிமுகப்படுத்தி அந்த கதையை கடைசி வரை சஸ்பென்ஸாக வைத்திருந்து கொண்டு சென்றது புத்திசாலித்தனம்.

அதே நேரத்தில் கான்ஜுரிங், இன்சிடிஸ் என்ற நாம் பார்த்த பல ஹொலிவுட் படங்கள் ஞாபகம் வருவதையும் தவிர்க்க முடியவில்லை, அதிலும் கிளைமேக்ஸ் அப்படியே கான்ஜுரிங் இரண்டாம் பாகத்தை பார்த்தது போல் உள்ளது.

படத்தில் முதல் பாதியில் தேவையில்லாத இடங்களில் ரொமான்ஸ் காட்சிகள் வந்து செல்லும், அட இப்ப எதற்குடா இது என்றாலும், அதை வைத்து காட்சிகளை நகர்த்தியது அந்த ரொமான்ஸ் காட்சிகளை மன்னித்து ஏற்றுக் கொள்ளலாம்.

கிரிஷின் இசை படத்தின் ஆரம்பத்தில் பேய் படம் என்பதற்காக இஷ்டத்திற்கு இருந்தாலும், அரேபிக் சம்பந்தமான காட்சிகளில் வரும் இசை அருமை. புதுவிதமான பேய் கான்செப்ட் எடுத்த விதம்.

கடைசி வரை அது என்ன, என்ன என்று கேட்க வைப்பது. படத்தின் ஒளிப்பதிவு, இத்தனை அழகான மலைப் பிரதேசத்தை கண்முன் காட்டிய விதம்.

புது கான்செப்ட் என்றாலும் பல ஹொலிவுட் படங்களில் பார்த்த காட்சிகள் போல் இருக்கின்றது.

மொத்தத்தில் இருட்டு கண்டிப்பாக உங்களை பயமுறுத்தும். டீசண்ட் ஹாரர் மூவி.

# வேகம்... விவேகம்... வெற்றிக்கூட்டணி!


'அந்த அதிர்ஷ்டம் உங்களுக்குக் கிடைக்கலை'- ஒவ்வொரு தலைமுறையினரும் தங்களின் அடுத்த தலைமுறையிடம் சொல்லும் வார்த்தைகள் இவை. அதுவும் விளையாட்டுப் பிரியர்கள் எல்லோருமே தங்கள் வாரிசுகளிடம் இப்படிப் பலமுறை சொல்லியிருப்பார்கள். தாங்கள் பார்த்ததுபோல் ஒரு விளையாட்டு வீரனை அடுத்த தலைமுறை பார்க்காது என்று ஆணித்தரமாக நம்புவார்கள். அந்த நம்பிக்கைதானே அந்த வீரனின் வெற்றி! ஒரு ரிச்சர்ட்ஸை, ஒரு மரடோனாவை, ஒரு போரிஸ் பெக்கரை இனி பார்த்திட முடியாது என்று கேள்விப்பட்டவர்கள் சச்சினை, மெஸ்ஸியை, ஃபெடரரைக் கடவுளாகக் கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள்.

அடுத்த தலைமுறைக்கு எதுவும் கிடைத்திடாது என்று நினைக்கும்போது, அவர்கள் அனைத்தையும் இரட்டிப்பாகக் கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். கவாஸ்கருக்குப் பின் சச்சின், அதன்பின் கோலி என இந்திய கிரிக்கெட் கொண்டாடிய நாயகர்களுக்குச் சரியான சப்ஸ்டிட்யூட் வீரர்கள் ஒவ்வொரு தலைமுறைக்கும் வந்துகொண்டுதானிருக்கிறார்கள். கோலி ஓய்வு பெறுவதற்கு முன்பாகவே, அடுத்த ரன் மெஷினை இந்தியா கண்டுகொண்டுவிடும்.

ஆனால், அதில் சந்தோஷப்படுவதற்குப் பெரிதாக என்ன இருக்கிறது? இல்லாத ஒரு விடயம் கிடைப்பதுதானே முக்கியம். முந்தைய தலைமுறைகள் தவமிருந்த ஒரு விடயம், அவர்கள் கனவிலும் நினைத்திடாத ஒரு விடயம் நம் கண் முன் அரங்கேறுவதுதானே ஆனந்தம். நம் தாத்தாக்கள் எத்தனை பேர் வெஸ்ட் இண்டீஸின் மிரட்டல் வேகப்பந்துவீச்சுக் கூட்டணியைச் சிலாகித்திருப்பார்கள்! நம் அப்பாக்கள் எத்தனை பேர் வாசிம் அக்ரம், வக்கார் யூனுஸ் நிகழ்த்தும் ஸ்விங் ஜாலத்தைப் பற்றிப் பேசியிருப்பார்கள்! எத்தனை முறை இந்தியாவில் அப்படியொரு பௌலிங் யூனிட்டைப் பார்க்க வேண்டுமென்று ஆசைப்பட்டிருப்பார்கள்!

அந்தத் தலைமுறைகள் காணாத மாபெரும் அதிசயத்தைக் கண்டுகொண்டிருக்கிறோம் நாம். இந்திய வேகப்பந்து வீச்சாளர்கள் உலகின் ஒவ்வொரு மூலையிலும் விக்கெட் வேட்டை நடத்துவதைப் பார்த்துக்கொண்டிருக்கிறோம். முந்தைய தலைமுறை பார்த்ததையே பார்ப்பவர்கள் அல்ல அதிர்ஷ்டசாலிகள். அவர்கள் காணாதவொன்றைக் கொண்டாடிக் கொண்டிருக்கும் நாம்தான் இந்திய கிரிக்கெட்டின் மிகப்பெரிய அதிர்ஷ்டசாலிகள். இந்தியா முதல்முறையாக அடுத்தடுத்த போட்டிகளில் இன்னிங்ஸ் வெற்றி பெற்றிருக்கிறது. இந்திய மண்ணில் தென்னாபிரிக்காவையோ வங்கதேசத்தையோ சுழல் பந்துவீச்சாளர்கள் புரட்டியெடுப்பது பெரிய விடயமில்லை. ஆனால், இச்சாதனையை நிகழ்த்தக் காரணமாக இருப்பவர்கள் நம் வேகப்பந்துவீச்சாளர்கள். அதுவும் உலகத்தின் பார்வை பும்ரா மீதிருக்க, அவரில்லாமலேயே இதை நிகழ்த்திக் காட்டியிருக்கிறது இந்திய பேஸ் அட்டாக்!

பும்ரா, புவி, இஷாந்த், ஷமி, உமேஷ் - உலகின் மிகச்சிறந்த பந்துவீச்சுக் கூட்டணியின் வரிசையில் இந்தப் பெயர்களும் இப்போது இடம் பெற்றிருக்கின்றன. தென்னாபிரிக்கா, இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, வெஸ்ட் இண்டீஸ் என இதுவரை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த களங்களிலெல்லாம் வாணவேடிக்கை காட்டியிருக்கின்றன இந்த வேகப் புயல்கள். அதையெல்லாம் தாண்டி, சுழற்பந்துவீச்சாளர்கள் மட்டுமே ஆட்சி செய்துகொண்டிருந்த இந்திய ஆடுகளங்களிலும் அட்டகாசமான பர்ஃபாமன்ஸை வெளிப்படுத்தியுள்ளனர். உலக டெஸ்ட் தொடர் நடக்கவிருக்கும் இச்சூழலில், விளையாடிய ஏழு போட்டிகளிலும்



வெற்றிபெற்று 360 புள்ளிகளுடன் இந்தியா முதலிடத்தில் இருக்கிறது. இந்தியாவுக்கான அடுத்த போட்டி நடக்க இன்னும் சில மாதங்கள் இருக்கின்றன என்பதால், டெஸ்ட் சம்பியன்ஷிப்பில் இந்தியாவை எட்டாக் கனியாக மற்ற அணிகள் பார்ப்பதற்கு இந்த வேகப்பந்து வீச்சாளர்களின் பங்கு அளப்பரியது. வங்கதேசத்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில், நம் பந்துவீச்சாளர்கள் வீழ்த்திய 38 விக்கெட்டுகளில் 33 விக்கெட்டுகள் வேகப் பந்துவீச்சாளர்கள் வீழ்த்தியவை! கொல்கத்தா




டெஸ்டில் வீழ்த்தப்பட்ட 19 விக்கெட்டுகளுமே இஷாந்த் அண்ட் கோ சாதித்தவை!

பவுன்சர், யார்க்கர், இன் ஸ்விங், அவுட் ஸ்விங், ரிவர்ஸ் ஸ்விங் போன்ற கிளாசிக் டெக்னிக்குகளோடு நக்கில் பால், லெக் கட்டர் போன்ற மாடர்ன் கிரிக்கெட்டின் அஸ்திரங்களையும் கலந்து மிரட்டிக்கொண்டிருக்கிறது இந்தக் கூட்டணி. எந்த மைதானத்திலும் தங்களால் தாக்கத்தை ஏற்படுத்த முடியும் என்பதையும் நிரூபித்திருக்கிறார்கள். டெஸ்ட், ஒருநாள், இருபது-20 என அனைத்து போர்மேட்களிலும் மட்ச் வின்னர்களாக ஜொலிக்க முடியும் என்பதையும் நிரூபித்திருக்கிறார்கள். தங்களின் பலம் என்ன, பலவீனம் என்ன என்பதைத் தெளிவாக உணர்ந்து அதற்கேற்ப யுக்திகள் அமைத்துச் செயற்படுகிறார்கள்.

ஆடுகளத்தின் தன்மை, பந்தின் தன்மை, பட்ஸ்மனின் போர்ம் மட்டுமல்லாமல், தட்பவெட்ப நிலை, காற்று போன்ற விடயங்களையும் சரியாகப் புரிந்துகொண்டிருக்கிறார்கள். உண்மையிலேயே முழுமையான வீரர்களாக உருவெடுத்திருக்கிறார்கள் நம் பந்துவீச்சாளர்கள்.

சில ஆண்டுகளுக்கு முன்பு வரை இந்திய ரசிகர்களுக்குக் கேலிப் பொருள்களாக மட்டுமே இருந்த இஷாந்தும் உமேஷும் இப்போது மட்ச் வின்னர்கள் ஆகியிருப்பதுதான் இந்திய கிரிக்கெட்டின் மிகப்பெரிய வெற்றி. இதுவரை இந்திய கிரிக்கெட் கண்டிராத ஒரு பந்துவீச்சாளராக பும்ரா உருவெடுத்த அதே நேரத்தில், சீனியர் பந்து வீச்சாளர்களும் எழுச்சி கண்டிருப்பது ஒரு மாபெரும் மாற்றத்துக்குக் காரணமாகியிருக்கிறது.

கடந்த வாரம் நியூசிலாந்து, இங்கிலாந்து அணிகள், மவுன்ட் மாங்குனி மைதானத்தில் டெஸ்ட் போட்டியில் விளையாடிக் கொண்டிருந்தன. நியூசிலாந்து மிடில் ஓடரை வெளியேற்ற முடியாமல் இங்கிலாந்து பௌலர்கள் தடுமாறிக் கொண்டிருக்க, ஒரு இங்கிலாந்து ரசிகர் இப்படி கமென்ட் செய்திருந்தார்: "ஆடுகளத்தைக் குறை சொல்லி எந்தப் பயனும் இல்லை.

இதே ஆடுகளத்தில் அவுஸ்திரேலியா அல்லது இந்திய வேகப் பந்து வீச்சாளர்கள் எளிதாக 20 விக்கெட்டுகளை வீழ்த்திவிடுவார்கள்" என்று குறிப்பிட்டிருந்தார். இப்படி மொத்த உலகத்தின் மதிப்பையும் நம் வேகக் கூட்டணி சம்பாதித்திருப்பது என்பது நம் முந்தைய தலைமுறைகள் எதிர்பார்க்காத ஒன்று!

முன்பெல்லாம் ஜாகீர்கானுக்குக் காயம் ஏற்பட்டுவிட்டால் அவ்வளவுதான். வேகப்பந்து வீச்சே இல்லாததுபோல்தான் தோன்றும். ஒரு தொடரின் ஒவ்வொரு போட்டியிலும் ஒவ்வொரு பந்துவீச்சாளர் மாறிக்கொண்டே இருப்பார். ஆனால் இப்போது அப்படி எந்த பயமும் இல்லை. யாருக்கேனும் காயம் ஏற்பட்டால், அது அணிக்குச் சிக்கல் அளிக்காத வகையில் இன்னொருவர் அந்த இடத்தைக் கச்சிதமாக நிரப்பிக்கொண்டிருக்கிறார். புவிக்குக் காயமா, ஷமி வந்து யார்க்கர்களால் மிரட்டுகிறார்.

பும்ராவுக்குக் காயமென்றால், அவுட் ஸ்விங்கர்களால் அட்டகாசம் செய்கிறார் உமேஷ். கால்பந்து அணிகளைப்போல், 'ரொட்டேஷன்' செய்யுமளவிற்கு பலமாகியிருக்கிறது இந்தியாவின் வேகப் பந்துவீச்சு.

இவர்களின் எழுச்சி இதோடு நிற்காமல், நவ்தீப் சைனி, தீபக் சஹார் என அடுத்த தலைமுறைக்கும் மிகப்பெரிய நம்பிக்கையை விதைத்திருக்கிறது. இத்தனை ஆண்டுகளும் பட்டையே சுழற்றிக் கொண்டிருந்த இந்தியச் சிறுவர்கள் இப்போது ஒவ்வொரு பௌலரையும் பிரதி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்திய வேகப் பந்துவீச்சாளர்கள் ரோல் மொடல்கள் ஆகியிருக்கிறார்கள்! இதைப் பார்க்கும் அதிர்ஷ்டம் முந்தைய தலைமுறைகளுக்குக் கனவிலும் கிடைக்கவில்லை.

# வேகம்



ஒரு கிராமத்தில் வங்கியொன்று இருந்தது. அதன் மேலாளரிடம் மனேஜர் அந்த கிராமத்தை சேர்ந்த விவசாயி ஒருவர் லோன் கேட்டு வந்திருந்தார்.

மேலாளர் கடன் விண்ணப்பத்தை எடுத்து கையில் வைத்துக் கொண்டு கேட்டார்.

"எதுக்காகப் பணம் வேணும்?" அந்த விவசாயிபதில்சொன்னார் "கொஞ்சம் மாடு வாங்கி பால் வியாபாரம் பண்ணலாம்னு இருக்கேன்!".

வங்கி மேலாளர் அந்த விவசாயிடம், "அடமானமாய் என்ன தருவீங்க.. ?" என்றார்.

விவசாயி சிறிது குழப்பத்துடன் கேட்டார். "அடமானம்னா என்ன..?".

"நீங்க கேக்கற பணத்தோட மதிப்புக்கு சம்மாக ஏதாவது சொத்து கொடுத்தால் தான் வங்கி பணம் கொடுக்கும்.

அதைத்தான் அடமானம்னு சொல்லுவோம்!" என்று மேலாளர் விளக்கம் சொன்னார்.

விவசாயி சொன்னார்.

"கொஞ்சம் நிலம் இருக்கு ரெண்டு எருமை இருக்கு... எது வேணுமோ அதை நீங்க எடுத்துக்கலாம்!". மேலாளர் இன்னும் கொஞ்ச நேரம் பேசிவிட்டு இறுதியாக நிலத்தை அடமானமாக வைத்துக் கொண்டு அவருக்குப் பணத்தை லோனாகத்தர ஏற்பாடு செய்தார்.

சில மாதங்கள் கழிந்தது. அந்த விவசாயி மீண்டும் வங்கியிற்கு வந்தார். தன்னுடைய கணக்குப் புத்தகங்களை எடுக்கச் சொன்னார்.

பைசா பாக்கியில்லாமல் கடன், வட்டி எல்லாவற்றையும் கணக்குப் போட்டு முழு பணத்தையும் கட்டினார்.

வங்கி மேலாளர் ஆச்சரியத்துடன் கேட்டார். "கடன் எல்லாவற்றையும் கட்டியாகிவிட்டது. இலாபம் கிடைத்ததா?... அந்த விவசாயி உற்சாகமாய் பதில் சொன்னார்.

"லாபம் இல்லாமலா? அது கிடைச்சது நிறைய!". மேலாளர் ஆர்வத்துடன் கேட்டார். "அதை எல்லாம் என்ன செய்தீர்கள்..?".

"என்ன செய்யறது பொட்டில போட்டு வச்சிருக்கேன்!". மேலாளர் யோசித்தார்.

'இந்த மாச டார்கெட்க்கு சரியான ஆள் கிடைச்சுட்டான்!' என்று நினைத்தபடியே, "ஏன் நீங்க பணத்தை எங்க வங்கியில டெபாசிட் பண்ணலாமே?" என்றார். விவசாயி கேட்டார். "டெபாசிட்னா என்ன?"

மேலாளர் விளக்கமாய் பதில் சொன்னார், "நீங்க எங்க வங்கியில் உங்க பேர்ல ஒரு கணக்கை ஆரம்பிச்சு அதில பணத்தை போட்டு வைங்க, உங்களுக்கு எப்ப எப்ப பணம் தேவையோ அப்பலாம் நீங்க பணத்தை எடுத்துக்கலாம்!". என்று விளக்கமாக சொன்னார்.

கேட்டுக் கொண்டிருந்த அந்த விவசாயி சற்றே சாய்ந்து உட்கார்ந்தபடியே திருப்பி கேட்டார். "அடமானமாய் என்ன தருவீங்க?".

# தன்னம்பிக்கை

200 பேர்கள் கூடியிருந்த அரங்கத்தில் ஒரு பேச்சாளர் ஒரு 500 ரூபாய் நோட்டைக் காட்டி "யாருக்கு இது பிடிக்கும்?" எனக் கேட்டார். கூடியிருந்த அனைவரும் தமக்குப் பிடிக்குமென கையைத் தூக்கினர்.


பேச்சாளர் "உங்களில் ஒருவருக்கு இந்த 500 ரூபாயைத் தருகிறேன். ஆனால், அதற்கு முன் எனச்சொல்லி அந்த 500 ரூபாயைக் கசக்கி சுருட்டினார். பிறகு அதை சரி செய்து "இப்போதும் இதன் மீது உங்களுக்கு இன்னும் விருப்பம் இருக்கிறதா?" என்றார்கள்.

அனைவரும் கையைத் தூக்கினர். அவர் அந்த ரூபாய் நோட்டை தரையில் போட்டு காலால் நசுக்கி அந்த அழுக்கான நோட்டை காட்டி "இன்னும் இதன் மேல் உங்களுக்கு விருப்பம் இருக்கிறதா? என்றார். அனைவரும் இப்போதும் கைகளைத் தூக்கினர்.

அவர் தொடர்ந்தார் "கேவலம் ஒரு 500 ரூபாய்தாள் பல முறை கசங்கியும், மிதிப்பட்டும், அழுக்கடைந்தும் அதன் மதிப்பை இழக்கவில்லை. ஆனால் மனிதர்களாகிய நாம் அவமானப் படும் போதும், தோல்விகளை சந்திக்கும் போதும் மனமுடைந்து போய் நம்மை நாமே தாழ்த்திக் கொள்கிறோம்.

நம்முடைய மதிப்பு என்றைக்கும் குறைவதில்லை. நீங்கள் தனித்துவமானவர். இவ்வுலகில் உள்ள ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு தனித் தன்மை இருக்கும். அதன் மதிப்பு என்றைக்கும் குறைவதில்லை. ஆகையால் தன்னம்பிக்கையை இழக்காமல் வாழுங்கள்.

# KFC



5 வயதில் தந்தையை இழந்தார். 16 வயதில் பாடசாலை இடைவிலகினார். 17 வயதில் ஏற்கனவே செய்த நான்கு வேலைகளையும் இழந்தார்.

18 வயதில் திருமணம் முடித்தார். 18இலிருந்து 22 வரை வீதி ஒப்பந்தக்காரராக தோல்வியடைந்தார்.

இராணுவத்தில் இணைந்து இடை நிறுத்தப்பட்டார். சட்டக் கல்லூரிக்கு விண்ணப்பித்து நிராகரிக்கப்பட்டார்.

காப்புறுதி விற்பனையாளராகவும் மீண்டும் தோல்வி துரத்தியது. 19 வயதில் தந்தையர்கினார். 20 வயதில் மனைவி இவரைப் பிரிந்து பெண் குழந்தையுடன் சென்றுவிட்டார்.

சிறு உணவகம் ஒன்றில் சமையலாளராகவும் பாத்திரம் கழுவுபவராகவும்வேலை செய்தார்.

சொந்த மகளைக் கடத்துவதன் மூலம் மனைவி மீண்டும் தன்னிடம் வருவார் என எண்ணி முயற்சிசெய்து தோல்வியடைந்தார்.

65 வயதில் ஓய்வு பெற்றார். ஓய்வூதியமாக 105$ மாத்திரமே அரசிடமிருந்து கிடைத்தது. அரசு இவ்வளவு குறைவாக தனக்கு அளித்ததை நினைத்து மனம் உடைந்து போனார். ஒன்றுமே சரியாக வரவில்லை என்று தற்கொலை முடிவுக்குச் சென்றார்.

மரம் ஒன்றின் அடியிலிருந்து தற்கொலை கடிதம் எழுதும் போது தன் வாழ்வில் தான் எதையும் சாதிக்கவில்லை என்பதை கண்டு கொள்கிறார்.

**மற்றவர்களை விட தான் எதனை சிறப்பாக செய்கிறேன் என்பதை கண்டறிந்தார். அது தான் எப்படி வறுத்த கோழி இறைச்சி சமையல் செய்வது? 87$ காசோலை கடனாக வாங்கி வீடு வீடாக சென்று தனது கென்டகி நண்பர்களுக்கு விற்பனை செய்தார்.**

65வயதில் தற்கொலைக்கு முயன்ற கொலனல் சாண்டர்ஸ் 88ஆவது வயதில் K.F.C பேரரசின் ஸ்தாபகர் பில்லியனராக....!

கதையின் கருத்து -

இப்போதும் காலம் போய்விடவில்லை. உங்களது பார்வை தான் முக்கியமான விடயம். எப்போதும் நீங்கள் விட்டுக்கொடுக்காமல் முயன்று கொண்டு இருக்க வேண்டும்.

உங்களை எது சாதனையாளனாக்குமோ அதை தெரிவு செய்யுங்கள். அதன்வழி செல்லுங்கள்.

அதில் உங்கள் தனித்துவத்தை வெளிப்படுத்துங்கள். புகழுடைய வலிமையடைய சாதிப்பதற்கு வயது கிடையாது.

விடாமுயற்சியுடன் முயலும் நபர்களுக்குப் பகிர்ந்து அவர்களை ஊக்கப்படுத்துங்கள். நீங்களும் சாதியுங்கள்.

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1910

Search for people, places and things

### கவின்

**மனிதன் உணவின்றி 40 நாட்களும் நீரின்றி 3 நாட்களும் காற்றின்றி 3 நிமிடமும் உயிர் வாழலாம். ஆனால் நம்பிக்கையின்றி 3 நொடி கூட வாழ இயலாது**





### ஜானகி

**யாரையும் முக்கியமாக நினைக்காததும் யாருக்கும் முக்கியமில்லாதவர்களாக இருப்பதும் தான் வாழ்வில் பெரும் நிம்மதி தரும்**



### விமல்

**வாழ்வின் ஒவ்வொரு முறையும் உங்களைத் தூக்கி எறிந்தவர்களுக்கு நன்றி கூறுங்கள். ஏனெனில் அவர்கள் தான் உங்களை அடுத்த கட்டத்திற்கு வளர்த்து விடுகின்றனர்**



### குமுதா

**வாழ்க்கை ஒரு விசித்திரமான பரீட்சை ஒவ்வொரு விதமான கேள்விகள் அவரவர் கொடுக்கும் விடைகளை பொறுத்ததே வாழ்க்கை...**




### கமல்

**ஒன்றை அடைய வேண்டும் என்று நினைத்து விட்டால் இறுதிவரை போராடு... விளைவுகளையோ அதில் ஏற்படும் தோல்விகளையோ பற்றிக் கவலைப்படாதே!**



### அஸ்வின்

**பொண்டாட்டி என்னைத் திட்டும்போது எப்பவும் உங்க அம்மா பேச்சைத்தான் கேட்பீர்களா...? என் மகனைத் திட்டும் போது அம்மா பேச்சைக் கேட்கவே மாட்டியா?**




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 204

# தாய்ப்பாலூட்டும் தாய்மார் கவனத்திற்கொள்ள வேண்டியவை



### • தாய்ப்பால்

* தாய்ப்பாலானது குழந்தையின் வளர்ச்சிக்குத் தேவையான சகல ஊட்டச்சத்துக்களும் சரிவிகித அளவில் நிரம்பிய ஆகாரமாகும்.
* தாய்ப்பாலானது நோயெதிர்ப்புசக்தி மிக்கது. ஆரம்பத்தில் சுரக்கும் சீம்பால் (Colostrum) பலவகையான நோய்த் தாக்கங்களிலிருந்து குழந்தைக்கு பாதுகாப்பளிக்கும்.
* தாய்ப்பாலானது இலகுவில் சமிபாடடையக்கூடிய பதார்த்தங்கள் நிரம்பியது.
* இலவசமாகக் கிடைக்கக்கூடிய பணச்செலவற்ற ஒன்றாகும்.

### • தாய்ப்பாலூட்டும் கால அளவு

➤ குழந்தை பிறந்து அரைமணித்தியாலத்திற்குள் தாய்ப்பாலூட்ட ஆரம்பிக்க வேண்டும்.

➤ குழந்தை பிறந்ததிலிருந்து ஆறுமாத காலம் வரை தனித்தாய்ப்பால் மட்டுமே ஊட்ட வேண்டும்.

➤ தாய்ப்பால் தவிர்ந்த வேறு எந்த ஆகாரமும் (நீர். கற்கண்டு. நீர். கொத்தமல்லி நீர் போன்றன) குழந்தையின் முதல் ஆறுமாத காலப் பகுதிக்குள் கொடுக்கக் கூடாது.

➤ தாய்ப்பாலூட்டலை குழந்தையின் இரண்டு வயது வரை தொடரலாம்.

➤ குழந்தை பிறந்து 06 மாத காலப்பகுதிக்குப் பின் உப உணவு ஊட்ட ஆரம்பிக்க வேண்டும்.

➤ குழந்தைக்கு தாய்ப்பாலூட்டும் போது ஒரு மார்பகத்தால் 20 தொடக்கம் 30 நிமிடங்கள் வரை கொடுக்க வேண்டும்.

➤ இரண்டு மணித்தியாலங்களுக்கு ஒரு தடவை தாய்ப்பாலூட்ட வேண்டும். குறிப்பாக நாள் ஒன்றிற்கு 08 தொடக்கம் 12 தடவைகள் தாய்ப்பாலூட்ட வேண்டும்.



➤ ஒரு தடவை ஒரு மார்பகத்தால் தாய்ப்பால் ஊட்ட வேண்டும். அடுத்த தடவை மற்றைய மார்பகத்தால் தாய்ப்பாலூட்ட வேண்டும்.

➤ ஒரு தடவை தாய்ப்பால் ஊட்டும் போது இரண்டு மார்பகங்களாலும் மாற்றி மாற்றி தாய்ப்பாலூட்டல் பயனற்றது.

ஏனெனில் பாலூட்டும் போது ஆரம்பத்தில் நீர்த்தன்மையான பால் சிறிது நேரத்திற்கு வரும் பின்னர்தான் கொழுப்பு நிறைந்த பால் வரும். இரண்டு மார்பகங்களினாலும் மாற்றி மாற்றி கொடுக்கையில் நீர்த்தன்மை மிக்க பால் மட்டுமே குழந்தைக்கு கிடைக்கும். மாறாக கொழுப்புச்சத்து செறிந்த பால் கிடைக்காது. கொழுப்புச்செறிந்த பால் தான் குழந்தையின் வளர்ச்சிக்கும் நிறை அதிகரிப்புக்கும் காரணமாகும்.

### • தாய்ப்பாலூட்ட முன் தாய் கவனிக்க வேண்டியவை

➤ தாய் சுத்தமான பாலூட்டக்கூடிய சௌகரியமான ஆடை அணிந்திருத்தல் வேண்டும்.

➤ மார்பகங்கள், கமக்கட்டுப்பகுதியை ஒவ்வொரு தடவை பாலூட்ட முன்பும் சுத்தமாகக் கழுவி வியர்வை மணமற்று வைத்திருத்தல் வேண்டும்.

➤ பாலூட்டும் தாய் போசாக்கு மிக்க உணவு உள்ளெடுத்தல் வேண்டும்


➤ போதியளவு நீராகாரம் தாய் உள்ளெடுத்தல் வேண்டும்

➤ அமைதியான தனிமையான சூழலை தெரிவு செய்தல் சௌகரியமான தாயப்பாலூட்டலுக்கு வழிவகுக்கும்.

➤ தமது வசதிக்கேற்ற ஓர் சௌகரியமான பாலூட்டும் நிலையை (உட்கார்ந்து / படுத்திருந்து) தாய் தெரிவு செய்தல் வேண்டும்

### • தாய்ப்பாலூட்டும் போது கவனிக்க வேண்டியவை

* தாயும் சேயும் சௌகரியமான நிலையில் இருத்தல்
* தேவை ஏற்படின் தலையணையின் உதவியுடன் சௌகரியத்தை ஏற்படுத்திக் கொள்ளலாம்.
* குழந்தையின் வாய் அகலத்திறந்திருத்தல் வேண்டும்.



* குழந்தையின் வாய் மார்பகத்துடன் தொடுகையில் இருக்கையில் குழந்தையின் கீழ் உதடு வெளி நோக்கித் திரும்பி இருத்தல் வேண்டும்.
* குழந்தையின் நாடி தாயின் மார்பகத்தை அழுத்தியவண்ணம் இருத்தல் வேண்டும்
* முலைக்காம்பு மற்றும் அதைச்சுற்றியுள்ள கருமை நிறமான பகுதியின் (ஏரியோலா) பெரும்பகுதி குழந்தையின் வாயினுள் இருத்தல் வேண்டும்.
* மேற்கூறிய நிலையில் பாலூட்டுவதனூடாக குழந்தை சௌகரியமாகத் தாய்ப்பாலை பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருப்பதுடன் தாயின் மார்பகத்தில் வலி. வெடிப்பு போன்றவை ஏற்படாது.

### • தாய்ப்பால் போதியளவு குழந்தைக்கு கிடைக்கிறது என்பதை எவ்வாறு உறுதிப்படுத்திக் கொள்ளலாம்

* குழந்தை தாய்ப்பால் அருந்திய பின் அழுகையை நிறுத்தல்
* தாயாரின் மார்பில் காணப்பட்ட கனத்த தன்மை குழந்தைக்குப் பாலூட்டியபின் அற்றுப் போதல்.(பாரமற்றது போல் உணரல்)
* ஒரு நாளைக்கு குழந்தை குறைந்தது 06 தடவைகளாவது சிறுநீர் கழித்தல்
* மாதாந்தம் குழந்தையின் நிறையை அளவிடுகையில் சீரான நிறை அதிகரிப்புக் காணப்படுதல்.

திருமதி.குயிலினி சுரேஷ்
தாதிய உத்தியோகத்தர்,
போதனா
வைத்தியசாலை
யாழ்ப்பாணம்.



பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (076 059 4937) என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்